இந்திய அரசு

பட்ஜெட் 2021-22

# மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் உரை

பிப்ரவரி 1, 2021

பொருளடக்கம் பகுதி - A

பக்கம் எண்


- அறிமுகம்
- சுகாதாரம் மற்றும் நலவாழ்வு
- இயல்புநிலை மற்றும் நிதி மூலதனம் மற்றும் கட்டமைப்பு
- வளரத் துடிக்கும் இந்தியாவுக்கான பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி
- மனிதவள முதலீட்டுக்குப் புத்துயிரூட்டுதல்
- புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி & மேம்பாடு
- குறைந்தபட்ச அரசு தலையீடு, அதிகபட்ச நிர்வாகம்
- நிதி நிலைமை

பகுதி B

நேரடி வரி முன்மொழிவுகள் 28

- மூத்த குடிமக்களுக்கு நிவாரணம்
- வருமான வரி செயல்பாடுகளுக்கு கால வரம்பு குறைப்பு
- சர்ச்சைகள் தீர்வு கமிட்டி உருவாக்கம்
- நேரில் செல்லாமல் வருமானவரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம்
- வெளிநாடுவாழ் இந்தியர்
- தணிக்கையில் இருந்து விலக்கு
- ஈவுத் தொகைக்கு சலுகை
- கட்டமைப்புத் துறைக்கு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல்
- குறைந்த விலையில் வீடுகள்/ வாடகை வீட்டு வசதி
- IFSC-க்கு வரி ஊக்குவிப்புகள்

- வரி கணக்குகளை முன்னதாக தாக்கல் செய்தல்
- சிறிய அறக்கட்டளைகளுக்கு சலுகை
- தொழிலாளர் நலன்

மறைமுக வரி முன்மொழிவுகள்

- சரக்கு மற்றும் சேவை வரி
- சுங்க வரி திருத்தி அமைப்பு
- மின்னணு மற்றும் செல்போன் தொழில் துறை
- இரும்பு மற்றும் எஃகு
- ஜவுளி
- ரசாயனங்கள்
- தங்கம் மற்றும் வெள்ளி
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி
- மூலதன சாதனம்
- சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறைப் பொருட்கள்
- வேளாண் பொருட்கள்

பிற்சேர்க்கைகள்

உரையின் பகுதி A-வின் பிற்சேர்க்கைகள்

- சுகாதாரம் மற்றும் நலவாழ்வு - செலவினம்
- உயர் சிறப்புத் திட்டங்கள்: சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள்
- பங்கு விற்பனை/ முக்கியத்துவ பங்கு விற்பனை கொள்கை சிறப்பம்சங்கள்
- குறைந்தபட்ச ஆதரவு விலையில் வேளாண் விளைபொருட்கள் கொள்முதல்
- தேசிய கல்விக் கொள்கையின் அங்கமாக கல்வியில் முன்முயற்சிகள்
- கூடுதல் பட்ஜெட் ஆதாரவளங்கள் குறித்த அறிக்கை

(முழுமையான அரசு சேவை பத்திரங்கள், தேசிய சமூக பாதுகாப்பு நிதியக் கடன் மற்றும் இதர ஆதார வளங்கள்)

உரையின் பகுதி B-யின் பிற்சேர்க்கைகள்

நேரடி வரி, மறைமுக வரி

பட்ஜெட் 2021-22

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் உரை

பிப்ரவரி 1, 2021

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

2021-22 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நான் சமர்ப்பிக்கிறேன்.

அறிமுகம்

1. மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, முன் எப்போதும் இல்லாத சூழ்நிலையில் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. நாட்டில், அல்லது நாட்டின் ஒரு பகுதியில் பேரழிவுகள் நிகழ்வதை நாம் அறிந்திருப்போம். ஆனால் 2020 ஆம் ஆண்டு முழுக்க கொவிட்-19 காரணமாக ஏற்பட்ட பாதிப்பு தனித்துவமானது.

2. நான் 2020-21 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தபோது, ஏற்கெனவே பின்னடைவை நோக்கி சென்று கொண்டிருந்த உலகப் பொருளாதாரம், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு பாதிப்பை சந்திக்கும் என்று நாம் கற்பனை செய்திருக்க மாட்டோம்.

3. மற்ற நாடுகளைப் போல நமது மக்களும் சுகாதாரப் பிரச்சினையால் சொந்த பந்தங்களை இழந்து, துன்பங்களுக்கு ஆளாவார்கள் என்றும் நாம் நினைத்துப் பார்த்திருக்க மாட்டோம்.

4. முடக்கநிலை அமல் செய்யாமல் இருந்தால் பாதிப்பு அதிகமாக இருந்திருக்கும். மூன்று வார காலத்துக்கு முடக்கநிலை அறிவிக்கப்பட்ட 48 மணி நேரத்தில், ரூ.2.76 லட்சம் கோடி மதிப்பில் பிரதமரின் கரீப் கல்யாண் திட்டத்தை பிரதமர் அறிவித்தார். 800 மில்லியன் மக்களுக்கு இலவச உணவு தானியம் வழங்குதல், 80 மில்லியன் குடும்பங்களுக்கு சில மாதங்களுக்கு இலவசமாக சமையல் எரிவாயு அளித்தல், 400 மில்லியனுக்கும் அதிகமான விவசாயிகள், பெண்கள், முதியவர்கள், ஏழைகள் மற்றும் உதவி தேவைப்படும்

நிலையில் உள்ளவர்களுக்கு நேரடியாக பண உதவி ஆகியவை இதன் மூலம் அளிக்கப்பட்டன.

5. பெரும்பாலான குடிமக்கள் வீடுகளில் முடங்கியிருந்த நிலையில், பால், காய்கறி மற்றும் பழங்கள் வழங்கலும், சுகாதாரம் மற்றும் தூய்மைப் பணியாளர்கள், லாரி ஓட்டுநர்கள், ரயில்வேக்கள், பொதுப் போக்குவரத்துத் தொழிலாளர்கள், வங்கி அலுவலர்கள், மின்துறை ஊழியர்கள், நமது உணவு வழங்கும் அலுவலர்கள், காவல் துறையினர், தீயணைப்பு வீரர்கள், ஆயுதப் படையினர் ஆகியோரின் பணிகள் வழக்கம் போல இருந்தன. ஆனால், அவர்களுக்கு வைரஸ் பாதிப்பு என்ற அச்சமும் இருந்தது. இதை நாம் அறிந்திருக்கிறோம். நெருக்கடியான மாதங்களில், தேசத்தின் அடிப்படை சேவைகளை அளிப்பதில் இந்த ஆண்களும், பெண்களும் தங்கள் கடமையை சிறப்பாக செய்தமைக்காக என் மனமார்ந்த நன்றிகளை, மாண்புக்குரிய இந்த அவையில் உள்ள அனைவரின் சார்பிலும் தெரிவிக்க விரும்புகிறேன்.

6. அவைத் தலைவர் அவர்களே, பொது நன்மைக்காக, நாடாளுமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களும், சட்டப்பேரவைகளின் உறுப்பினர்களும் தங்கள் ஊதியத்தை அளித்தனர்.

7. மே 2020-ல், தற்சார்பு இந்தியா முதற்கட்ட தொகுப்புத் திட்டத்தை அரசு அறிவித்தது. மீட்சியின் வேகத்தை ஆண்டு முழுக்க தொடர்வதற்கு, மேலும் இரண்டு தற்சார்பு இந்தியா தொகுப்புத் திட்டங்களை (ANB 2.0 மற்றும் ANB 3.0) நாம் அறிவித்தோம். இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொண்ட நடவடிக்கைகள் உள்பட அனைத்து தற்சார்பு இந்தியா தொகுப்புத் திட்டங்களுக்கும் சேர்த்து சுமார் ரூ.27.1 லட்சம் கோடி அளவுக்கு திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி.) 13 சதவீதத்துக்கும் அதிகம்.

8. அரசாங்கத்தின் பொறுப்பு என்ற வகையில், நிலைமையை நாம் கண்காணித்து, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுத்தோம். பிரதமர் தலைமையிலான இந்த அரசு, நம் சமூகத்தில் அதிக பாதிப்புக்கு ஆளாகக் கூடிய - பரம ஏழைகள், தலித்துகள், பழங்குடியினர், முதியவர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் நம் குழந்தைகளுக்கு - தேவையான வசதிகளை அளிக்க ஆதார வளங்களை அளித்தது. பிரதமரின் கரீப் கல்யாண் திட்டமும், மூன்று தற்சார்பு இந்தியா தொகுப்புத் திட்டங்களும், அதன் பிறகு வெளியிட்ட அறிவிப்புகளும், 5 மினி பட்ஜெட்கள் போல அமைந்தன.

9. நமது கட்டமைப்பு சீர்திருத்தங்களின் வேகத்தை தற்சார்பு இந்தியா தொகுப்புத் திட்டம் வேகப்படுத்தியது. சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான (எம்.எஸ்.எம்.இ.) வரையறைகளை மாற்றியது, சுரங்கத் தொழிலை வணிகமயமாக்கியது, வேளாண்மை மற்றும் தொழிலாளர் சீர்திருத்தங்கள், பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்குதல், ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை திட்டம், உற்பத்தி சார்ந்த ஊக்குவிப்பு திட்டங்கள் ஆகியவை இந்த காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்களாக உள்ளன. நேரில் செல்லாமல் வருமான வரி மதிப்பீடு தாக்கல் செய்தல், நேரடி மானிய பட்டுவாடா மற்றும் நிதி பங்கேற்பு போன்ற மற்ற அம்சங்களும் உள்ளன.

10. இன்றைக்கு இந்தியாவில் இரண்டு தடுப்பூசி மருந்துகள் உள்ளன. கொவிட்-19 பாதிப்புக்கு எதிராக சொந்த மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதுடன், 100 அல்லது அதற்கும் மேற்பட்ட நாடுகளின் மக்களுக்கும் மருத்துவப் பாதுகாப்பு அளிக்கத் தொடங்கியுள்ளோம். இன்னும் இரண்டு அல்லது மூன்று தடுப்பூசி மருந்துகள் விரைவில் வரவுள்ளன என்தை அறிவது கூடுதல் மகிழ்வைத் தரும்.

11. மாண்புமிகு பிரதமர், தடுப்பூசி திட்டத்தைத் தொடங்கி வைத்தபோது, நமது விஞ்ஞானிகளைப் பாராட்டி நன்றி தெரிவித்தார். அவர்களின் பலம் மற்றும் முயற்சிகளில் இருந்த உறுதி ஆகியவற்றுக்கு நாம் எப்போதும் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்.

12. இவற்றை எல்லாம் குறிப்பிட்ட நிலையில், கொவிட்-19-க்கு எதிரான நமது போராட்டம் 2021 ஆம் ஆண்டும் தொடர்கிறது என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

13. இரண்டு உலகப் போர்களுக்குப் பிறகு நடந்ததைப் போல, கொவிட் பாதிப்புக்குப் பிந்தைய காலத்தில் அரசியல், பொருளாதார, ராணுவ உறவுகள் மாறி வருகின்றன. வரலாற்றில் இந்தத் தருணம் புதிய யுகத்தின் தொடக்கமாக உள்ளது. நம்பிக்கை தரக்கூடிய நாடாக இந்தியா வளர்வதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது.

``அதிகாலையில் இருள் இருக்கும்போதே வெளிச்சத்தைக் கண்டுகொண்டு பாடும் பறவையைப் போன்றது நம்பிக்கை"

ரவீந்திரநாத் தாகூர் (Fireflies - A Collection ofAphorisms)

14. இந்த உத்வேகத்தில், கிரிக்கெட்டை நேசிக்கும் ஒரு தேசம் என்ற வகையில், ஆஸ்திரேலியாவில் இந்திய கிரிக்கெட் அணியின்

அபாரமான வெற்றியால் கிடைத்த மகிழ்ச்சியை என்னால் நினைவுபடுத்தாமல் இருக்க முடியவில்லை. நம் நாட்டு மக்கள், குறிப்பாக இளைஞர்கள், அபரிமிதமான நம்பிக்கையையும், துணிச்சலையும் செயலில் காட்டி வெற்றி பெற்றே தீர வேண்டும் என்ற அடங்காத ஆர்வத்தையும் கொண்டவர்களாக அனைத்து தகுதிகளையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை இது நமக்கு நினைவுபடுத்துகிறது.

15. இன்றைக்கு பெருந்தொற்று நோயால் உயிரிழப்போர் எண்ணிக்கை, ஒரு மில்லியனுக்கு 112 என்ற அளவிலும், நோய் பாதிப்புக்கு ஆளாவோர் எண்ணிக்கை ஒரு மில்லியனுக்கு 130 என்ற அளவிலும், உலகில் தொற்று பாதிப்பு மிகக் குறைவாக உள்ள நாடாக இந்தியா இருக்கிறது. இப்போது நாம் காணும் பொருளாதார மீட்சிக்கு இதுதான் அடிப்படையாக அமைந்தது.

16. புதிய தசாப்தத்தின் முதலாவது நிதிநிலை அறிக்கையாக இது இருக்கிறது. இது டிஜிட்டல் நிதிநிலை அறிக்கையாகவும் இருக்கிறது. உங்கள் அனைவரின் ஆதரவாலும் இது சாத்தியமாகியுள்ளது.

17. இதுவரையில், மூன்று முறை மட்டுமே நிதிநிலை அறிக்கைகள், பொருளாதாரப் பின்னடைவுக்குப் பிந்தையதாக இருந்துள்ளன. அந்த நிகழ்வுகள் அனைத்துமே இந்தியாவுக்கான சூழ்நிலைகள் காரணமாக அமைந்தவை. இப்போது, வேறு பல நாடுகளுக்கு ஏற்பட்டதைப் போல, நமக்கும் உலக அளவிலான பெருந்தொற்று பாதிப்பால் ஏற்பட்டுள்ளது.

18. இவற்றைக் கூறிவிட்ட நிலையில், பொருளாதாரத்தை மீட்டுருவாக்கம் செய்வதற்குத் தேவையான வசதிகளை செய்து தர நமது அரசு முழு ஆயத்தமாக உள்ளது என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகிறேன். நமது பொருளாதாரம் மீட்சி அடைந்து, தேவைப்படும் அளவு நீடித்த வளர்ச்சியை அடைவதற்கான வேகத்தைப் பெறுவதற்கு அனைத்து வாய்ப்புகளையும் அளிப்பதாக இந்த நிதிநிலை அறிக்கை உள்ளது.

19. 2021 ஆம் ஆண்டு நமது வரலாற்றில் முக்கியமான பல மைல்கற்களைக் கொண்டிருக்கிறது. அவற்றில் சிலவற்றை நான் குறிப்பிடுகிறேன்: நாடு சுதந்திரம் பெற்றதன் 75வது ஆண்டு; இந்தியாவுடன் கோவா மாநிலம் சேர்க்கப்பட்டதன் 60வது ஆண்டு; 1971-ல் இந்திய - பாகிஸ்தான் போர் நடந்த 50வது ஆண்டு; சுதந்திர இந்தியாவின் 8வது மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆண்டாக இருக்கப் போகிறது; பிரிக்ஸ் அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா

ஏற்கும் ஆண்டாக இருக்கப் போகிறது; நமது சந்திரயான்-3 திட்டம் செயல்படுத்தப்படும் ஆண்டாக இருக்கப் போகிறது; ஹரித்வார் மகாகும்பாபிஷேக ஆண்டாக உள்ளது.

20. மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் பகுதி A-வை நான் தொடங்குவதற்கு முன்னதாக, நெருக்கடியான நேரங்களில் மக்கள் ஒன்று சேர்ந்து செயல்படக் கூடிய நம்முடையதைப் போன்ற நாட்டில், தனிமைப்படுத்தலும், இடைவெளி கடைபிடித்தலும் வெல்ல முடியாத சவால்களை எந்த அளவுக்கு உருவாக்கின என்பதை குறிப்பிட நான் சில நிமிடங்களை எடுத்துக் கொள்கிறேன். பல வழிகளில் அது நமக்கு இடையூறாக இருந்தது. நம் அனைவரின் உடல் சார்ந்த மற்றும் மன ஆரோக்கியத்துக்கு கடும் பிரச்சினைகளை ஏற்படுத்திய ஆண்டில், மறுக்க முடியாத அளவுக்கு மக்கள் காட்டிய உறுதிப்பாட்டுக்காக, ஒவ்வொரு குடிமக்களுக்கும் நான் தலைவணங்குகிறேன்.

பகுதி A

21. பகுதி A-வில் தற்சார்பு இந்தியாவுக்கான தொலைநோக்கு பற்றி தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

22. தற்சார்பு இந்தியா என்பது புதிய சிந்தனை கிடையாது. பழங்கால இந்தியா பெருமளவுக்கு தற்சார்பு கொண்டதாக இருந்துள்ளது. அதேசமயத்தில் உலகின் வர்த்தக மையமாகவும் இருந்துள்ளது.

23. தங்களுடைய திறன்களில் முழு நம்பிக்கை கொண்டுள்ள 130 கோடி இந்தியர்களின் எண்ணங்களின் வெளிப்பாடுதான் தற்சார்பு இந்தியா.

24. ஜி-20 மற்றும் பிரிக்ஸ் போன்ற சர்வதேச அமைப்புகளில் நாம் ஏற்கெனவே அங்கம் வகிக்கிறோம். இந்தியாவின் முயற்சிகள் காரணமாக, பேரழிவைத் தாங்கும் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான கூட்டமைப்பு, சர்வதேச சூரியசக்தி மின் உற்பத்தி கூட்டமைப்பு ஆகியவை சாத்தியமாகியுள்ளன.

25. விவசாயிகளின் வருவாயை இரு மடங்காக உயர்த்துவது, பலமான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது, ஆரோக்கியமான இந்தியா, நல்ல நிர்வாகம், இளைஞர்களுக்கான வாய்ப்புகள், அனைவருக்கும் கல்வி, மகளிருக்கு அதிகாரம் அளித்தல், பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி உள்ளிட்ட அம்சங்களுடன் தேசத்துக்கு முதலிடம் தரும் கடப்பாட்டை மேலும் வலுப்படுத்துவதாக பகுதி A-வின் திட்டங்கள் இருக்கும்.

26. மேலும், 2015-16 நிதிநிலை அறிக்கையில் நாங்கள் அறிவித்த 13 வாக்குறுதிகளின் அமலாக்கத்தை வேகப்படுத்துவதற்கான பாதை வகுப்பதாகவும் இது இருக்கும். நாடு சுதந்திரம் பெற்றதன் 75வது ஆண்டில், அம்ருத் மகோத்சவம் 2022 காலகட்டத்தில் இவை நிறைவுபெறும். தற்சார்பு இந்தியா என்ற இந்த தொலைநோக்குத் திட்டத்துடன் இயைந்ததாகவும் அவை உள்ளன.

27. 2021-22 நிதிநிலை திட்டங்கள் ஆறு தூண்களின் மீது உருவாக்கப்பட்டுள்ளன.

i. சுகாதாரம் மற்றும் நலவாழ்வு

ii. இயல்புநிலை மற்றும் நிதி மூலதனம் மற்றும் கட்டமைப்பு

iii. வளரத் துடிக்கும் இந்தியாவுக்கான பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி

iv. மனிதவள முதலீட்டுக்குப் புத்துயிரூட்டுதல்

v. புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி & மேம்பாடு

vi. குறைந்தபட்ச அரசு தலையீடு, அதிகபட்ச நிர்வாகம்

1. சுகாதாரம் மற்றும் நலவாழ்வு

28. இந்த நிதிநிலை அறிக்கையில் சுகாதார கட்டமைப்புத் துறை முதலீடு கணிசமாக அதிகரிக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நிறுவனங்களுக்கான தேவை அதிகரிக்கும்போது, நாம் அதிகமாக அளிக்க வேண்டும் என்பது முன்னேற்றகரமானது.

29. சுகாதாரத்துக்கு முழுமையான வசதிகள் அளிக்கும் அணுகுமுறையை கருத்தில் கொண்டு, நோய்த் தடுப்பு, குணமாக்குதல், நலவாழ்வு என்ற மூன்று அம்சங்களை பலப்படுத்துவதில் நாம் கவனம் செலுத்துகிறோம்.

**ஆரோக்கிய முறைமைகள்**

30. பிரதமரின் தற்சார்பு ஸ்வஸ்த் பாரத் யோஜ்னா என்ற மத்திய அரசு நிதியிலான ஒரு புதிய திட்டம், அடுத்த ஆறு ஆண்டுகளில் ரூ.64,180 கோடி செலவழிக்கும் வகையில் தொடங்கப்படுகிறது. ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் வசதிகளை மேம்படுத்துவது, தற்போதைய தேசிய நிறுவனங்களை பலப்படுத்துவது, புதிய நிறுவனங்களை உருவாக்குவது, புதிதாக உருவாகும் நோய்களைக் கண்டறிதல் மற்றும் குணமாக்குத் திறன்கள் ஆகியவை

இதன் மூலம் உருவாக்கப்படும். தேசிய சுகாதார இயக்கத்துடன் கூடுதலாக இத் திட்டம் அமல் செய்யப்படும். இத் திட்டத்தின் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு இருக்கும்:

a. 17.,788 ஊரக மற்றும் 11,024 நகர்ப்புற சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்களுக்கு உதவி அளித்தல்

b. அனைத்து மாவட்டங்கள் மற்றும் 11 மாநிலங்களில் 3382 ஒன்றிய பொது சுகாதார மையங்களில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகங்கள் உருவாக்குதல்

c. 602 மாவட்டங்கள் மற்றும் 12 மத்திய அரசு நிறுவனங்களில் தீவிர சிகிச்சைப் பிரிவு மருத்துவமனை பிரிவுகளை உருவாக்குதல்

d. நோய் கட்டுப்பாட்டுக்கான தேசிய மையத்தை (என்.சி.டி.சி.), அதன் 5 பிராந்திய அளவிலான மையங்களை 20 மெட்ரோபாலிட்டன் சுகாதார கண்காணிப்புப் பிரிவுகளை பலப்படுத்துதல்.

e. ஒருங்கிணைந்த சுகாதார தகவல் முனையத்தின் வசதியை அனைத்து மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களுக்கும் அளித்து, அனைத்து பொது சுகாதார ஆய்வகங்களையும் இணைத்தல்;

f. 17 புதிய பொது சுகாதார யூனிட்களை செயல்படுத்தி, தற்போதுள்ள 33 பொது சுகாதார யூனிட்களை நுழைவு முனையத்தில் பலப்படுத்துதல். அதாவது 32 விமான நிலையங்கள், 11 துறைமுகங்கள், மக்கள் கடந்து வரும் ஏழு நில எல்லைப் பகுதிகள் இதில் அடங்கும்;

g. 15 மருத்துவ எமர்ஜென்சி செயல்பாட்டு மையங்களையும், 2 நடமாடும் மருத்துவமனைகளையும் உருவாக்குதல்; மற்றும்

h. உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்துக்கு ஒன் ஹெல்த் என்ற பிராந்திய ஆராய்ச்சி தளத்தை தேசிய அளவிலான நிறுவனமாக உருவாக்குதல், 9 உயிரி-பாதுகாப்பு 3 ஆம் நிலை ஆய்வகங்கள், வைரஸ் நோய்கள் குறித்த தேசிய அளவிலான நிறுவனங்களின் கிளைகள் 4 பிராந்தியங்களில் உருவாக்கப்படும்.

**சத்தான உணவு**

31. கூடுதல் ஊட்டச்சத்து திட்டம் மற்றும் போஷான் அபியான் திட்டத்தில் சத்தான உணவு கிடைப்பது, கடைசிநிலை வரை கிடைக்கச் செய்வது, உரிய பயன்கள் கிடைக்கச் செய்வது ஆகியவை பலப்படுத்தப்படும். மிஷன் போஷான் 2.0 திட்டம் தொடங்கப்படும்.

உயர்விருப்பம் கொண்ட 112 மாவட்டங்களில், சத்துமிகுந்த உணவின் பயன்களை மேம்படுத்துவதற்கான தீவிர உத்திகள் இதில் கடைபிடிக்கப்படும்.

**எல்லோருக்கும் தண்ணீர் வழங்குதல்**

32. ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை உறுதி செய்ய தூய்மையான தண்ணீர், கழிவறை வசதி, சுத்தமான சுற்றுச்சூழல் ஆகியவை தான் முக்கியம் என்று உலக சுகாதார நிறுவனம் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறது.

33. ஜல் ஜீவன் மிஷன் (நகர்ப்புறம்) திட்டம் தொடங்கப்படும். 4,378 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், 2.86 கோடி வீடுகளுக்கு குழாய் இணைப்பு மூலம் தண்ணீர் வழங்குவது இத் திட்டத்தின் நோக்கமாக இருக்கும். 500 அம்ருத் நகரங்களில் திரவக்கழிவு அகற்றும் வசதிகளும் இத் திட்டத்தில் உருவாக்கப்படும். 5 ஆண்டு காலத்தில் இத் திட்டம் ரூ.2,87,000 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

**ஸ்வச் பாரத், ஸ்வஸ்த் பாரத்**

35. நகர்ப்புற இந்தியாவுக்கு ஸ்வச்தாவை (தூய்மையை) மேலும் அதிகரிக்க, திடக் கழிவுகள் மேலாண்மை, கழிவுநீர் சுத்திகரிப்பு, சேகரிப்பு நிலையிலேயே குப்பைகளை தரம் பிரித்து எடுத்தல், ஒருமுறை மட்டும் பயன்படுத்திவிட்டு தூக்கி வீசும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டைக் குறைத்தல், கட்டுமானம் மற்றும் இடிப்பு செயல்பாடுகளை முறைப்படுத்துவதன் மூலம் காற்று மாசு ஏற்படுதலைக் குறைத்தல், குப்பைக் கிடங்குகளில் உயிரி - சிதைப்பு முறைகளைக் கையாள்தல் போன்வற்றில் கவனம் செலுத்த நாம் உத்தேசித்துள்ளோம். நகர்ப்புற ஸ்வச்பாரத் மிஷன் 2.0 திட்டம் 2021-2026 என ஐந்தாண்டு காலத்தில் ரூ.1,41,678 கோடி செலவில் அமல்படுத்தப்படும்.

**சுத்தமான காற்று**

35. தொடர்ந்து அதிகரித்து வரும் காற்று மாசு பிரச்சினையை கையாள்வதற்கு, ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 42 நகர்ப்புற மையங்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.2,217 கோடி ஒதுக்கப்படும்.

**உடைத்து ஒதுக்கும் கொள்கை**

36. பழைய மற்றும் தகுதியற்ற வாகனங்களை படிப்படியாக உபயோகத்தில் இருந்து நீக்குவதற்காக, தாமாக முன்வந்து வாகனங்களை உடைத்து ஒதுக்குவதற்கான அளிக்கும் கொள்கையை நாம் தனிப்பட்ட முறையில் அறிவிக்கிறோம். எரிபொருள் சிக்கனமான, சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவித்து, வாகனங்களால் ஏற்படும் மாசு அளவைக் குறைக்கவும், கச்சா எண்ணெய் இறக்குமதி செலவை குறைக்கவும் இது ஊக்கம் தரும். தனிநபர் உபயோகத்துக்கான வாகனங்கள் 20 ஆண்டு பழையதாக இருந்தால், வணிக பயன்பாட்டில் உள்ள வாகனங்கள் 15 ஆண்டு பழையதாக இருந்தால் தானியங்கி தகுதிகாண் மையங்களில், தகுதி பரிசோதனை நடத்தப்படும். இத் திட்டம் குறித்த விவரங்களை இந்த அமைச்சகம் தனியாக வெளியிடும்.

## தடுப்பு மருந்துகள்

37. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட நியூமோகோக்கல் என்ற தடுப்பு மருந்து இப்போது 5 மாநிலங்களில் மட்டும் அளிக்கப்படுகிறது. இனிமேல் இது நாடு முழுக்க அளிக்கப்படும். இதனால் ஆண்டுக்கு 50 ஆயிரம் குழந்தைகள் மரணிப்பது தவிர்க்கப்படும்.

38. கொவிட்-19 தடுப்பூசி மருந்துக்கு 2021-22 ஆம் ஆண்டுக்கு நான் ரூ.35,000 கோடி ஒதுக்கியுள்ளேன். தேவை இருந்தால் கூடுதல் தொகை அளிக்க உத்தரவாதம் அளிக்கிறேன்.

39. சுகாதாரம் மற்றும் நலவாழ்வுக்கு 2021-22 ஆம் ஆண்டுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.2,23,846 கோடி ஒதுக்கப்படுகிறது இந்த ஆண்டில் இது ரூ.94,452 கோடியாக உள்ளது. இப்போதைய ஒதுக்கீடு 137 சதவீதம் அதிகம். இதுகுறித்த விவரங்கள் உரையின் பிற்சேர்க்கை - I - ல் அளிக்கப்பட்டுள்ளன.

2. இயல்புநிலை மற்றும் நிதி மூலதனம் மற்றும் கட்டமைப்பு

தற்சார்பு இந்தியா - உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்புத் திட்டம் (பி.எல்.ஐ.)

40. நாம் 5 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கான பொருளாதார நாடாக வளர்வதற்கு, நமது உற்பத்தித் துறை தொடர்ந்து இரட்டை இலக்க அளவில் வளர்ச்சி காண வேண்டும். நமது உற்பத்தித் துறை உலக நாடுகளுக்கான வழங்கல் தொடர்களில் இடம் பெற்றதாக, போட்டியிடும் தன்மை மிகுந்ததாக, நவீன தொழில்நுட்பம் கொண்டதாக ஒருங்கிணைந்திருக்க வேண்டும். மேற்சொன்ன

அனைத்தையும் எட்டுவதற்கு, தற்சார்பு இந்தியா திட்டத்தில் உலக தரத்திலான உற்பத்தி வசதிகளை உருவாக்க 13 துறைகளில் பி.எல்.ஐ. திட்டங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன. இதற்காக 2021-22 நிதியாண்டில் இருந்து அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூ.1.97 லட்சம் கோடி செலவிட அரசு திட்டமிட்டுள்ளது. இத் திட்டம் முக்கிய துறைகளில் உற்பத்தி அளவை அதிகரித்து, உலக தரத்திலான செயல்பாடுகளை உருவாக்கி, ஊக்கம் தருவதாக, நமது இளைஞர்களுக்கு வேலைகள் தருவதற்கு உதவிகரமாக இருக்கும்.

**ஜவுளிகள்**

41. உலக அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் திறன் கொண்டதாக, பெருமளவு முதலீடுகளை ஈர்க்கும் துறையாக ஜவுளித் துறையை உருவாக்குவதற்கும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஊக்குவிக்கவும், பி.எல்.ஐ. திட்டங்களுடன் மெகா முதலீட்டு ஜவுளிகள் பூங்காக்களும் (மித்ரா) உருவாக்கப்படும். ஏற்றுமதியில் உலக அளவில் சாம்பியனாகத் திகழும் நிலையை உருவாக்குவதற்கு, வந்தவுடன் தொழில் தொடங்குவதற்கு ஏற்ப உலகத் தரத்திலான கட்டமைப்பு வசதிகள் இதன் மூலம் உருவாக்கப்படும். 3 ஆண்டுகளில் 7 ஜவுளிப் பூங்காக்கள் உருவாக்கப்படும்.

**கட்டமைப்பு**

42. டிசம்பர் 2019-ல் நான் அறிவித்த தேசிய கட்டமைப்பு பைப்லைன் (என்.ஐ.பி.) திட்டம், அந்த வகையில் முதன்முறையாக அறிவிக்கப்பட்ட திட்டமாக உள்ளது. மத்திய அரசு மேற்கொண்ட முழு அளவில் அரசின் செயல்பாடுகள் கொண்டதாக இது இருக்கும். 6835 திட்டங்களுடன் தொடங்கப்பட்ட இத் திட்டம், பின்னர் 7,400 திட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது; சில முக்கிய அமைச்சகங்களின் கீழ், ரூ.1.10 லட்சம் கோடி மதிப்பிலான சுமார் 217 திட்டங்களில் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.

43. இத் திட்டத்தில் வரக்கூடிய ஆண்டுகளில் இலக்கை எட்டிவிட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. இதற்கு, அரசு மற்றும் நிதித் துறை முதலீட்டை பெருமளவு அதிகரிக்க வேண்டியிருக்கும். மூன்று வழிகளில் இதைச் செய்வதன் மூலம் உறுதியான நடவடிக்கைகள் எடுக்க இந்த நிதிநிலை அறிக்கையில் நான் முன்மொழிவு செய்கிறேன்.

44. நிறுவன கட்டமைப்புகளை உருவாக்குவது முதலாவது வழிமுறையாக இருக்கும்; அடுத்ததாக, சொத்துகளை

பணமாக்குவதற்கு அதிக முயற்சி எடுக்கப்படும். மத்திய மற்றும் மாநில நிதிநிலை அறிக்கைகளில் மூலதன செலவின் பங்கை அதிகரிப்பது மூன்றாவது வழிமுறையாக இருக்கும்.

கட்டமைப்புக்கு நிதியளித்தல் -வளர்ச்சிக்கான நிதி நிறுவனம் (டி.எப்.ஐ.)

45. கட்டமைப்புகளுக்கு நீண்டகால கடன் நிதி வசதி தேவைப்படுகிறது. சேவை அளிப்பவர், ஊக்குவிப்பவர், தூண்டுதல் செய்பவர் பணியை ஆற்றுவதற்கு வளர்ச்சிக்கான நிதி நிறுவனம் உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது. அதன்படி, டி.எப்.ஐ. உருவாக்குவதற்கான ஒரு மசோதாவை நான் தாக்கல் செய்வேன். இந்த நிறுவனத்துக்கு மூலதனம் அளிக்க நான் ரூ.20,000 கோடி ஒதுக்கியுள்ளேன். மூன்றாண்டு காலத்தில் இந்த டி.எப்.ஐ. மூலமாக குறைந்தபட்சம் ரூ.5 லட்சம் கோடி அளவுக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

46. InVIT-கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் REIT உருவாக்கப்படும். பொருத்தமான சட்டங்களில், தேவையான திருத்தங்கள் செய்யப்படும். InVIT-கள் மற்றும் REIT-களுக்கு எளிதில் நிதி வசதி கிடைப்பது இதன் மூலம் உறுதி செய்யப்படும். கட்டமைப்பு மற்றும் ரியல் எஸ்டேட் துறைகளுக்கு நிதி கிடைக்கும் நிலையை இது மேம்படுத்தித் தருவதாக இருக்கும்.

**சொத்து ரொக்கமாக்கல்**

47. புதிய கட்டமைப்பு உருவாக்குவதற்குத் தேவையான நிதி வசதிக்கு ஏற்பாடு செய்வதில், பொதுத் துறை கட்டமைப்பு சொத்துகளை ரொக்கமாக்கும் நடவடிக்கை மிகவும் முக்கியமானதாக இருக்கும். ``தேசிய ரொக்கமாக்கல் பைப்லைன்" என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்படும். பயன்பாட்டில் இல்லாத சொத்துகளை ரொக்கமாக்க இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். இத் திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், முதலீட்டாளர்களுக்கு விஷயங்களைத் தெரிவிக்கவும், சொத்து ரொக்கமாக்கல் அறிவிப்புப் பகுதி தொடங்கப்படும். சொத்து ரொக்கமாக்கலில் மேற்கொள்ளப்படும் சில முக்கியமான நடவடிக்கைகள் பின்வருமாறு:

a. தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையமும், பி.ஜி.சி.ஐ.எல். அமைப்பும் தனித்தனியே ஒவ்வொரு InViT உருவாக்க முன்வந்துள்ளன. இதன் மூலம் சர்வதேச மற்றும் உள்நாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் ஈர்க்கப்படுவார்கள். ரூ.5,000 மதிப்பிலான செயல்பாட்டில் உள்ள சாலைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் InVIT-க்கு

அளிக்கப்படும். ரூ.7000 கோடி மதிப்பிலான சொத்துகள் பி.ஜி.சி.ஐ.எல்-க்கு மாற்றப்படும்.

b. பிரத்யேக சரக்குப் போக்குவரத்து வழித்தட சொத்துகளை ரயில்வே நிர்வாகம் பணமாக்கி, பணிகள் முடிந்த பிறகு செயல்பாடுகள், பராமரிப்பு ஆகியவற்றுக்காக பயன்படுத்தப்படும்.

c. அடுத்த தொகுப்பில் வரும் விமான நிலையங்கள், செயல்பாடுகள் மற்றும் மேலாண்மை சலுகைகளுக்காக ரொக்கமாக்கப்படும்.

d. சொத்து ரொக்கமாக்கல் திட்டத்தில் மேற்கொள்ளப்படும் இதர முக்கியத்துவமான கட்டமைப்புத் திட்டங்கள்: (i) தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் இயக்கும் கட்டண சாலைகள், (ii) பி.ஜி.சி.ஐ.எல்.ன் சொத்துகளை மாற்றுதல் (iii) கெயில், ஐ.ஓ.சி.எல். மற்றும் எச்.பி.சி.எல். நிறுவனங்களின் எண்ணெய் மற்றும் எரிவாயு குழாய் இணைப்புகள், (iv) இரண்டு மற்றும் மூன்றாவது நிலை நகரங்களில் இந்திய விமான நிலைய ஆணையத்தின் (ஏ.ஏ.ஐ.) விமான நிலையங்கள், (v) இதர ரயில்வே கட்டமைப்பு சொத்துகள் (vi) மத்திய சேமிப்புக் கிடங்கு கார்ப்பரேசன் மற்றும் நா.ஃபெட் போன்ற மத்திய பொதுத் துறை நிறுவனங்களின் (சி.பி.எஸ்.இ ) சேமிப்புக் கிடங்கு சொத்துகள் மற்றும் (vii) விளையாட்டு அரங்குகள்.

**மூலதன நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடத்தக்க உயர்வு**

48. 2020-21 ஆம் ஆண்டில் மூலதன செலவுக்கு நாம் ரூ.4.12 லட்சம் கோடி அளித்தோம். நிதி நெருக்கடி இருந்தபோதிலும், மூலதனத்துக்கு நாம் அதிகம் செலவு செய்ய வேண்டும். ரூ.4.39 லட்சம் கோடி என்ற அளவுடன் இந்த ஆண்டை நாம் நிறைவு செய்யவிருக்கிறோம். 2020-21 நிதிநிலை அறிக்கையின் மறு மதிப்பீட்டில் இதற்கு நாம் வகை செய்திருந்தோம். மூலதன செலவினத்தை அதிகமாக உயர்த்த நான் முன்மொழிவு செய்து, அதற்கு வசதி செய்துள்ளேன். ``2020-21 நிதியாண்டைவிட 34.5 சதவீதம் அதிகமாக ரூ.5.54 லட்சம் கோடி இதற்கு ஒதுக்கப்படுகிறது. மூலதன செலவில் நல்ல செயல்பாடுகளைக் காட்டும் திட்டங்கள் மற்றும் துறைகளுக்கு அளிப்பதற்காக, பொருளாதார விவகாரங்கள் துறை என்னும் தலைப்பில் ரூ.44 ஆயிரம் கோடிக்கும் அதிகமான தொகையை நான் வைத்திருக்கிறேன். இந்தச் செலவினம் தவிர, மாநில மற்றும் தன்னாட்சி அமைப்புகளின் மூலதன செலவிற்காக நாம் ரூ.2 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகையை அளிக்கிறோம்.

49. கட்டமைப்புகளை உருவாக்க அதிக செலவு செய்யும்படி மாநிலங்களுக்குத் தூண்டுதல் அளிக்கும், குறிப்பிட்ட வகையிலான நடைமுறைகளை நாம் உருவாக்கவுள்ளோம்.

**சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் கட்டமைப்பு**

50. ரூ.5.35 லட்சம் கோடி மதிப்பிலான பாரத்மாலா பரியோஜனா திட்டத்தின் கீழ் 13 ஆயிரம் கிலோ மீட்டருக்கும் அதிகமான நீளத்துக்கு சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தில் ரூ.3.3 லட்சம் கோடி மதிப்பிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 3,800 கி.மீ. நீள சாலைகள் முடிந்துள்ளன. 2022 மார்ச் மாதத்திற்குள் நாம் இன்னும் 8,500 கி.மீ. நீள சாலைகளுக்கு பணி வழங்குவோம். கூடுதலாக 11,000 கி.மீ. நீளத்துக்கு தேசிய நெடுஞ்சாலைகள் வழித்தடத்தில் சாலைகளின் பணி முடிந்திருக்கும்.

51. சாலைக் கட்டமைப்புகளை மேலும் பலப்படுத்துவதற்காக, அதிக பொருளாதார செயல்பாடுகள் மிகுந்த மண்டலங்கள் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் சில:

a. தமிழகத்தில் ரூ.1.03 லட்சம் கோடியில் 3,500 கி.மீ. நீளத்துக்கான தேசிய நெடுஞ்சாலைப் பணிகள். இதில் மதுரை - கொல்லம் நெடும்பாதை, சித்தூர் - தச்சூர் நெடும்பாதை ஆகியவையும் அடங்கும். இதற்கான பணிகள் அடுத்த ஆண்டு தொடங்கும்.

b. ரூ.65 ஆயிரம் கோடி முதலீட்டில் கேரளாவில் 1,100 கி.மீ. நீளத்துக்கான தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும். மும்பை - கன்னியாகுமரி நெடும்பாதை திட்டத்தில் கேரளாவில் நடைபெறும் 600 கி.மீ. நீளத்துக்கான பணிகளும் இதில் அடங்கும்.

c. மேற்குவங்கத்தில் ரூ.25 ஆயிரம் கோடி செலவில் 675 கி.மீ. நீளத்துக்கான நெடுஞ்சாலைப் பணிகள். இதில் இப்போதுள்ள கொல்கத்தா - சிலிகுரி சாலை மேம்படுத்தும் பணியும் அடங்கும்.

d. அசாம் மாநிலத்தில் சுமார் ரூ.19 ஆயிரம் கோடி மதிப்பிலான நெடுஞ்சாலைப் பணிகள் இப்போது நடந்து வருகின்றன. ரூ.34 ஆயிரம் கோடி செலவில் 1300 கி.மீ. நீளத்துக்கும் அதிகமான தேசிய நெடுஞ்சாலைகள் உருவாக்கும் பணி அடுத்த 3 ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

52. 2021-22 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க செயல்பாடுகள் இடம்பெறும், அடையாளத்துவமாக இருக்கும் சில மண்டலங்கள் மற்றும் வேறு

முக்கியமான திட்டங்கள் குறித்த விவரங்கள் பிற்சேர்க்கை - II-ல் தெரிவிக்கப்பட்டுள்ளன.

53. மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகத்துக்கு உயர்த்தப்பட்ட தொகையாக ரூ.1,18,101 1 லட்சம் கோடியை நான் அளித்துள்ளேன். இதில் ரூ.1,08,230 கோடி மூலதனம், முன் எப்போதையும்விட அதிகமானதாக இருக்கும்.

**ரயில்வே கட்டமைப்பு**

54. இந்தியாவுக்கான தேசிய ரயில்வே திட்டம் - 2030 ஒன்றை இந்திய ரயில்வேத் துறை தயாரித்துள்ளது. எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வசதிகளை 2030 ஆம் ஆண்டுக்குள் உருவாக்க இத் திட்டம் வகை செய்கிறது.

55. `மேக் இன் இந்தியா' என்ற நமது உத்திக்கு, சேமிப்புக்கிடங்கு செலவுகளைக் குறைக்க வேண்டியது முக்கியமானதாக உள்ளது. 2022 ஜூன் மாதத்திற்குள் மேற்குப் பகுதி பிரத்யேக சரக்கு வழித்தடம், கிழக்குப் பகுதி பிரத்யேக சரக்கு வழித்தடங்கள் தொடங்கப்படும். பின்வரும் கூடுதல் முன்முயற்சிகளுக்கும் திட்டமிடப் பட்டுள்ளது:

a. கிழக்குப் பகுதி பிரத்யேக சரக்கு வழித்தடத்தில் சோன்னகர் - கோமோக் பிரிவு (263.7 கி.மீ) பணிகள் 2021-22ல் அரசு- தனியார் பங்கேற்பு (பி.பி.பி.) முறையில் மேற்கொள்ளப்படும். கோமோக் - டான்குனி பிரிவு (274.3 கி.மீ.) பணிகளும் அடுத்த குறுகிய காலத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

b. காரக்பூர் முதல் விஜயவாடா வரையிலான கிழக்குக் கடலோர நெடும்பாதை, பூசாவல் முதல் காரக்பூர், டான்குனி வரையிலான கிழக்கு-மேற்கு நெடும்பாதை, இடார்சி முதல் விஜயவாடா வரையிலான வடக்கு - தெற்கு நெடும்பாதை போன்ற பிரத்யேக சரக்கு வழித்தடங்களின் பணிகள் எதிர்காலத்தில் நிறைவேற்றப்படும். முதல்கட்டமாக விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படும்.

c. அகல ரயில் பாதைகளை மின்யமாக்கும் பணிகள் 2021 ஆம் ஆண்டுக்குள் 46,000 கி.மீ. அளவை எட்டும்.அதாவது 72 சதவீதம் அகல ரயில் பாதைகள் மின்யமாக்கப்பட்டுவிடும். 2020 அக்டோபர் 1 ஆம் தேதி இது 41,548 கி.மீ. அளவாக இருந்தது. அகல ரயில் பாதை முழுக்க மின்சார மயமாக்கும் பணிகள் 2023 டிசம்பரில் நிறைவடையும்.

56. பயணிகளின் வசதியும், பாதுகாப்பும் கருதி பின்வரும் நடவடிக்கைகள் எடுக்க உத்தேசிக்கப் பட்டுள்ளன:

a. மனதைக் கவரும் வடிவமைப்பில் விஸ்டா டோம் எல்.எச்.பி. ரயில்பெட்டிகளை சுற்றுலா வழித்தடங்களில் அறிமுகம் செய்யவிருக்கிறோம். பயணிகளுக்கு நல்ல பயண அனுபவத்தைத் தருவதாக இது இருக்கும்.

b. கடந்த சில ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு நல்ல பயன் கிடைத்துள்ளது. இந்த முயற்சிகளை மேலும் பலப்படுத்துவதற்கு, அதிக போக்குவரத்து மிகுந்த பாதைகள் மற்றும் அதிகம் பயன்படுத்தப்படும் பாதைகளில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தானியங்கி ரயில்வே பாதுகாப்பு வசதி ஏற்படுத்தப்படும். மனிதத் தவறுகளால் ரயில்கள் மோதிக் கொள்ளும் விபத்துகள் இதனால் தவிர்க்கப்படும்.

c. ரயில்வே துறைக்கு சாதனை அளவாக நான் ரூ.1,10,055 கோடி ஒதுக்கியுள்ளேன். இதில் ரூ.1,07,100 கோடி மூலதன செலவீனத்துக்கானதாகும்.

**நகர்ப்புற கட்டமைப்பு**

57. மெட்ரோ ரயில் சேவை விரிவாக்கம் மற்றும் நகரப் பேருந்து சேவையை பலப்படுத்துவதன் மூலம், நகர்ப்புறங்களில் பொதுப் போக்குவரத்தின் பங்கை உயர்த்த நாம் முயற்சிகள் எடுக்கப் போகிறோம். பொது பேருந்து போக்குவரத்து சேவைகளை மேம்படுத்த ரூ.18 ஆயிரம் கோடி அளிக்கும் ஒரு புதிய திட்டம் தொடங்கப்படும். தனியார் துறையினர் சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேருந்துகளுக்கு நிதி அளித்து, கொள்முதல் செய்து, சேவைகளை அளித்து, பராமரிக்கும் வகையில் புதுமையான பி.பி.பி. மாடல்கள் இதில் ஊக்குவிக்கப்படும். இதனால் ஆட்டோமொபைல் துறைக்கு ஊக்கம் கிடைத்து, பொருளாதார வளர்ச்சிக்குப் புத்துயிர் கிடைக்கும். நமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெருகி, நகர்ப்புற மக்கள் வெளியில் செல்லும் சௌகரியத்தை அதிகப்படுத்துவதாக இருக்கும்.

58. தற்போது 702 கிலோ மீட்டர் நீளத்துக்கான பாதையில் மெட்ரோ ரயில் சேவை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.27 நகரங்களில் மேலும் 1,016 கிலோ மீட்டர் நீளத்துக்கு மெட்ரோ மற்றும் ஆர்.ஆர்.டி.எஸ். பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மெட்ரோலைட் மற்றும் மெட்ரோ நியோ என்ற இரண்டு புதிய தொழில்நுட்பங்கள், மெட்ரோ ரயில் சேவையில் குறைந்த செலவில், அதே அனுபவம், சௌகரியம், பாதுகாப்பு அம்சங்களுடன் இரண்டாம் நிலை நகரங்கள் மற்றும் முதல்நிலை நகரங்களின் வெளிப்புறப் பகுதிகளில் செயல்படுத்தப்படும்.

59. மத்திய இணை நிதி பின்வரும் திட்டங்களுக்கு வழங்கப்படும்:

a. ரூ.1957.05 கோடி செலவில் 11.5 கி.மீ. நீளத்துக்கான கொச்சி மெட்ரோ ரயில்வே பகுதி -2 திட்டம்

b. ரூ.63,246 கோடி செலவில் 118.9 கி.மீ. நீளத்துக்கான சென்னை மெட்ரோ ரயில்வே பகுதி - 2 திட்டம்

c. ரூ.14,788 கோடி செலவில் 58.19 கி.மீ. நீளத்துக்கான பெங்களூரு மெட்ரோ ரயில்வே திட்டம் பகுதி 2A மற்றும் 2B திட்டம்

d. ரூ.5,976 கோடி மற்றும் ரூ.2,092 கோடி செலவிலான நாக்பூர் மெட்ரோ ரயில் திட்டம் பகுதி 2 மற்றும் நாசிக் மெட்ரோ திட்டங்கள்

**மின்சார கட்டமைப்பு**

60. கடந்த 6 ஆண்டுகளில் மின் துறையில் நிறைய சீர்திருத்தங்களும், சாதனைகளும் செய்யப்பட்டுள்ளன. 139 கிகாவாட் அளவுக்கு உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக 2.8 கோடி வீடுகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. மின்பகிர்மான லைன்கள் வசதியில், 1.41 லட்சம் கிலோ மீட்டர் அளவுக்கு அதிகரிக்கப் பட்டுள்ளது.

61. நாடு முழுக்க மின்பகிர்மான நிறுவனங்கள் அரசு அல்லது தனியார் என ஏகபோக செயல்பாட்டில் உள்ளன. இதில் போட்டியை ஊக்குவித்து, தாம் விரும்பும் நிறுவனத்திடம் மின்சாரத்தைப் பெறும் வாய்ப்பை நுகர்வோருக்கு அளிக்க வேண்டிய அவசியம் உள்ளது. ஒன்றுக்கும் மேற்பட்ட பகிர்மான நிறுவனங்களின் சேவை கிடைக்கும்படி செய்து, தனக்கு விருப்பமான நிறுவனத்தை தேர்வு செய்யும் வாய்ப்பை நுகர்வோருக்கு அளிக்கும் ஒரு திட்டம் உருவாக்கப்படும்.

62. மின்பகிர்மான நிறுவனங்களின் செயல்பாட்டை சாத்தியமாக்குவது மிகவும் பிரச்சினைக்குரிய விஷயம். 5 ஆண்டு காலத்தில் ரூ.3,05,984 கோடி செலவில், புதுப்பிக்கப்பட்ட சீர்திருத்தங்கள் அடிப்படையிலான, நல்ல பயன்களை உருவாக்கிக் காட்டும் திறனுடன் இணைந்த, மின் பகிர்மானத் துறையை உருவாக்கும் திட்டம் கொண்டு வரப்படும். ப்ரீ-பெய்டு ஸ்மார்ட் மீட்டர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் மின் வழங்கல் வசதியைப் பிரித்து செயல்படுத்துதல், பகிர்மான வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட துறைகளில் மின் விநியோக நிறுவனங்கள் கட்டமைப்பு வசதியை உருவாக்கிக் கொள்ள நிதிநிலை மேம்பாட்டைக் காட்டுவதுடன் இணைந்த உதவியை அரசு அளிக்கும்.

63. பிரதமர், 3வது மறுமுதலீட்டு மாநாட்டில் 2020 நவம்பரில் பேசியபோது, விரிவான தேசிய ஹைட்ரஜன் எரிசக்தி இயக்கம் தொடங்குவதற்கான திட்டத்தை அறிவித்தார். இப்போது 2021-22ல் ஹைட்ரஜன் எரிசக்தி இயக்கம் தொடங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத ஆதார வளங்களில் இருந்து ஹைட்ரஜன் தயாரிக்க இத் திட்டம் வகை செய்யும்.

### துறைமுகங்கள், கப்பல், நீர்வழித் தடங்கள்

64. பெரிய துறைமுகங்கள் தாங்களாகவே செயல்பாட்டு சேவைகளை கவனிக்கும் நிலையில் இருந்து, அவர்களுக்காக தனியார் துறை நிர்வாகம் செய்யும் ஒரு மாடலுக்கு மாற்றப்படும். அதன்படி 2021-22 நிதியாண்டில் பொதுத் துறை தனியார் பங்களிப்பு நடைமுறை, ரூ.2000 கோடிக்கும் அதிகமான மதிப்பீட்டில் 7 திட்டங்களின் கீழ் அளிக்கப்படும்.

65. அமைச்சகங்கள் மற்றும் மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் வெளியிடும் உலக அளவிலான டெண்டர்களில், இந்திய கப்பல் நிறுவனங்களுக்கு மானிய உதவி அளிப்பதன் மூலம், இந்தியாவில் வணிகக் கப்பல்கள் இயக்குவதற்கு ஊக்கம் அளிக்கப்படும். 5 ஆண்டு காலத்துக்கு ரூ.1624 கோடி இதற்காக அளிக்கப்படும். இந்திய கடலோடிகளுக்கு அதிக பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு அளிக்கவும், உலக கப்பல் பயணத் துறையில் இந்திய நிறுவனங்களின் வாய்ப்பை மேம்படுத்தவும் இது உதவிகரமாக இருக்கும்.

66. கப்பல்கள் மறுசுழற்சி சட்டம் 2019-ஐ இந்தியா உருவாக்கி, ஹாங்காங் சர்வதேச மாநாட்டின் முடிவுக்கு இயைந்து செயல்பட்டுள்ளது. குஜராத்தில் 90 கப்பல் மறுசுழற்சி தளங்கள் ஏற்கெனவே எச்.கே.சி. ஒத்திசைவு சான்றிதழ்களைப் பெற்றுள்ளன. ஐரோப்பா மற்றும் ஜப்பானில் இருந்து அதிகமான கப்பல்களைக் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும். 4.5 மில்லியன் எல்.டி.டி. அளவிக்கான மறுசுழற்சித் திறன் 2024க்குள் இரட்டிப்பாக உயர்த்தப்படும். இதன் மூலம் நம் இளைஞர்களுக்கு கூடுதலாக 1.5 லட்சம் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும்.

### பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு

67. கொவிட்-19 முடக்கநிலை காலத்திலும் நாடு முழுக்க தடையின்றி எரிபொருள் கிடைக்கும்படி நமது அரசு பார்த்துக் கொண்டது. மக்கள் வாழ்வில் இத் துறை முக்கிய அங்கம் வகிப்பதைக் கருத்தில் கொண்டு, பின்வரும் முக்கிய முன்முயற்சிகள் அறிவிக்கப் படுகின்றன:

a. 8 கோடி வீடுகளுக்கு பயன் கிடைக்கச் செய்த உஜ்வலா திட்டம் மேலும் ஒரு கோடி பயனாளிகள் கிடைக்கும்படி விரிவாக்கம் செய்யப்படும்.

b. நகர எரிவாயு விநியோக நெட்வொர்க்கில் அடுத்த 3 ஆண்டுகளில் மேலும் 100 மாவட்டங்கள் இணைக்கப்படும்.

c. ஜம்மு, காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் குழாய் மூலம் எரிவாயு அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

d. அனைத்து இயற்கை எரிவாயு குழாய்களில், பாரபட்சமற்ற திறந்தநிலை அணுகுதல் வசதியுடன், பொதுவான சேவையைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வசதிகளை அளித்து, ஒருங்கிணைப்பு செய்வதற்கு தனிப்பட்ட எரிவாயு போக்குவரத்து சிஸ்டம் ஆபரேட்டர் அமைப்பு ஏற்படுத்தப்படும்.

**நிதி மூலதனம்**

68. செபி சட்டம் 1992, வைப்புநிதியாளர்கள் சட்டம் 1996, பங்குப் பத்திரங்கள் ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 1956 மற்றும் அரசு பங்கு பத்திரங்கள் சட்டம் 2007 ஆகியவற்றை இணைத்து, திருத்தியமைக்கப்பட்ட ஒற்றை பங்கு பத்திரங்கள் சந்தைகளின் விதிமுறைகளை உருவாக்க நான் முன்மொழிகிறேன்.

69. GIFT-IFSC-இல் உலக தரத்திலான நிதிசார் தொழில்நுட்ப சேவைகளை மேம்படுத்த அரசு உதவி அளிக்கும்.

70. நெருக்கடியான காலத்தில் கார்ப்பரேட் பத்திர சந்தையில் பங்கெடுப்பவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவும், இரண்டாம் நிலை சந்தையில் ரொக்கமாக்கல் வசதியைப் பொதுவாக மேம்படுத்தவும், நிரந்தரமான நிறுவன வரையறைகளை உருவாக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. நெருக்கடியான காலம் மற்றும் சாதாரண நேரங்களில் இந்தப் புதிய அமைப்பு முதலீட்டு தர கடன் பத்திரங்களை வாங்கி, பங்கு பத்திர சந்தை வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

71. நாட்டில் ஒழுங்குபடுத்தப்பட்ட தங்கப் பரிவர்த்தனை அமைப்புகள் ஏற்படுத்தும் ஒரு நடைமுறையை உருவாக்க உத்தேசித்திருப்பதாக 2018-19 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அதற்காக, ஒழுங்குமுறை அமைப்பாக செபி செயல்படும் என்று அறிவிக்கப்படும். சேமிப்பு வசதி செய்வதுடன், பெட்டக வசதி, தர மதிப்பீடு செய்தல் உள்ளிட்ட பொருள் சந்தை சூழலுக்கான

ஏற்பாட்டைச் செய்வதற்கு சேமிப்புக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையம் பலப்படுத்தப்படும்.

72. முதலீட்டாளருக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், அனைத்து நிதித் திட்டங்களிலும் முதலீடு செய்யும் அனைத்து முதலீட்டாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க, முதலீட்டாளர் சாசனம் ஒன்றை அறிமுகம் செய்ய முன்மொழிவு செய்கிறேன்.

73. மரபுசாரா எரிசக்தித் துறைக்கு மேலும் ஊக்கம் தரும் வகையில், இந்திய சூரியசக்தி மின் உற்பத்தி கழகத்திற்கு ரூ.1000 கோடி கூடுதல் மூலதனம் அளிக்கவும், இந்திய புதுப்பிக்கத்தக்க ஆதாரவளங்களின் மூலம் மின் உற்பத்தி மேம்பாட்டு முகமைக்கு ரூ.1,500 கோடியும் அளிக்க முன்மொழிவு செய்கிறேன்.

காப்பீட்டுத் துறையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரித்தல்

74. காப்பீட்டுத் துறையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு வரம்பை 49 சதவீதத்தில் இருந்து 74 சதவீதமாக அதிகரிப்பதற்கும், பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய வெளிநாட்டு முதலாளித்துவம் மற்றும் கட்டுப்பாடுகளை அனுமதிக்கவும், காப்பீட்டுச் சட்டம், 1938-ல் திருத்தம் செய்ய உத்தேசித்திருக்கிறேன். புதிய கட்டமைப்பில், நிர்வாகக் குழுவில் பெரும்பான்மை இயக்குநர்களும், முக்கிய நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்களும் இந்தியாவில் வாழ்பவர்களாக இருக்க வேண்டும். குறைந்தது 50 சதவீத இயக்குநர்கள் தனிப்பட்ட இயக்குநர்களாக இருக்க வேண்டும். லாபத்தில் குறிப்பிட்ட சதவீத அளவுக்கு பொது கையிருப்பாக வைத்திருக்க வேண்டும் என்ற விதிமுறைகள் இருக்கும்.

புதிய கட்டமைப்பு உருவாக்குவதன் மூலம் நெருக்கடியில் உள்ள சொத்துகளுக்கு தீர்வு காணுதல்

75. நெருக்கடியில் உள்ள சொத்துகளைக் கையாள்வதில் பொதுத் துறை வங்கிகளுக்கு உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சிகள் தேவைப்படுகின்றன. சொத்து மறுசீரமைப்பு நிறுவன லிமிடெட் மற்றும் சொத்து மேலாண்மை நிறுவனம் ஒன்று உருவாக்கி, வாரா கடனில் உள்ள சொத்துகளை எடுத்துக் கொண்டு, நிர்வகித்து, மாற்றுவழி முதலீட்டு நிதியத்துக்கும் மற்றும் வாய்ப்புள்ள இதர முதலீட்டாளர்களுக்கும் அளித்து, பணமாக்க முயற்சிக்கப்படும்.

பொதுத்துறை வங்கிகளுக்கு (பி.எஸ்.பி.) மறுமுதலீடு அளித்தல்

76. பொதுத்துறை வங்கிகளின் நிதி நிலைமையை மேலும் பலப்படுத்துவதற்கு, 2021-22 ஆம் ஆண்டில் மேலும் ரூ.20 ஆயிரம் கோடி அளவுக்கு மறுமுதலீட்டுக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

**வைப்பு நிதி காப்பீடு**

77. வங்கி வாடிக்கையாளர்களுக்கு வைப்பு நிதி காப்பீட்டு வசதியை ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்துவதற்கு, கடந்த ஆண்டு அரசு ஒப்புதல் அளித்தது. இந்த விதிகளை சீர்படுத்துவதற்காக நடப்பு கூட்டத் தொடரிலேயே டி.ஐ.சி.ஜி.சி. சட்டம் 1961-ல் திருத்தங்கள் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒரு வங்கி தற்காலிகமாக அதன் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனால், அந்த வங்கியில் வைப்பு நிதி வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள், குறித்த கால கெடுவுக்குள் காப்பீடு வரம்புக்கு உள்பட்ட தொகை வரையில் வைப்புநிதியாளர்கள் பெற இது உதவிகரமாக இருக்கும். தற்போது நெருக்கடியில் இருக்கும் வங்கிகளுக்கு வைப்பு நிதி கிடைக்கவும் இது உதவிகரமாக இருக்கும்.

78. சிறிய கடனாளிகளின் நலன்களைத் தொடர்ந்து பாதுகாப்பதுடன், கடன் ஒழுங்குமுறைகளை மேலும் மேம்படுத்தும் வகையில், குறைந்தபட்சம் ரூ.100 கோடி வரையில் சொத்து வைத்திருக்கும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களுக்கு (என்.பி.எப்.சி.)- Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest (SARFAESI) சட்டம் 2020-ன் கீழ் கடன் வசூலுக்குத் தகுதியான தொகை வரம்பு தற்போதுள்ள ரூ.50 லட்சம் என்பதில் இருந்து ரூ.20 லட்சம் என குறைக்கப்படுகிறது.

**கம்பெனி விவகாரங்கள்**

79. கம்பெனிகள் சட்டம் 2013-ன் கீழ் செயல்பாட்டு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த குற்றங்களை கிரிமினல் குற்றமாக்கும் முறையை மாற்றும் நடைமுறைகள் பூர்த்தியாகிவிட்டன. இப்போது Limited Liability Partnership (LLP) -ல் கிரிமினல் குற்றவாளியாக்கும் முறையை மாற்ற நான் முன்மொழிவு செய்கிறேன்.

80. அவைத் தலைவர் அவர்களே, கம்பெனிகள் சட்டம் 2013-ன் கீழ் சிறு நிறுவனங்களுக்கான வரையறையை, ``ரூ.50 லட்சம் வரையிலான" முதலீடு செய்த நிறுவனங்கள் என்பதை ``ரூ.2 கோடியை மிகாத" அளவுக்கு முதலீடு செய்த நிறுவனங்கள் என்று உயர்த்தியும், விற்றுமுதல் அளவை ``ரூ.2 கோடிக்கு" மிகாத என்பதை ``ரூ.20 கோடிக்கு" மிகாத என்றும் மாற்றுவதற்கு முன்மொழிவு செய்கிறேன்.

81. புதிதாகத் தொழில் தொடங்குபவர்களும் புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடிப்பவர்களுக்கும் நேரடியாக உதவும் வகையில், மேலும் ஒரு நடவடிக்கையாக ஒரு நபர் நிறுவனங்கள் (ஓ பி சி) தொடங்கப்படுவதற்கு ஊக்கம் அளிக்கவும் முன்மொழிகிறேன். மூலதனம் மற்றும் பணப்புழக்கம் குறித்த எந்தவிதக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் ஒரு நபர் நிறுவனங்கள் வளர்ச்சியடைய அனுமதி அளிக்கப்படும். எந்த ஒரு சமயத்திலும் அவர்கள் வேறு எந்தவித நிறுவனமாகவும் தங்களது நிறுவனத்தை மாற்றிக் கொள்ளவும் அனுமதி அளிக்கப்படும். ஒரு நபர் நிறுவனத்தைத் தொடங்க எண்ணும் இந்தியக் குடிமகன் நாட்டில் தங்கியிருக்க வேண்டிய காலம் 182 நாட்கள் என்பதிலிருந்து 120 நாட்கள் என்று குறைக்கப்படுகிறது. வெளிநாடு வாழ் இந்தியர்கள் இந்தியாவில் ஒரு நபர் நிறுவனங்களைத் தொடங்க அனுமதி அளிக்கப்படும்.

82. வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண்பதை உறுதிப்படுத்துவதற்காக என் சி எல் டி கட்டமைப்பு வலுப்படுத்தப்படும். இ-நீதிமன்ற முறை நடைமுறைப்படுத்தப்படும். கடன் பற்றிய பிரச்னைகளுக்குத் தீர்வு காண மாற்று முறைகள் பின்பற்றப்படும். எம் எஸ் எம் இ களுக்கான சிறப்பு கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படும்.

83. தரவு ஆய்வு (டேட்டா அனாலிடிக்ஸ்), செயற்கை அறிவு (ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் ஏ ஐ), மெஷின் லேர்னிங் ட்ரிவன் mca21 வர்ஷன் 3.0 போன்றவற்றை நாம் 2021- 22 நிதியாண்டில் அறிமுகப்படுத்தவுள்ளோம். இந்த வர்ஷன் 3.0 , இ ஸ்க்ரூடினி , இ அட்ஜூடிகேஷன், இ ஆலோசனை, கம்ப்ளையன்ஸ் மேலாண்மை போன்ற கூடுதல் மாட்யூல்கள் கொண்டதாக இருக்கும்.

## முதலீடை விலக்கிக் கொள்ளுதல் (டிசின்வெஸ்ட்மெண்ட்) மற்றும் யுக்தியான விற்பனை

84. கோவிட் 19 காலத்தின் போதும் நாம் திட்டமிட்ட முறையில் முதலீடுகளை விலக்கிக் கொள்வது குறித்து பணியாற்றி வந்துள்ளோம். பி பி சி எல், ஏர் இந்தியா, ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா, கன்டெய்னர் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா, ஐடிபிஐ வங்கி, பி இ எம் எல், பவன் ஹன்ஸ், நிலாச்சல் இஸ்பாட் நிகாம் லிமிடெட் உட்பட பல பரிவர்த்தனைகள் 2021-22-இல் நிறைவடையும். ஐடிபிஐ வங்கி தவிர மேலும் 2 பொதுத்துறை வங்கிகளையும் ஒரு பொது காப்பீட்டு நிறுவனத்தையும் இந்த ஆண்டு 2021-22-இல் தனியார் மயமாக்க உத்தேசித்துள்ளோம். இதற்காக சட்ட திருத்தங்கள் தேவைப்படும். இதற்கான சட்டதிட்டங்களை இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப் படுத்த நான் முன்மொழிகிறேன்.

85. எல் ஐ சி க்கான ஐபிஓ முதலாவது பொதுப் பங்கு வெளியீடு 2021-22இல் கொண்டு வர உள்ளோம். இதற்குத் தேவையான சட்ட திட்டங்களையும் இந்த கூட்டத் தொடரிலேயே நான் கொண்டு வருகிறேன்.

86. தற்சார்பு இந்தியா தொகுப்பை வெளியிட்டபோது, பொதுத்துறை நிறுவனங்களில் முதலீட்டை விலக்கிக் கொள்வது குறித்த கொள்கை ஒன்றைக் கொண்டுவருவோம் என்று நான் அறிவித்திருந்தேன். இந்தக் கொள்கைக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதை இந்த அவைக்கு தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். யுக்திபூர்வமான மற்றும் யுக்திபூர்வமற்ற அனைத்து மூலதன விலகல் நடவடிக்கைகள் குறித்தும் தெளிவான வழிமுறையை இந்தக் கொள்கை அளிக்கிறது. யுக்திபூர்வமான பிரிவில் நான்கு துறைகளில், மத்திய பொதுப்பணித் துறைகளில் மிகக் குறைந்தபட்ச அளவு வைத்துக் கொள்ளப்படும். மற்றவை தனியார் மயமாக்கப்படும். மீதமுள்ள பிரிவுகளில் உள்ள அனைத்து மத்திய பொதுத் துறை நிறுவனங்களும் தனியார் மயமாக்கப்படும். இந்தக் கொள்கையின் முக்கிய அம்சங்கள் இணைப்பு மூன்றில் (அனெக்சர் III) குறிப்பிடப்பட்டுள்ளது.

87. முதலீட்டை விலக்கிக் கொள்வதற்கான கொள்கையை மேலும் விரைந்து செயல்படுத்துவதற்காக ஸ்ட்ராடஜிக் டிசின்வெஸ்ட்மெண்ட்டுக்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் அடுத்த பட்டியலை தயாரிக்குமாறு என் ஐ டி ஐ இடம் நான் கேட்டுக் கொண்டுள்ளேன்.

88. இதுபோன்று மாநிலங்களும் தங்களது பொதுத்துறை நிறுவனங்களை டிசின்வெஸ்ட்மெண்ட் செய்யும் நடவடிக்கையை எடுப்பதற்காக மாநிலங்களை ஊக்குவிப்பதற்காக மாநிலங்களுக்கு மத்திய நிதியத்தில் இருந்து ஊக்கத்தொகை அளிப்பது குறித்தும் நாங்கள் நடவடிக்கைகள் எடுப்போம்.

89. செயல்படாத சொத்துக்கள், தற்சார்பு இந்தியாவுக்கு பங்களிக்க முடியாது. இத்தகைய, முக்கியமற்ற சொத்துக்கள் பெரும்பாலும், அரசு அமைச்சகங்கள், அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் தேவைக்கு அதிகமான நிலங்களாக உள்ளன. நிலங்களைப் பணமாக்குவது என்பது நேரடி விற்பனை அல்லது சலுகை அளிப்பது அல்லது இது போன்ற இதர வழிமுறைகளின் மூலமாக இருக்கலாம். இதற்கு சிறப்பு திறன்கள் தேவை. எனவே இதற்காக இந்த செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக ஒரு நிறுவன வடிவிலான அமைப்பை பயன்படுத்த நான் முன்மொழிகிறேன்.

90. நலிவடைந்த மற்றும் நஷ்டத்தில் இயங்கும் மத்திய பொதுத்துறை நிறுவனங்களை மூடுவதை உரிய காலத்தில் செய்து முடிப்பதை உறுதி செய்வதற்காக திருத்தி அமைக்கப்பட்ட வழிமுறை ஒன்றை அறிமுகப்படுத்துவோம். இதனால் இதுபோன்ற யூனிட்டுகள் உரிய காலத்தில் மூடப்படுவது உறுதிசெய்யப்படும்.

91. பட்ஜெட் மதிப்பீடு பங்குகள் விற்பனை 2021- 22இல் டிசின்வெஸ்ட்மெண்ட் மூலமாக ஒரு லட்சத்து 75 ஆயிரம் கோடி கிடைக்கும் என்று நான் மதிப்பிட்டுள்ளேன்.

**அரசு நிதி சீர்திருத்தங்கள்**

92. கருவூல ஒற்றைக் கணக்கு டி எஸ் ஏ முறையின் கீழ் தன்னாட்சி அமைப்புகள் அரசு கணக்கிலிருந்து நேரடியாக பணத்தை எடுத்து நேரடி செலவினங்களை செய்துகொள்ளலாம். இதன் மூலம் வட்டிச் செலவு மிச்சப்படும். 2021-22 முதல் இந்த டி எஸ் ஏ முறையை நாங்கள் அனைத்துக்கும் உரியதாக விரிவாக்குவோம்.

93. 15வது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் படி, மத்திய அரசு உதவியுடன் கூடிய திட்டங்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், பகுப்பாய்வு செய்யவும் விரிவான நடவடிக்கை எடுத்துள்ளோம். மேலும் அதிக பலன் உள்ள திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு இது உதவும்.

94. பல மாநில கூட்டுறவு அமைப்புகள் வளர்ச்சி பெற வேண்டும் என்பதில் அரசு உறுதி பூண்டுள்ளது. அவற்றுக்கு அனைத்து ஆதரவையும் அரசு அளிக்கும். கூட்டுறவு அமைப்புகள் எளிதில் வர்த்தகம் புரிவதை மேலும் சீரமைப்பதற்காக, அவற்றுக்கென தனியாக நிர்வாக அமைப்பு ஒன்றை ஏற்படுத்த நான் முன்மொழிகிறேன்.

**3. இலட்சிய இந்தியாவிற்கான, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி**

95. மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரிவில் நான் வேளாண்மை, வேளாண் சார் பிரிவுகள், விவசாயிகளின் நலன், கிராமப்புற இந்தியா, புலம்பெயர் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் அனைவருக்கும் வங்கிச் சேவை ஆகியவை குறித்து குறிப்பிட உள்ளேன்.

**வேளாண்மை**

96. விவசாயிகளின் நலன் குறித்து நமது அரசு உறுதி பூண்டுள்ளது. குறைந்தபட்ச ஆதரவு விலை கடலளவு மாற்றம் கண்டுள்ளது. அனைத்து விளை பொருட்களுக்கும் அவற்றின் உற்பத்தி செலவைக் காட்டிலும் குறைந்தபட்சம் ஒன்றரை மடங்கு அதிகமாக, குறைந்தபட்ச ஆதரவு

விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்படுவதும் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது. இதையடுத்து விவசாயிகளுக்கு பணப்பட்டுவாடா கணிசமாக அதிகரித்துள்ளது.

97. கோதுமையைப் பொறுத்தவரை, 2013- 14 இல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை 33 ஆயிரத்து 874 கோடி ரூபாய். 2019- 2020 இல் இது 62 ஆயிரத்து 802 கோடி ரூபாய். 2020- 2021 இல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை 75 ஆயிரத்து 60 கோடி ரூபாய். கோதுமை விளைவிக்கும் விவசாயிகளில் 2020- 21 இல் பயனடைந்தவர்கள் 43.36 லட்சம் பேர். 2019-20ல் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 35.57 லட்சம்.

98. நெல்லைப் பொறுத்தவரை 2013- 14ல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை 63 ஆயிரத்து 928 கோடி ரூபாய். 2019-2020 இல் இது ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 930 கோடி ரூபாயாக அதிகரித்தது. 2020 2021ல் இது மேலும் அதிகரித்து ஒரு லட்சத்து 72 ஆயிரத்து 752 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2019-20ல் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 1.24 கோடி. இது 2020-21 இல் 1.54 கோடியாக அதிகரித்தது.

99. இதேபோல் பருப்பு வகைகளைப் பொறுத்தவரை 2013- 14 ல் வழங்கப்பட்ட தொகை 236 கோடி ரூபாய். 2019-20ல் இது 8255 கோடி ரூபாயாக அதிகரித்தது. தற்போது 2020- 2021ல் இது 10 ஆயிரத்து 530 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. 2013-14 உடன் ஒப்பிடுகையில் இது 40 மடங்குக்கும் மேல் அதிகமாகும்.

100. பருத்தி விவசாயிகளைப் பொறுத்தவரை, 2013- 14ல் 90 கோடி ரூபாயாக இருந்த அவர்களது வருவாய் 27 ஜனவரி 2021 படி 25 ஆயிரத்து 974 கோடி ரூபாயாக அதிகரித்தது. இதற்கான விவரங்கள் இணைப்பு நான்கில் (அனெக்சர் IV) உள்ளன.

101. முன்னதாக இந்த ஆண்டு, மாண்புமிகு பிரதமர் சுவமித்வா திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின்கீழ், கிராமங்களிலுள்ள சொத்து உரிமையாளர்களுக்கு, சொத்துக்கள் அவர்களுக்கு உரிமையானவை என்பதற்கான ஆவணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இது வரையிலான காலத்தில் 1,241 கிராமங்களில் 1.80 லட்சம் சொத்துரிமையாளர்களுக்கு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த 2021- 22 நிதி ஆண்டில் இத்திட்டத்தை அனைத்து மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்த நான் முன்மொழிகிறேன்.

102. நமது விவசாயிகளுக்கு தேவையான அளவு கடன் உதவி வழங்குவதற்காக 2022 ஆம் நிதியாண்டில் வேளாண் கடன் இலக்கு 16.5 லட்சம் கோடி ரூபாயாக நான் அதிகரித்துள்ளேன். கால்நடை வளர்ப்பு

துறை, பால் பண்ணை மீன்வளத்துறை ஆகியவற்றுக்கும் அதிக அளவில் கடனுதவி வழங்கப்படுவதை உறுதி செய்யவும் அதிக கவனம் செலுத்துவோம்.

103. கிராமப்புற கட்டமைப்பு வளர்ச்சி நிதியத்திற்கான ஒதுக்கீடு 30 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து 40 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்திருக்கிறோம்.

104. நுண் நீர்ப்பாசன நிதியம் 5,000 கோடி ரூபாய் கார்ப்பஸ் தொகையுடன் நபார்டு- இன் கீழ் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு, மேலும் 5000 கோடி ரூபாய் அளித்து இரட்டிப்பாக்க முன்மொழிகிறேன்.

105. வேளாண்மை மற்றும் வேளாண் சார் பொருட்களுக்கான மதிப்பு கூட்டுதல் மற்றும் அவற்றுக்கான ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக பசுமை இயக்க திட்டம் தற்போது தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றுக்கு ஏற்புடையதாக உள்ளது. இவை மேலும் 22 அழியக்கூடிய பொருட்களுக்கும் ஏற்புடையதாக இருக்கும்.

106. இ என் ஏ எம் மூலமாக 1.14 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வர்த்தகம் நிகழ்ந்திருக்கிறது. சுமார் 1.68 கோடி விவசாயிகள் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். வேளாண் சந்தையில் இ என் ஏ எம் மூலமாக வெளிப்படைத் தன்மையும், போட்டியும் கொண்டுவரப்பட்டுள்ளதையடுத்து மேலும் ஆயிரம் மண்டிகள் இ என் ஏஎம் உடன் இணைக்கப்படும்.

107. கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் அமைப்பு, ஏ பி எம் சிகளுக்கும் வேளாண் கட்டமைப்பு நிதியம் நிதி உதவி அளிக்கும்.

**மீன்வளத்துறை**

108. நவீன மீன்பிடி துறைமுகங்கள், மீன்கள் வந்துசேரும் மையங்களின் வளர்ச்சிக்காக கணிசமான முதலீடு செய்யப்பட வேண்டும் என்றும் நான் முன்மொழிகிறேன். முதலாவதாக ஐந்து முக்கிய மீன்பிடி துறைமுகங்கள் - கொச்சி, சென்னை, விசாகப்பட்டினம், பாரதீப், பெட்வாகாட் ஆகியவை பொருளாதார செயல்பாட்டு தளங்களாக உருவாக்கப்படும். நன்னீர் மீன்பிடி துறைமுகங்களும், மீன் வந்து சேரும் மையங்களும் நீர் வழித்தடங்கள் ஆறுகள் ஆகியவற்றின் கரைகளில் மேம்படுத்தப்படும்.

109. கரையோரம் வாழ் சமுதாயத்தினரின் வாழ்க்கையை மாற்றியமைக்கக் கூடிய திறன் கொண்ட ஒரு பிரிவாக கடல்பாசி விவசாயம் உருவாகி வருகிறது. இதன் மூலம் பெருவாரியான வேலைவாய்ப்பு கிடைக்கும். கூடுதல் வருவாய் கிடைக்கும்.

கடற்பாசி விவசாயத்தை மேம்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் பல்நோக்கு கடல்பாசி பூங்கா ஒன்றை ஏற்படுத்த நான் முன்மொழிகிறேன்.

**புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள்**

110. 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை' திட்டத்தை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். இதன் மூலம் பயனாளிகள் நாட்டின் எந்த இடத்திலிருந்தும் தங்களது ரேஷன் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம். இத்திட்டத்தின்கீழ் குறிப்பாகப் பயனடைந்தவர்கள் புலம்பெயர் தொழிலாளர்கள் ஆவார்கள். புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் குடும்பம் ஓரிடத்திலும், தாங்கள் ஓரிடத்திலும் வாழ்கிறார்கள். இவர்கள் தங்களுடைய பங்கை, தாங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள ரேஷன் கடைகளில் இருந்தும், குடும்பத்தினர் அவர்கள் வசிக்கும் பகுதியில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம். ஒரு நாடு ஒரு குடும்ப அட்டை திட்டம் 32 மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது; 69 கோடி பயனாளிகள் உள்ளனர், அதாவது 86 சதவிகித பயனாளிகள் இதன்மூலம் பயனடைந்துள்ளனர் என்பதை உங்களுக்கு தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் மீதமுள்ள நான்கு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் அடுத்த சில மாதங்களில் இணைக்கப்படும்.

111. முறைசாரா தொழிலாளர்கள், குறிப்பாக புலம்பெயர் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் எங்களது முயற்சிகளை மேலும் விரிவாக்கும் வகையில், துரப்பணப் பணியாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் உட்பட பல்வேறு தொழிலாளர்கள் குறித்த தேவையான தகவல்களைப் பெறுவதற்காக போர்டல் இணையதளம் ஒன்றைத் தொடங்க நான் முன்மொழிகிறேன். புலம்பெயர் தொழிலாளர்களுக்கு தேவையான சுகாதாரம், காப்பீடு, கடன் உதவி, உணவு ஆகியவற்றுக்கான திட்டங்களை வடிவமைக்க இது உதவும்.

112. 4 தொழில் குறியீடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் 20 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட ஒரு முறையை நாங்கள் முடிவுக்குக் கொண்டு வருகிறோம். உலக அளவில் முதல் முறையாக சமூக பாதுகாப்பு பயன்கள் துரப்பணப் பணியாளர்களுக்கும், நடைபாதைத் தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும். அனைத்து பிரிவு பணியாளர்களுக்கும், குறைந்தபட்ச ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அனைவருக்கும் ஊழியர் அரசு காப்பீட்டு கழக திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்படும். அனைத்து பிரிவுகளிலும் பெண்கள் பணியாற்ற அனுமதி வழங்கப்படும். பெண்கள் இரவு நேரங்களிலும் தேவையான பாதுகாப்போடு பணிபுரிய அனுமதிக்கப்படும். அதேசமயம் ஒரே முறை பதிவு செய்து கொள்ளுதல் உரிமம் பெறுதல், ஆன்லைன்

மூலமாக ரிட்டன் தாக்கல் செய்தல் போன்ற பல்வேறு முறைகள் மூலமாக நிறுவன முதலாளிகளின் சுமைகளும் குறைக்கப்படும்.

**அனைவருக்கும் வங்கிச் சேவை**

113. ஷெட்யூல்ட் வகுப்பினர், ஷெட்யூல்ட் பழங்குடியினர், பெண்கள் ஆகியோருக்கு ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கப்படுவதை அதிகரிப்பதற்காக, அவர்கள் கடன் உதவி பெறுவதற்கு அவர்களின் பங்கு 25 சதவிகிதம் என்பதிலிருந்து 15 சதவீதமாகக் குறைக்க நான் முன்மொழிகிறேன். வேளாண் சார் செயல்பாடுகளுக்கும் கடனுதவி அளிக்கப்பட வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன்.

114. எம் எஸ் எம் இ பிரிவுக்கு ஆதரவு அளிப்பதற்காக நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இந்த பட்ஜெட்டில் நான் இந்த பிரிவுக்கு 15 ஆயிரத்து 700 கோடி ரூபாய் வழங்கியுள்ளேன். இந்த ஆண்டின் பட்ஜெட்டை மதிப்பீட்டை விட இது இரண்டு மடங்கு அதிகமாகும்.

**4. மனித ஆற்றலுக்கு புத்துணர்ச்சி**

115. சமீபத்தில் அறிவிக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கை நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது

**பள்ளிக்கல்வி**

116. தேசிய கல்விக் கொள்கையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கும் வகையில் 15 ஆயிரத்துக்கும் அதிகமான பள்ளிகள் தர ரீதியாக வலுப்படுத்தப்படும். இவை அந்தந்த பகுதிகளில் மாதிரி பள்ளிகளாக உருவாகும். மற்ற பள்ளிகளும் இதுபோல் உருவாக அவை கை கொடுப்பதோடு கண்காணிக்கவும் செய்யும். இதன்மூலம் கொள்கையின் அனைத்து கோட்பாடுகளையும் அடைய முடியும்.

117. தொண்டு நிறுவனங்கள்/ தனியார் பள்ளிகள்/ மாநிலங்கள் ஆகியவற்றின் துணையுடன் 100 புதிய சைனிக் பள்ளிகள் ஏற்படுத்தப்படும்.

**உயர்கல்வி**

118. 2019-20 நிதிநிலை அறிக்கையில் இந்திய உயர்கல்வி கமிஷன் அமைப்பது பற்றி நான் குறிப்பிட்டிருந்தேன். இதை நடைமுறைப்படுத்த தேவையான சட்டத்தை இந்தாண்டு அறிமுகப்படுத்துவோம். ஒரு குடையின் கீழ் தர நிர்ணயம், அக்கிரடிடேஷன், விதிமுறைகள், நிதி என 4 தனி பிரிவுகள் கொண்டதாக இந்த அமைப்பு இருக்கும்.

119. நம் நாட்டின் பல்வேறு நகரங்களில் இந்திய அரசின் ஆதரவுடன் இயங்கும் பல்வேறு ஆராய்ச்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் உள்ளன. உதாரணமாக ஹைதராபாதில் இதுபோன்ற 40 பெரிய அமைப்புகள் உள்ளன. 9 நகரங்களில் ஒரே குடையின் கீழ் இந்த அமைப்புகளை உருவாக்கி இவை ஒருங்கிணைந்து செயல்படும் வகையில் அமைப்புகளை ஏற்படுத்துவோம். இதற்காக ஒருங்கிணைப்பு நிதி ஒதுக்கப்படும்.

120. லடாக்கில் எளிய முறையில் உயர்கல்வி பயில வகை செய்வதற்காக லே - வில் மத்திய பல்கலைக்கழகம் ஒன்றை ஏற்படுத்த நான் முன்மொழிகிறேன்.

121. தேசிய கல்விக் கொள்கையின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட இருக்கும் மற்ற முக்கிய திட்டங்கள் இணைப்பு ஐந்தில் (அனெக்சர் V) பட்டியலிடப்பட்டுள்ளன.

### ஷெட்யூல்ட் வகுப்பினர் ஷெட்யூல்ட் பழங்குடியினர் நலன்

122. நமது பழங்குடியினப் பகுதிகளில் ஏகலைவன் மாதிரி உறைவிடப் பள்ளிகள் 750 ஏற்படுத்த இலக்கு நிர்ணயித்துக் கொண்டுள்ளோம். இதுபோன்று பள்ளிகள் ஒவ்வொன்றையும் நடத்துவதற்கு 20 கோடியில் இருந்து 38 கோடி ரூபாயாக அதிகரிக்கவும், மலைப்பாங்கான பகுதிகளிலும் மிகக்கடினமான பகுதிகளிலும் நடத்துவதற்கு 48 கோடி ரூபாயாகவும் செலவினத்தை அதிகரிக்க முன்மொழிகிறேன். நமது பழங்குடியின மாணவர்களுக்கு சிறந்த முறையிலான கட்டமைப்பு வசதிகளை உருவாக்க இது உதவும்.

123. ஷெட்யூல்ட் வகுப்பினரின் நல்வாழ்வுக்காக போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தை புனரமைத்துள்ளோம். இதுதொடர்பாக வழங்கப்படும் மத்திய உதவியையும் நான் அதிகரித்துள்ளேன். ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்த 4 கோடி மாணவர்கள் பயன்பெறும் வகையில் 2025 -2026 வரை ஆறாண்டு காலத்திற்கு 35 ஆயிரத்து 219 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளோம்.

### திறன் வளர்த்தல்

124. 2016 ஆம் ஆண்டு நாங்கள் தேசிய பழகுனர் மேம்பாட்டு திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். இளைஞர்களுக்கு மேலும் அதிக அளவில் பயிற்சி வாய்ப்புகள் கிடைக்கச் செய்வதற்காக பழகுனர் பயிற்சி சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளது. தற்போதுள்ள தேசிய பழகுனர் பயிற்சி பயிற்சி திட்டம், கல்வி கற்ற பின்னரும் பழகுனர்

பயிற்சி கிடைக்க வகை செய்யும் வகையில், பட்டதாரிகளும், பொறியியல் டிப்ளமோ பட்டதாரிகளும் பயன்பெறும் வகையில், மாற்றியமைக்கப்படும். இதற்காக 3000 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

125. திறனுக்கு தேவையான கல்வித் தகுதியை நிர்ணயிப்பது, மதிப்பீடு செய்வது, சான்றிதழ் அளிப்பது, சான்றிதழ் வழங்கப்பெற்ற பணிப் படையை உருவாக்குவது ஆகியவை குறித்த திட்டம் ஒன்று ஐக்கிய அரபு அமீரகத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும். ஜப்பானிய தொழில் மற்றும் தொழில்சார் திறன், தொழில்நுட்பம், அறிவு ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்ளும் வகையில், இந்தியாவிற்கும் ஜப்பானுக்கும் இடையே கூட்டு பயிற்சி திட்டம் ( டி ஐடி பி) செயல்படுத்தப்படுகிறது. இதுபோன்று பிற நாடுகளுடனும் திட்டங்கள் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**5. புதுமை மற்றும் ஆராய்ச்சி வளர்ச்சி**

126. ஜூலை 2019 ல் என்னுடைய பட்ஜெட் உரையில் நான் தேசிய ஆராய்ச்சி அமைப்பு (என்.ஆர்.(எ.ஃப்) குறித்து அறிவித்திருந்தேன். இதற்கான வழிமுறைகளை நாங்கள் ஆயத்தப்படுத்தி உள்ளோம். என் ஆர் எ.ஃப் ஏற்படுத்துவதற்கான ஒதுக்கீடு ஐந்து ஆண்டு காலத்திற்கு 50 ஆயிரம் கோடி ரூபாய். தெரிந்தெடுக்கப்பட்ட தேசிய முன்னுரிமை கொண்ட அம்சங்களுக்கு அதிக கவனம் செலுத்துவதுடன் நாட்டின் ஆராய்ச்சி சூழல் வலுப்பட இது உதவும்.

127. சமீப காலங்களில் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை மிக அதிக அளவில் அதிகரித்துள்ளது. டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்கப்படுத்துவதற்காக 1500 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளேன். டிஜிட்டல் மூலமாக பணப் பரிவர்த்தனை செய்வதை ஊக்கப்படுத்தும் வகையில் ஊக்கத்தொகை அளிப்பதற்காக இத்திட்டம் செயல்படும்.

128. தேசிய மொழிபெயர்ப்பு இயக்கம் என் டி எல் எம் என்ற புதிய முயற்சி ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறோம். அரசு ஆளுமை, கொள்கை தொடர்பான அறிவுச்செல்வம் இணையதளம் மூலமாக பல்வேறு இந்திய மொழிகளில் கிடைக்க இது உதவும்.

129. மத்திய விண்வெளித் துறையின் கீழ் செயல்படும் நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (என் எஸ்ஐ எல்) பொதுத்துறை நிறுவனம் பி எஸ் எல் வி சி எஸ் 51 ஏவப்படுவதை செயல்படுத்தும். பிரேசிலின் அமேசானிய செயற்கைக்கோள் மற்றும் சில சிறிய இந்திய செயற்கை கோள்களையும் இது தாங்கிச் செல்லும்.

130. ககன்யான் மிஷன் இயக்க செயல்பாடுகளில் ஒரு பகுதியாக ஜெனரிக் ஸ்பேஸ் ஃபிளைட் (விண்வெளிப் பயணங்கள்) அம்சங்கள் குறித்து 4 இந்திய விண்வெளி வீரர்களுக்கு ரஷ்யாவில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மனிதர்கள் இல்லாத முதலாவது லான்ச் டிசம்பர் 2021 இல் நிகழும்.

131. நமது பெருங்கடல்களில் உயிருள்ள உயிரற்ற பல ஆதாரங்கள் உள்ளன. இது குறித்து மேலும் அறிந்துகொள்வதற்காக ஆழ்கடல் இயக்கம் ஒன்றுக்காக 4000 கோடிக்கும் அதிகமான தொகை அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தின் மூலம் ஆழ்கடல் ஆய்வு ஆராய்ச்சிகளும் ஆழ்கடல் பல்லுயிர் பாதுகாப்புக்கான திட்டங்களும் மேற்கொள்ளப்படும்.

**6. குறைந்த அளவிலான அரசு அதிக அளவிலான அரசாட்சி ஆளுமை**

132. அவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது ஆறு தூண்களின் இறுதி தூணுக்கு வருகிறேன். நமது அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றான குறைந்த அளவிலான அரசு,, அதிக அளவிலான அரசாட்சி ஆளுமை என்ற கோட்பாட்டில் சீர்திருத்தங்கள் கொண்டு வருவதற்கான திட்டங்கள் குறித்து இதில் குறிப்பிடுகிறேன்.

133. நீதி விரைந்து வழங்கப்பட வேண்டும் என்பதற்காக, கடந்த சில ஆண்டுகளாக நமது ட்ரிப்யூனல்களில் பல்வேறு சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இந்த சீர்திருத்தங்கள் தொடர்கின்றன. ட்ரிப்யூனல்கள் செயலாற்றுவதை முறைப்படுத்துவதற்காக மேலும் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன்.

134. சுகாதாரம் சார் பணியாளர்களுக்கான தேசிய ஆணையம் குறித்த சட்ட மசோதா ஒன்றை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியுள்ளோம். சுகாதாரம் தொடர்பான ஐம்பத்தாறு விதமான பணிகளுக்கான பயனுள்ள, வெளிப்படையான விதிமுறைகளை இது உறுதி செய்யும். இதேபோல் செவிலியர் பணித் துறையிலும் வெளிப்படைத்தன்மை, திறன், ஆளுமை ஆகியவற்றில் சீர் திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக தேசிய செவிலியர் மற்றும் பேறுகால பணியாளர் ஆணையம் குறித்த மசோதா அரசால் அறிமுகப்படுத்தப்படும்.

135. அரசு அல்லது மத்திய பொதுப்பணித்துறை ஆகியவற்றுடன் பல்வேறு ஒப்பந்தங்களை செய்து கொள்பவர்களுக்கு வர்த்தகம் செய்வதை எளிமையாக்கும் வகையில், ஒப்பந்தங்கள் தொடர்பாக ஏற்படும் தகராறுகளுக்கு விரைவில் தீர்வு காண்பதற்காக சமரச வழிமுறை

அமைப்பு ஒன்றை ஏற்படுத்த முன்மொழிகிறேன். இதன் மூலமாக தனியார் முதலீட்டாளர்களுக்கும் ஒப்பந்ததாரர்களுக்கும் நம்பிக்கை ஏற்படும்.

136. இந்திய வரலாற்றில் இப்போது எடுக்கப்பட உள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பு (சென்சஸ்) முதலாவது டிஜிட்டல் முறையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பாக இருக்கும். இந்தப் பணி ஒரு மைல் கல்லாக அமையும். இதற்காக 2021 -22 ஆண்டுக்கு 3778 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளேன்.

137. போர்த்துகீசிய ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்த வைரவிழா ஆண்டை கோவா கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்த கொண்டாட்டங்களுக்காக, கோவா அரசுக்கு, 300 கோடி ரூபாய் வழங்க முன்மொழிகிறேன்.

138. அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்கத்தில் உள்ள தேயிலைத் தொழிலாளர்களின் நலனுக்காக, குறிப்பாக பெண்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்காக, ஆயிரம் கோடி ரூபாய் வழங்க நான் முன்மொழிகிறேன். இதற்கென சிறப்பு திட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

**நிதி நிலைமை**

139. எனது உரையின் பகுதி ஏ பிரிவின் இறுதியான சில பத்திகளில், இந்த அவைக்கு, ஒரு விஷயத்தை கவனத்தில் கொண்டுவர விழைகிறேன். அதாவது நடப்பு நிதி ஆண்டின் துவக்கத்தில், பெருந்தொற்று காரணமாக பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாதிப்பால், வருவாய் குறைவாக இருந்தது. சமுதாயத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட பிரிவினருக்கு குறிப்பாக ஏழைகள், பெண்கள், ஷெட்யூல்ட் வகுப்பினர், ஷெட்யூல்ட் பழங்குடியினருக்கு அடிப்படை நிவாரணங்கள் வழங்குவதற்காக மிக அதிக அளவிலான செலவினம் ஏற்பட்டது.

140. பிற நாடுகளைப் போல அல்லாமல் நாம் பெருந்தொற்று காலத்தின்போது, நிலைமைக்கேற்ப மாற்றிக்கொள்ள உதவும் வகையில், நடுத்தர அளவிலான தொகுதிகளை அறிவித்தோம். சுகாதார நிலைமை சீரடைந்ததும், பொது முடக்கம் மெதுவாக விலக்கிக்கொள்ளப்பட்டது. உள்நாட்டு தேவையை அதிகரிக்கும் வகையில் அரசு செலவினத்தை அதிகரித்தோம். இதன் காரணமாக 2020-21ல் 30. 42 லட்சம் கோடி ரூபாயான பட்ஜெட் மதிப்பீடு செலவினம் 34.50 லட்சம் கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. செலவினத்தில் தரம் உறுதிப்படுத்தப்பட்டது. மூலதனச் செலவினம் 2020- 2021 ல் 4.39 (திருத்திய அமைக்கப்பட்ட மதிப்பீடு) லட்சம் கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2020-21ல் பட்ஜெட் மதிப்பீடு 4.12 லட்சம் கோடியாக இருந்தது.

141. திருத்திய அமைக்கப்பட்ட மதிப்பீடு 2020- 21-ல் நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.5 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அரசு கடன்கள், பல தரப்பு கடன்கள், சிறு சேமிப்பு நிதி, குறுகிய கால கடன்கள் ஆகியவை மூலமாக இதற்கான நிதியைத் திரட்டி உள்ளோம். நமக்கு இதற்காக மேலும் 80 ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். இந்த இரண்டு மாதங்களில் நாம் மீண்டும் சந்தைக்கு செல்வோம். பொருளாதாரம் மீண்டும் தேவையான உத்வேகம் பெறுவதற்காக, 2021- 2022 செலவினங்களுக்கான நமது பட்ஜெட் மதிப்பீடு 34.83 லட்சம் கோடி. இதில் 5.5 4 லட்சம் கோடி மூலதனச் செலவினம். இது 2020- 2021 ஆம் ஆண்டில் பிஇ யை விட 34.5 சதவீதம் அதிகமாகும். பட்ஜெட் மதிப்பீடு 2021- 2022 ல் நிதிப்பற்றாக்குறை ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.8 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்கு சந்தையில் இருந்து பெறப்படும் மொத்த கடன் தொகை சுமார் 12 லட்சம் கோடியாக இருக்கும். நிதி நிலைமையை ஒருங்கிணைக்கும் பாதையில் தொடர்ந்து பயணிப்போம் அதன் மூலமாக 2025-2026குள் நிதிப்பற்றாக்குறை அளவை ஜிடிபியில் 4.5 சதவீதத்துக்கும் குறைவாகக் கொண்டுவர முடியும். இந்த காலகட்டத்தில் படிப்படியாக குறைக்க முடியும். முதலில் சட்டரீதியான அனைத்து வரி செலுத்துவதையும் உறுதி செய்து வரி வருவாயை பெருக்குவது, இரண்டாவதாக, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் நிலங்கள் உட்பட சொத்துக்களை பணமாக்குவது ஆகியவற்றின் மூலமாக நிதி நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வது என்ற நிலையை அடைவோம். நாட்டின் அவசரத் தேவைக்கான நிதி தொகை 500 கோடி ரூபாயில் இருந்து 30000 கோடி ரூபாயாக நிதி சட்ட மசோதா மூலம் அதிகரிக்கப்படும்.

142. 15வது நிதிக்குழு வின் கருத்துக்களின் படி, 2021- 2022 ஆம் ஆண்டுக்கு மாநிலங்கள் மாநிலங்களுக்கான ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி-இல் நிகர கடனாக 4 சதவிகிதம் பெற்றுக்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. இதில் ஒரு பகுதி கூடுதல் மூலதனச் செலவிற்கு செலவிடுவதற்கு ஒதுக்கப்படும். நிபந்தனைகளுக்கு உட்பட்டு கூடுதலாக 0.5 சதவிகிதம் கடன் பெற்றுக் கொள்ளலாம். 2023- 24 ஆம் ஆண்டுக்குள் மாநிலங்கள் 15வது நிதிக்குழு பரிந்துரைகளின் படி, நிதிப் பற்றாக்குறையை ஜி எஸ் டி பி யின் 3 சதவீதமாக குறைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

143. 2019 2020 ஜூலை பட்ஜெட்டில், கூடுதல் பட்ஜெட் ஆதாரங்கள் பற்றிய 27-வது அறிக்கையை நான் அறிமுகப்படுத்தினேன். அதில் இந்திய அரசாங்க திட்டங்களின் நிதிக்காக பல்வேறு அரசு முகமைகள் வாங்கிய கடன்கள்

பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டன. இந்தக் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கான சுமை அரசின் மீது இருந்தது.

எனது 2020-2021 நிதிநிலை அறிக்கையில் அரசு இவற்றுக்கு அளித்த கடன் பற்றிய விபரங்கள் உட்பட பல்வேறு விவரங்களையும் அளித்திருந்தது. இந்த அறிக்கை 27, மேலும் விரிவு படுத்தப்பட்டது. இந்திய உணவுக் கழகம் (எ்ஃப் சி ஐ) நிறுவனத்திற்கு உணவு மான்யத்திற்காக வழங்கப்படும் தேசிய சமூக பாதுகாப்பு நிதியம் (என் எஸ் எஸ் எ்ஃப்) கடன் உதவியை நிறுத்தி விடுவதற்கு நான் முன்மொழிகிறேன். இதற்கேற்ப திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடு (ஆர் இ) 2020- 21 மற்றும் பட்ஜெட் மதிப்பீடு (பி இ) 2021- 22ல் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. கூடுதல் பட்ஜெட் ஆதாரங்கள் பற்றிய விவரங்கள் இணைப்பு ஆறில் (அனெக்சர் VI) உள்ளன.

144. எ்ஃப் நிதிப் பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை ஆர் பி எம் சட்டத்தின்படி 2020- 2021 31 மார்ச்சுக்குள் நிதிப்பற்றாக்குறை ஜிடிபியில் 3 சதவீதமாக இருக்க வேண்டும் என்பதை நாம் அறிவோம். இச்சட்டத்தின் பிரிவு 4 (5) மற்றும் 7 (3) (பி) படி எ்ஃப் ஆர் பி எம் ஆவணங்களின் ஒரு பகுதியாக டிவிசன் அறிக்கையை இந்த அவையின் மேஜையில் சமர்ப்பிக்கிறேன். முற்றிலும் எதிர்பாராத, முன்னோடி எதுவும் இல்லாத சூழ்நிலைகளில் இந்த ஆண்டு நேரிட்ட நிகழ்வுகளின் காரணமாக இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது.

145. ஏற்கனவே நான் குறிப்பிட்டுள்ளது போல நிதிப்பற்றாக்குறையை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேசமயம் இலக்கை அடைவதற்காக, எ்ஃப் ஆர் பி எம் சட்டத்திற்கான சட்டத் திருத்தத்தையும் நான் அறிமுகப்படுத்த உள்ளேன்.

146. 9 டிசம்பர் 2020 அன்று, 15வது நிதிக்குழு, 2021-2026 வரையிலான காலத்திற்கான தனது இறுதி அறிக்கையை குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்தது. நிதிக்குழுவின் அறிக்கையையும் விளக்க விரிவுரையும் நாடாளுமன்றத்தில் அரசு சமர்ப்பித்தது. மாநிலங்களின் பங்கு 41% ஆகவே வைத்துக் கொள்ளப்பட்டது. நிதி கூட்டாட்சியில் கொண்டுள்ள உறுதிப்பாட்டை நாங்கள் அங்கீகரிக்கிறோம் எனவே இந்த பரிந்துரையைப் பின்பற்ற உத்தேசித்துள்ளோம். 14-வது நிதிக் குழுவின் படி ஜம்மு காஷ்மீர் தனி மாநிலமாக பங்கு பெற்றுக் கொண்டிருந்தது. தற்போது ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களுக்கும் மத்திய அரசு நிதி பங்கீடு அளிக்கும். நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் 2021- 2022 ல் 17 மாநிலங்களுக்கு வருவாய் பற்றாக்குறை மானியமாக ஒரு லட்சத்து 18452

கோடி ரூபாய் நான் வழங்கியுள்ளேன். 2020 -2021ல் 14 மாநிலங்களுக்கு 74 ஆயிரத்து 340 கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

இப்போது நான் எனது உரையின் பி பகுதிக்குச் செல்கிறேன்

**பகுதி பி**

147. மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பெருந்தொற்று மற்றும் அதன் பின்விளைவுகள் ஆகிய மிக தீவிர சவாலை உலகம் எதிர்கொண்டு வருகிறது. இந்த கடினமான காலத்தில், பல பொருளாதாரங்கள் மீண்டு வருகின்ற போராட்டத்தில் உள்ளன. ஆனால் நம்முடைய மக்களும் நம்முடைய தொழில் துறையும் மிக குறிப்பிடத்தக்க உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

148. ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல பெருந்தொற்று காலத்திற்குப் பிறகு புதிய உலக முறைமை உருவாகி வருகிறது. இதில் ஆசியா முதன்மை நிலையில் இருக்கும். அப்போது இந்தியா தலைமைப் பொறுப்பில் இருக்கும். இத்தகைய சூழலில் நமது வரி அமைப்பு வெளிப்படையானதாகவும், திறன் உள்ளதாகவும், முதலீட்டை வளர்ப்பதாகவும், வேலைவாய்ப்பைப் பெருக்குவதாகவும் இருக்க வேண்டும். அதேசமயம் அது வரி செலுத்துவோர் மீது குறைந்த அளவிலான சுமையை வைப்பதாக இருக்க வேண்டும்.

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**

**வகுத்தலும் வல்லதரசு**

ஒரு அரசன் அல்லது ஆட்சியாளன் செல்வத்தை உருவாக்குபவன் செல்வத்தை சேகரிப்பவன்; அச் செல்வத்தைப் பாதுகாப்பவன்; பொதுவான நற்காரியங்களுக்கு அதை விநியோகிப்பவன்

திருக்குறள் 385

**நேரடி வரி முன்மொழிவுகள்**

149. இதைக் கருத்தில் கொண்டு நமது வரி செலுத்துபவர்களும், பொருளாதாரமும் பயனடையும் வகையில் நமது அரசு நேரடி வரி அமைப்பில் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. பெருந்தொற்றுக்கு சில மாதங்களுக்கு முன், முதலீடுகளை ஈர்ப்பதற்காக, உலகிலேயே மிகக் குறைந்த வரியாக இருக்க வேண்டும் என்பதற்காக கார்ப்பரேட் வரியை குறைத்தோம். ஊக்கத் தொகை பங்கீடு டிவிடெண்ட் டிஸ்ட்ரிபியூஷன் வரி என்பதும் ரத்து செய்யப்பட்டது. வரி விலக்குகளை அதிகரித்ததன் மூலமாக சிறு அளவில் வரி செலுத்துவோரின் வரிச்சுமை

குறைந்தது. 2020 ஆம் ஆண்டில் வரி செலுத்துவோர் எண்ணிக்கை 6.48 கோடியாக அதிகரித்தது. 2014 ஆம் ஆண்டில் இது 3.31 கோடியாக இருந்தது.

150. நேரடி வரி நிர்வாகத்தில் நேரடி சந்திப்புகள் அற்ற மதிப்பீடு, முகமற்ற மேல்முறையீடு ஆகியவற்றை நாம் சமீபத்தில் அறிமுகப்படுத்தி இருந்தோம். வரி நிர்வாகம், சட்டப்படி நடப்பதை எளிமைப் படுத்துதல், வழக்குகளைக் குறைத்தல் ஆகியவை தொடர்பாக பல்வேறு அம்சங்களை எளிமைப்படுத்துவதற்கான மேலும் பல நடவடிக்கைகளை எடுக்க விழைகிறேன்.

**மூத்த குடிமக்களுக்கு நிவாரணம்**

151. மூத்த குடிமக்களுக்கு எனது வணக்கங்களை தெரிவித்து அதன் பிறகு எனது நேரடி வரி முன்மொழிவுகளை தொடங்குகிறேன். மூத்த குடி மக்களில் பெரும்பாலானவர்கள் தங்களுடைய அடிப்படை வசதிகள் பலவற்றை விட்டுக்கொடுத்து நமது நாட்டிற்காக பாடுபட்டிருக்கிறார்கள்.

152. இப்போது நமது நாடு விடுதலை அடைந்து எழுபத்தைந்தாவது ஆண்டில் இருக்கும் இந்த சமயத்தில் நாம் மேலும் புத்துணர்ச்சியுடன் நமது முயற்சிகளை மேற்கொள்ளும் சமயத்தில், 75 வயதுக்கும் அதற்கும் அதிகமான வயதுள்ள மூத்த குடிமக்கள் மீதான சுமையை குறைக்க வேண்டும். பென்ஷன் மற்றும் வட்டி வருவாய் மட்டுமே உள்ள மூத்த குடிமக்கள் வருமான வரி தாக்கல் செய்ய விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன். எந்த வங்கி அவர்களுக்கு பணத்தை அளிக்கிறதோ அந்த வங்கி வருமானத்திற்கான தேவையான வரியை பிடித்தம் செய்து கொள்ளும்.

**வருமானவரி வழிமுறைகளின் காலம் குறைப்பு**

153. மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, தற்போது வருமானவரி மதிப்பீடு என்பது ஓராண்டு வரை மீண்டும் பரிசீலிக்கப்படலாம். மிகத் தீவிரமான வரி மோசடி வழக்குகளில் பத்தாண்டு காலம் வரை பரிசீலிக்கப்படலாம். இதனால் வரி செலுத்துபவர்கள் மிக நீண்ட காலத்திற்கு நிச்சயமற்ற நிலையில் இருக்க வேண்டியிருக்கிறது.

154. எனவே இந்த கால அவகாசத்தை தற்போதைய ஆறு ஆண்டுகாலம் என்பதிலிருந்து மூன்று ஆண்டுகளாகக் குறைக்க முன்மொழிகிறேன். மிகத் தீவிரமான வரி ஏய்ப்பு வழக்குகளிலும் ஒரு ஆண்டில் 50 லட்சம் அல்லது அதற்கும் மேற்பட்ட வருமானத்தை மறைத்திருந்த ஆதாரம் இருந்தால் மட்டுமே 10 ஆண்டுகளுக்குள் மீண்டும் மதிப்பீடு செய்யப்படலாம்.

வருமான வரித்துறையில் மிக உயர்ந்த நிலை அதிகாரியான முதன்மை தலைமை ஆணையரின் ஒப்புதல் பெற்ற பிறகே இது செய்யப்பட வேண்டும்.

**பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கான குழு அமைப்பு**

155. மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, தற்போதைய வரி அமைப்புக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் உள்ள வழக்குகளை குறைப்பது பற்றி அரசு தீர்மானமாக உள்ளது.

156. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள நேரடி வரி தொடர்பான வழக்குகளை ஒரே முறையில் தீர்த்துக் கொள்வதற்காகவும் இதற்காக அவர்களது நேரமும் ஆதாரங்களும் விரயமாவதில் இருந்து நிவாரணம் அளிக்கவும் வாய்ப்பளிக்கும் வகையில் விவாத் சே விஷ்வாஸ் என்ற திட்டத்தை அரசு கொண்டு வந்தது. இத்திட்டத்தின்கீழ் 85 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான வழக்குகள் குறித்து ஒரு லட்சத்து 10 ஆயிரத்துக்கும் அதிகமான வரி செலுத்துபவர்கள் இத்திட்டத்தின் கீழ் நிவாரணம் பெற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

157. சிறு அளவில் வரி செலுத்துபவர்களின் வழக்குகளை மேலும் குறைப்பதற்காக, அவர்களுக்கென, பிரச்னைகளுக்கான தீர்வுக் குழு ஒன்றை அமைக்க முன்மொழிகிறேன். திறன், வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் இது நேரடித் தொடர்பற்றதாக இருக்கும். வருமான வரி விதிப்புக்குட்பட்ட வகையில் 50 லட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களும், 10 லட்சம் ரூபாய் வரை பிரச்னைகளுக்கு உட்பட்ட வருமானம் உள்ளவர்களும் இந்த குழுவை அணுக தகுதி பெற்றவர்கள்.

**முகமற்ற ஐ டி ஏ டி**

158. சட்டப்படி நடப்பதை எளிமைப்படுத்துவதற்கும், தன்னிச்சையாக செயல்படுவதைக் குறைக்கும் வகையிலும், வரி செலுத்தும் முறை நேரடித் தொடர்பற்றதாக உருவாக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். நேரடித் தொடர்பற்றதாக மதிப்பீடு மற்றும் மேல்முறையீடு இந்த ஆண்டு ஏற்கனவே அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

159. வருமான வரி தொடர்பான அடுத்தகட்ட முறையீடு என்பது வருமான வரி மேல்முறையீட்டு டிரிப்யூனல் ஆகும். இந்த டிரிப்யூனல் நேரடித் தொடர்பற்றதாக இருக்க வேண்டும் என்று நான் இப்போது முன்மொழிகிறேன். தேசிய முகமற்ற வருமானவரி மேல்முறையீட்டு

டிரிப்யூனல் மையம் அமைக்கப்படும். இந்த டிரிப்யூனலுக்கும் மேல் முறையீட்டாளருக்கும் இடையேயான அனைத்து தொடர்புகளும் எலக்ட்ரானிக் முறையில் நடைபெற வேண்டும். நேரடி விசாரணை வீடியோ கான்பரன்சிங் மூலமாக நடைபெறும்.

## வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு சலுகைகள்

160. வெளிநாடு வாழ் இந்தியர்கள் இந்தியாவிற்கு திரும்பும்போது அவர்கள் தங்களது வெளிநாடு ஓய்வூதிய கணக்குகளில் சேர்ந்த வருமானம் தொடர்பான பிரச்னைகள் உள்ளன. இதற்கு பொதுவான காரணம் நாடுகளுக்கிடையிலான வரி காலகட்டங்களில் உள்ள வேறுபாடுதான். வெளிநாடுகளில் இந்திய வரிகளுக்கு தேவையான சலுகைகளைப் பெறுவதிலும் அவர்களுக்கு சிரமங்கள் உள்ளன. இவ்வாறு இரட்டை வரி விதிப்பு தொடர்பாக ஏற்படும் பிரச்னைகளை விளக்கும் வகையிலான விதிமுறைகளை அறிவிக்க நான் முன்மொழிகிறேன்.

## தணிக்கையில் இருந்து விலக்கு

161. தற்போது பணப்புழக்கம் ஒரு கோடிக்கும் அதிகமாக இருந்தால் கணக்குகள் தணிக்கை செய்யப்படும். பிப்ரவரி 2020 பட்ஜெட்டில் நான் இந்தத் தொகையை தங்களது அனைத்து பரிவர்த்தனைகளில் 95 சதவிகித பரிவர்த்தனைகளை டிஜிட்டல் மூலமாக செய்பவர்களுக்கு 5 கோடியாக அதிகரித்திருந்தேன். டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதற்காகவும், சட்டப்படி நடந்து கொள்வதில் சுமையைக் குறைப்பதற்காகவும் 5 கோடி ரூபாய் என்ற தொகையை 10 கோடி ரூபாய் என்று அதிகரிக்க முன்மொழிகிறேன்.

## ஊக்கத் தொகை டிவிடெண்ட் வரியிலிருந்து நிவாரணம்

162. முதலீட்டை ஊக்குவிப்பதற்காக ஊக்கத் தொகை பங்கீட்டு (டிவிடெண்ட் டிஸ்ட்ரிபியூஷன்) வரியை சென்ற பட்ஜெட்டில் நான் ரத்து செய்தேன். டிவிடெண்ட் தொகைக்கு பங்குதாரர்கள் வரி செலுத்த வேண்டியிருந்தது. ஆர் இ ஐ டி/ ஐஎன் விஐடி ஆகியவற்றுக்கான டிவிடெண்ட் தொகைக்கு டி டி எஸ் விலக்கு அளிக்க முன்மொழிகிறேன். அட்வான்ஸ் டாக்ஸ் செலுத்துவதற்காக பங்குதாரர்களால் டிவிடெண்ட் வருமானம் குறித்து முன்கூட்டியே மதிப்பிட முடியாது என்பதால், டிவிடெண்ட் அறிவிக்கப்பட்ட பிறகு அல்லது தொகை வழங்கப்பட்ட பிறகு மட்டுமே டிவிடெண்ட் வருமானம் அட்வான்ஸ் டாக்ஸ் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன். வெளிநாட்டு பங்கு முதலீட்டாளர்கள் பயன்பெறும் வகையில் டிவிடெண்ட்

வருமானத்தின் மீதான வரி லோயர் ட்ரீட்டி விகிதப்படி அமைய நான் முன்மொழிகிறேன்.

**கட்டமைப்பு பிரிவில் அன்னிய முதலீட்டை ஈர்ப்பது**

163. சென்ற ஆண்டு கட்டமைப்புத் துறையில் அன்னிய முதலீட்டை ஈர்ப்பதற்காக சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அன்னிய சவரின் வெல்த் நிதியங்கள் மற்றும் ஓய்வூதிய நிதியங்களுக்கு, இந்திய கட்டமைப்பு முதலீட்டில் இருந்து வரும் வருமானத்திற்கு 100 சதவிகித வரிவிலக்கு அளித்திருந்தோம். இதில் சில நிபந்தனைகளை பூர்த்தி செய்வதில் சில நிதியங்களுக்கு சிரமங்கள் உள்ளதை அறிந்தோம். அதிக எண்ணிக்கையில் இந்தியாவில் நிதியங்கள் முதலீடு செய்வதை உறுதிப்படுத்துவதற்காக தனியார் நிதியத்திற்கு தடை, வர்த்தக செயல்பாடுகளுக்கான கட்டுப்பாடுகள், கட்டமைப்புத் துறையில் நேரடி முதலீடு போன்றவற்றுக்கான நிபந்தனைகளில் சில நிபந்தனைகளைத் தளர்த்துவது என்று நான் முன்மொழிகிறேன்.

164. ஜீரோ கூப்பன் பாண்ட் வெளியீடு மூலமாக கட்டமைப்பு நிதியை அனுமதிப்பதற்காக கட்டமைப்பு கடன் நிதியங்கள் வரி திறன்கொண்ட ஜீரோ கூப்பன் பத்திரங்களை வெளியிடுவதன் மூலமாக நிதி திரட்டலாம் என்று நான் முன்மொழிகிறேன்.

**வாங்கக்கூடிய விலையிலான வீடுகள்/ வாடகை வீடுகள்**

165. அனைவருக்கும் வீடு மற்றும் வாங்கக்கூடிய விலையிலான வீடு என்பவை முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய அம்சங்கள் என்று இந்த அரசு பார்க்கிறது. ஜூலை 2019 பட்ஜெட்டின் போது நான், வீடு வாங்குவதற்காக வாங்கப்பட்ட கடனில் வரியில் இருந்து ஒன்றரை லட்சம் ரூபாய் வரை கூடுதலாக கழித்துக் கொள்ளலாம் என்று அறிவித்திருந்தேன். இதற்கான தகுதி பெற மேலும் ஓராண்டு காலத்திற்கு 31 மார்ச் 2022 வரை கால அவகாசம் அளிக்க முன்மொழிகிறேன். 31 மார்ச் 2022 வரையிலான காலத்தில் வாங்கப்பட்ட வீட்டுக் கடன்களுக்கு இந்த கூடுதல் கழிவுத் தொகை கிடைக்கும். இதனால் வாங்கக் கூடிய விலையில் வீடுகள் கிடைக்கும்.

166. வாங்கக் கூடிய விலையில் வீடுகள் தொடர்ந்து கிடைக்கச் செய்வதற்காக 31 மார்ச் 2022 வரையிலான காலத்திற்கு ஓராண்டு காலத்திற்கு வாங்கக் கூடிய விலையிலான வீட்டுவசதி திட்டங்களுக்கு வரி விடுமுறை அளிக்கப்படும்.

167. புலம்பெயர் தொழிலாளர்கள் தங்களால் செலுத்தக் கூடிய அளவிற்கு வாடகை வீட்டில் இருக்க வகை செய்யும் வகையில் இத்தகைய வீடுகள் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். இதற்காக வாடகை செலுத்தக் கூடிய வகையிலான வாடகை வீடு திட்டங்களுக்கு வரி விலக்கு அளிக்க நான் முன்மொழிகிறேன்.

**சர்வதேச நிதிச்சேவை மையங்கள் (ஐ எப் எஸ் சி)-க்கு வரி ஊக்கத்தொகை**

168. இந்த உரையின் பகுதி ஏவில் நான் குறிப்பிட்டது போல, கிப்ட் சிட்டி இல் சர்வதேச நிதி சேவை மையத்தை உலக அளவிலான நிதி தளமாக மாற்ற அரசு உறுதி பூண்டுள்ளது. ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள வரி ஊக்கத்தொகைகளுக்குக் கூடுதலாக விமானங்களை குத்தகைக்கு எடுக்கும் நிறுவனங்களுக்கு மூலதன ஆதாயம் மீது வரி விடுமுறை, வெளிநாடுகளிலிருந்து குத்தகைக்கு எடுத்தவர்கள் குத்தகைக்கு விட்டவர்களுக்கு செலுத்தும் விமான குத்தகை வாடகை கட்டணத்தின் மீதான வரிக்கு விலக்கு, வெளிநாட்டு நிதியை ஐ எஃப் சி யில் வைப்பதற்கு வரி ஊக்கத்தொகை, ஐ எஃப் எஸ் சி யில் அமைந்துள்ள வெளிநாட்டு வங்கிகளின் மூலதனப் பிரிவுகளுக்கு வரிவிலக்கு அளிப்பது ஆகியவற்றையும் நான் முன்மொழிகிறேன்.

**முன்கூட்டியே வருமானவரி கணக்கு தாக்குதல் படிவங்களை நிரப்புதல்**

169. மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, வரி செலுத்துபவர்கள் சட்டப்படி நடப்பதை எளிமையாக்கும் வகையில் ஊதியம் மூலம் கிடைத்த வருமானம், செலுத்தப்பட்ட வரி, டி டி எஸ் போன்றவை குறித்த விவரங்கள் வருமான வரி தாக்கல் படிவங்களில் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டு கிடைக்கிறது. பட்டியலிடப்பட்ட செக்யூரிட்டிகள், டிவிடெண்ட் வருமானம், வங்கிகள் அஞ்சலகங்கள் ஆகியவற்றில் இருந்து கிடைத்த வட்டி போன்ற விவரங்களும் ஏற்கனவே பூர்த்தி செய்யப்படும்.

**சிறிய டிரஸ்ட் களுக்கு நிவாரணம்**

170. சிறிய அளவிலான, மருத்துவமனைகள் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை நடத்தும், அறக்கட்டளைகளுக்கு சட்டரீதியாக பல்வேறு சட்டங்களை பின்பற்றுவதில் உள்ள சுமைகளைக் குறைக்க எண்ணியுள்ளோம். ஆண்டு வருவாய் ஒரு கோடிக்கும் அதிகமாக இல்லாத அறக்கட்டளைகளுக்கு ஒட்டுமொத்தமாக விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இந்தத் தொகை இப்போது 5 கோடி ரூபாயாக அதிகரிப்பதை நான் முன்மொழிகிறேன்.

**தொழிலாளர் நலன்**

171. சேமநல நிதி, ஓய்வுகால நிதி, இதர சமூக பாதுகாப்பு நிதிக்காக நிறுவன உரிமையாளர்கள் தொழிலாளர்களிடம் இருந்து பணத்தை பிடித்தம் செய்து கொள்கிறார்கள்; ஆனால் இந்தப் பங்கை குறிப்பிட்ட காலத்துக்குள் செலுத்துவதில்லை என்பதைக் கவனத்தில் கொண்டோம். பணியாளர்களைப் பொறுத்தவரை இது வட்டி இழப்பு அல்லது வருமான இழப்பு. பிற்காலத்தில் நிறுவன உரிமையாளர் நஷ்டம் அடைந்தால், தொழிலாளர்களுக்கு இந்த இழப்பு நிரந்தரமாகிவிடும்

172. ஊழியர்களின் பங்களிப்பு உரிய நேரத்தில் டெபாசிட் செய்யப்படவேண்டும் என்பதை உறுதி செய்ய, தாமதமாக டெபாசிட் செய்யப்படும் ஊழியர்கள் பங்களிப்பு, நிறுவன உரிமையாளரால் கழித்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது என நான் தெரிவிக்கிறேன்.

**ஸ்டார்ட் அப்களுக்கு ஊக்கத்தொகை**

173. நாட்டில் ஸ்டார்ட் அப்களை ஊக்குவிக்கும் வகையில், ஸ்டார்ட் அப்களுக்கான வரிச் சலுகை காலத்தை மேலும் ஓராண்டுக்கு, 2022 மார்ச் 31 வரை நீட்டித்து அறிவிக்கிறேன். மேலும், ஸ்டார்ட் அப்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கும் வகையில், ஸ்டார்ட் அப்களில் மூலதன ஆதாய விலக்கும், 2022 மார்ச் 31-ம் தேதி வரை ஓராண்டுக்கு நீட்டிக்கப்படும்.

**மறைமுக வரி முன்மொழிவுகள்**

**ஜிஎஸ்டி**

174. எனது மறைமுக வரி முன்மொழிவுகளுக்கு வருவதற்கு முன்பு, ஜிஎஸ்டி குறித்து விளக்கமளிக்க விரும்புகிறேன். ஜிஎஸ்டி நடைமுறைக்கு வந்து நான்காண்டுகளாகி விட்டது. அதனை எளிமைப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை நாம் எடுத்துள்ளோம். அதில் சில நடவடிக்கைகள் வருமாறு;

i. எஸ்எம்எஸ் மூலம் கணக்கு தாக்கல் இல்லாத விவரத்தைத் தெரிவிப்பது
ii. சிறு வரி செலுத்துவோருக்கு மாதாந்திர வரி செலுத்துதல் மற்றும் காலாண்டு கணக்கு தாக்கல்
iii. மின்னணு இன்வாய்ஸ் முறை
iv. எடிட் செய்யக்கூடிய ஜிஎஸ்டி ரிட்டர்னை முன்கூட்டியே தாக்கல் செய்தல்
v. ரிட்டர்ன் தாக்கல் செய்வதில் தெளிவு

ஜிஎஸ்டிஎன் முறை திறனும் அதிகரிக்கப்பட்டுள்ளது. வரி ஏய்ப்பவர்கள், போலி பில் தயாரிப்பவர்களைக் கண்டுபிடிக்க தீவிர பகுப்பாய்வும், செயற்கை நுண்ணறிவும் பயன்படுத்தப்படுகிறது. அவர்களுக்கு எதிராக சிறப்பு நடவடிக்கைகள் துவங்கப்பட்டுள்ளன.

175. இதன் பயன்களே இவற்றைத் தெளிவு படுத்தும். கடந்த சில மாதங்களாக சாதனை அளவிலான வசூலை நாம் செய்துள்ளோம்.

**176.** ஜிஎஸ்டி கவுன்சில் சிக்கலான விஷயங்களை களைந்துள்ளது. அக்கவுன்சிலின் தலைவர் என்ற முறையில், ஜிஎஸ்டியை மேலும் சுமுகமாக்க இயன்ற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என நான் இந்த அவைக்கு உறுதி அளிக்க விரும்புகிறேன். மாற்று தீர்வை கட்டமைப்பு போன்ற குறைபாடுகள் களையப்படும்.

## சுங்கத்தீர்வை குறைப்பு

177. நமது சுங்கத்தீர்வை கொள்கை, உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்துவதாகவும், உலக மதிப்பு சங்கிலிக்கு உதவி, சிறப்பான ஏற்றுமதிக்கு உதவுவதாகவும் இரட்டை நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும். மூலப் பொருட்களை எளிதில் அணுகும் வகையிலும், மதிப்பு கூட்டு பொருட்களை ஏற்றுமதி செய்வதை ஊக்குவிக்கும் வகையிலும் இருக்க வேண்டும்.

178. இதை நோக்கி, கடந்த ஆண்டு, சுங்கத்தீர்வை கட்டமைப்பை சீரமைக்கத் தொடங்கினோம். காலத்திற்கு ஒவ்வாத 80 வரி விலக்குகளை ரத்து செய்தோம். இந்த சீரமைப்புக்கு அபரிமிதமான ஆலோசனைகள் வழங்கிய அனைவருக்கும் நான் நன்றி தெரவிக்கிறேன். இந்த ஆண்டு, 400-க்கும் மேற்பட்ட பழைய வரி விலக்குகளை ஆய்வு செய்ய உத்தேசித்துள்ளோம். விரிவான ஆலோசனைகள்மூலம் இதனை நாம் மேற்கொள்வோம். 2021 அக்டோபர் 1-ம் தேதி முதல், சிதைவுகள் இல்லாத, சீரமைக்கப்பட்ட சுங்கத் தீர்வை கட்டமைப்பை கொண்டு வருவோம். புதிய சுங்கத் தீர்வை விலக்கு, இனிமேல், அறிவிக்கப்படும் நாளில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்கு மார்ச் 31-வரை செல்லுபடியாகும்.

## மின்னணு மற்றும் மொபைல் போன் தொழில்

179. உள்நாட்டு மின்னணு உற்பத்தி அபரிமிதமான முறையில் வளர்ந்துள்ளது. இப்போது நாம் கைபேசிகள் மற்றும் மின்னூக்கிகளை ஏற்றுமதி செய்து வருகிறோம். பெரும் உள்ளூர் மதிப்பு கூட்டுக்கு, மின்னூக்கிகள், கைபேசி உதிரி பாகங்களுக்கான சில வரிச்சலுகைகளை திரும்பப் பெற உத்தேசித்துள்ளோம். மேலும், சில கைபேசி உதிரி பாகங்களுக்கு வரி இல்லை என்ற நிலையில் இருந்து மிதமான 2.5 % என்ற அளவில் வரி இருக்கும்.

## இரும்பு மற்றும் உருக்கு

180. அண்மையில் இரும்பு, உருக்கு விலைகள் மிக அதிகமாக உயர்ந்ததால், சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் மற்றும் இதர பயன்பாட்டு தொழில் துறை மிகவும் பாதிக்கப்பட்டது. ஆகவே, உலோகம் அல்லாத பொருட்கள், உலோகப் பொருட்கள், துருப்பிடிக்காத உருக்கு ஆகியவற்றுக்கு ஒரே சீராக 7.5 % என்ற வகையில் வரிக்குறைப்பு செய்துள்ளோம். உலோக மறு சுழற்சியாளர்களுக்கு, அதிகமாக எம்எஸ்எம்இ-க்களுக்கு, நிவாரணம் அளிக்கும் வகையில், இரும்புக் கழிவுகள் மீதான தீர்வையை 2022 மார்ச் 31 வரை நான் ரத்து செய்கிறேன். மேலும், சில உருக்கு பொருட்கள் குறித்த ஏடிடி, சிவிடி ஆகியவற்றையும் நான் திரும்பப் பெறுகிறேன். தாமிர மறு சுழற்சியாளர்களுக்கும் நிவாரணம் வழங்கும் வகையில், தாமிரக் கழிவுகள் மீதான தீர்வையை 5 சதவீதத்தில் இருந்து 2.5 சதவீதமாக குறைத்துள்ளேன்.

## ஜவுளி

181. ஜவுளித் துறை வேலைவாய்ப்பை உருவாக்குவதுடன், பொருளாதாரத்துக்கு கணிசமான முறையில், பங்களிக்கிறது. மனிதர்கள் உருவாக்கும் ஜவுளிகளுக்கான கச்சாப் பொருட்களுக்கு தீர்வையைக் குறைக்க வேண்டியது அவசியமாகும். தற்போது, பாலியஸ்டர் மற்றும் மனிதர்கள் உருவாக்கும் இதர நார்ப் பொருட்களுக்கு இணையாக, நைலானைக் கொண்டு வந்துள்ளோம். காப்ரோலேக்டம், நைலான் சிப்ஸ்கள், நைலான் நார், நூல் ஆகியவற்றுக்கான பிசிடி விகிதத்தை ஒரே சீராக 5% என்ற அளவில் குறைத்துள்ளோம். இது ஜவுளித் துறை, எம்எஸ்எம்இ-க்கள் மற்றும் ஏற்றுமதிக்கு பெரிதும் உதவும்.

## ரசாயனம்

**182**. உள்ளூர் மதிப்பு கூட்டு முயற்சியை ஊக்குவிக்கவும், தலைகீழ் மாற்றத்தை நீக்கவும், ரசாயனங்கள் மீதான தீர்வை விகிதத்தை நாங்கள் மாற்றியமைத்துள்ளோம். மற்ற பொருட்கள் தவிர, நாப்தா மீதான சுங்கத் தீர்வையை 2.5% ஆகக் குறைத்துள்ளோம்.

## தங்கம், வெள்ளி

**183.** தங்கம், வெள்ளி ஆகியவற்றுக்கு தற்போது அடிப்படையான சுங்கத் தீர்வையான 12.5 % விதிக்கப்படுகிறது. 2019 ஜூலை மாதம் 10 சதவீதத்திலிருந்து உயர்த்தப்பட்டதில் இருந்து, இந்த உலோகங்களின் விலை கணிசமாக அதிகரித்துள்ளது. முந்தைய விலைக்கு அருகில் இதைக் கொண்டு வரும் வகையில், தங்கம், வெள்ளி ஆகியவற்றின்

தீர்வையைக் குறைத்துள்ளோம்.

### புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

184. பகுதி ஏ-யில் சூரிய சக்தி வளம் இந்தியாவில் பெருமளவு உள்ளதைக் குறிப்பிட்டுள்ளோம். உள்நாட்டு நிறுவு திறனை கட்டமைக்க, சூரிய சக்தி மின்னூக்கிகள் மற்றும் தகடுகளைப் படிப்படியாக உற்பத்தி செய்ய அறிவிக்கை வெளியிடுவோம். தற்போதைக்கு, உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க, சூரியசக்தி இன்வெர்ட்டர்களுக்கு தீர்வையை 5 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாகவும், சூரியசக்தி விளக்குகளுக்கு 5-ல் இருந்து 15 சதவீதமாகவும் உயர்த்தியுள்ளோம்.

### மூலதன உபகரணம் மற்றும் வாகன உதிரி பாகங்கள்

**185.** கனரக மூலதன உபகரணங்கள் உற்பத்தியில் உள்நாட்டில் அபரிமிதமான ஆற்றல் வளம் உள்ளது. அதன் விலை கட்டமைப்பை விரிவாக ஆய்வு செய்யவுள்ளோம். இருப்பினும், சில பொருட்களுக்கு சுங்கத் தீர்வையை உடனடியாக மாற்றியமைக்க உள்ளோம். சுரங்கம் தோண்டும் எந்திரத்தின் மீதான வரி விலக்கைத் திரும்பப் பெற உத்தேசித்துள்ளோம். இனி அதற்கு 7.5 சதவீதம் சுங்கத் தீர்வை விதிக்கப்படும். அதன் பாகங்களுக்கு 2.5% தீர்வை விதிக்கப்படும். சில வாகன பாகங்களுக்கான சுங்கத் தீர்வையையும் 15 சதவீதம் அளவுக்கு உயர்த்தியுள்ளோம். பொதுவான வாகன பாகங்களுக்கு இணையாக இது இருக்கும்.

### சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் (எம்எஸ்எம்இ)

186. சிறு, குறு நடுத்தர தொழில்களுக்கு பயன் கிட்டும் வகையில், சில மாற்றங்களை செய்ய நாங்கள் உத்தேசித்துள்ளோம். உருக்கு திருகாணிகள் மீதான வரியை 10 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்தியுள்ளோம். இறால் தீவனத்திற்கு 5-லிருந்து 15 சதவீதமாக தீர்வை அதிகரிக்கப்படுகிறது. ஆயத்த ஆடைகள், தோல், கைவினைப் பொருட்கள் ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், வரி அல்லாத பொருட்கள் மீதான இறக்குமதி வரி விலக்கை சீரமைக்கிறோம். அநேகமாக, இந்தப் பொருட்கள் அனைத்தும் நமது சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களால் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. சில வகை தோல் பொருட்கள் அதிக அளவிலும், தரமாகவும் பெரும்பாலும் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களால் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுவதால், அவற்றுக்கான வரி விலக்குகளை திரும்பப் பெறுகிறோம். தயாரிக்கப்பட்ட செயற்கை கற்கள் உற்பத்தியை உள்நாட்டில் ஊக்குவிப்பதற்காக, சுங்கத் தீர்வையை நாங்கள் உயர்த்தியுள்ளோம்.

**வேளாண் பொருட்கள்**

187. விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில், பருத்திக்கு இதுவரை இல்லாமல் இருந்த சுங்கத் தீர்வை 10 சதவீதம் அளவுக்கும், கச்சாப் பட்டு, பட்டு நூல் ஆகியவற்றுக்கு 10 %_ல் இருந்து 15% ஆகவும் உயர்த்தப்படுகிறது. வீரியம் குறைந்த எத்தில் ஆல்கஹாலுக்கு வரிச் சலுகை திரும்பப் பெறப்படுகிறது. தற்போது, சோளத் தவிடு, அரிசித் தவிடு புண்ணாக்கு, கால்நடை உணவுப் பொருட்கள் போன்றவற்றின் தீர்வை 15 சதவீதம் அளவுக்கு திருத்தியமைக்கப்படுகிறது.

188. நமது உற்பத்தியைப் பெருக்குவதற்கும், வேளாண் உற்பத்தி பொருட்களை சிறந்த முறையில் பாதுகாத்து பதப்படுத்துவதற்கும், வேளாண் உள்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டிய உடனடி தேவை உள்ளது. இது விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கும். இதற்கான வளங்களை கண்டறியும் வகையில், சிறு எண்ணிக்கையிலான பொருட்களுக்கு, வேளாண் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு தீர்வை என்னும் சிறு வரியை விதிக்க உத்தேசித்துள்ளோம். இருப்பினும், இந்த வரியை விதிக்கும் போது, பல பொருட்கள் விஷயத்தில் நுகர்வோருக்கு கூடுதல் சுமை ஏற்படாமல் நாங்கள் பார்த்துக் கொள்வோம்.

**நடைமுறைகளை சீராக்குதல் மற்றும் இணக்கத்தை எளிதாக்குதல்**

189. ஏடிடி, சிவிடி வரிகள் தொடர்பான அம்சங்களில், சட்டபூர்வ நடைமுறைகளுக்காக, சில மாற்றங்களை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளோம். சுங்க விசாரணைகளை முழுமைப்படுத்த, நிச்சயமான கால வரம்பை நாங்கள் விதித்துள்ளோம். 2020-ல் நாங்கள் தூரந்த் சுங்க முயற்சிகளை மேற்கொண்டோம். அது, ஆளற்ற, காகிதமற்ற, மனித தொடர்பற்ற சுங்க நடவடிக்கைகளைக் கொண்டு வந்தது. 2020 செப்டம்பர் முதல், விதிமுறைகளை நிர்வகிக்கும் புதிய நடைமுறைகளை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். இது எப்டிஏ-க்களை முறைகேடாகப் பயன்படுத்துவதைக் கண்காணிக்க உதவுகிறது.

190. எனது உரையின் பிற்சேர்க்கையில், நேரடி மற்றும் மறைமுக வரி மாற்றங்கள் பற்றிய திட்டவட்டமான விவரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

191. மக்களவைத் தலைவர் அவர்களே, இந்த அளவில், நான் இந்த உயரிய அவையில் நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்கிறேன்.

**பட்ஜெட் உரையின் பகுதி ஏ பிற்சேர்க்கை**

**பிற்சேர்க்கை -1**

**சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம்- செலவுகள்**

*(கோடிகளில்)*

| அமைச்சகம்/துறை | அசல் 2019-20 | பட்ஜெட் மதிப்பீடு 2020-21 | பட்ஜெட் மதிப்பீடு 2021-22 |
|---|---|---|---|
| சுகாதாரம் , குடும்பநலத்துறை | 62,397 | 65,012 | 71,269 |
| சுகாதார ஆராய்ச்சி துறை | 1,934 | 2,100 | 2,663 |
| ஆயுஷ் அமைச்சகம் | 1,784 | 2,122 | 2,970 |
| | | | |
| கோவிட் தொடர்பான சிறப்பு ஒதுக்கீடு | | | |
| தடுப்பூசி | | | 35,000 |
| குடிநீர், தூய்மை துறை | 18,264 | 21,518 | 60,030 |
| ஊட்டச்சத்து | 1,880 | 3,700 | 2,700 |
| குடிநீர், தூய்மைப்பணி எப்சி மானியம் | | | 36,022 |
| சுகாதார எப்சி மானியம் | | | 13,192 |
| **மொத்தம்** | **86,259** | **94,452** | **2,23,846** |

**பிற்சேர்க்கை -2**

**முக்கிய திட்டங்கள்; சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள்**

**பெரும் விரைவுச் சாலைகள்/வழித்தடங்கள்**

- தில்லி-மும்பை விரைவுச்சாலை: 31.3.2021-க்குள் எஞ்சிய 260 கி.மீ.க்கு அனுமதி அளிக்கப்படும்.
- பெங்களூரு-சென்னை விரைவுச்சாலை: 210 கி.மீ. தூரத்துக்கு நடப்பு நிதியாண்டில் முயற்சி மேற்கொள்ளப்படும். 2021-22-ல் கட்டுமானம் துவங்கும்.
- தில்லி- டேராடூன் பொருளாதார வழித்தடம்: நடப்பு நிதியாண்டில் 210 கி.மீ வழித்தடத்துக்கு முயற்சி மேற்கொள்ளப்படும். 2021-22-ல் கட்டுமானம் துவங்கும்.

- கான்பூர்-லக்னோ விரைவுச்சாலை: • தேசிய நெடுஞ்சாலை 27-க்கு மாற்றான 63 கி.மீ

விரைவுச்சாலைக்கு 2021-22-ல் பணி மேற்கொள்ளப்படும்.

- சென்னை-சேலம் வழித்தடம்: 277 கி.மீ விரைவுச்சாலை அனுமதிக்கப்படும். கட்டுமானம் 2021-22-ல் துவங்கும்.

- ராய்ப்பூர்-விசாகப்பட்டினம்: சத்தீஷ்கர், ஒடிசா, வடக்கு ஆந்திரா வழியாகச் செல்லும் 464 கி.மீ சாலைக்கு நடப்பு ஆண்டில் அனுமதி வழங்கப்படும். கட்டுமானம் 2021-22-ல் துவங்கும்.
- அமிர்தசரஸ்- ஜாம்நகர்: 2021-22-ல் கட்டுமானம் துவங்கும்.
- தில்லி- கத்ரா: 2021-22-ல் கட்டுமானம் துவங்கும்.

விரைவு ராடார்கள், மாறுதலுக்கு உள்ளாகும் தகவல் பலகைகள், ஜிபிஎஸ்-உடன் கூடிய மீட்பு வாகனங்கள் ஆகியவற்றுடன் நவீன போக்குவரத்து முறை அனைத்து புதிய நான்கு மற்றும் ஆறு வழி நெடுஞ்சாலைகளிலும் அமைக்கப்படும்.

**பிற்சேர்க்கை 3**

**பங்குவிலக்கல்/பங்குவிலக்கல் உத்தி கொள்கையின் முக்கிய அம்சங்கள்**

**நோக்கங்கள்**

a) நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களைக் குறைத்தல், தனியார் துறைக்கான புதிய முதலீட்டு வெளியை உருவாக்குதல்
b) பங்கு விலக்கலுக்கு பிந்தைய, மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் பொருளாதார வளர்ச்சியானது தனியார் முதலீடு, தொழில்நுட்பம், சிறந்த நிர்வாக கொள்கைகள் மூலமாக நிதி நிறுவனங்களின் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்புக்கு பங்களிக்கும்.
c) பல்வேறு சமூகத்துறைகள், அரசின் வளர்ச்சி திட்டங்களுக்கு பங்கு விலக்கல் நிதி வழங்கும்

**கொள்கையின் அம்சங்கள்**

a) ஏற்கனவே உள்ள மத்திய பொதுத்துறை நிறுவனங்கள், பொதுத்துறை வங்கிகள், பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களை உள்ளடக்கிய கொள்கை

b) உத்தி, உத்தியல்லாத பல்வேறு துறைகள் அறிவிக்கப்படும்

c) உத்திப்பூர்வமான துறைகள்;

   i) அணுசக்தி, விண்வெளி, பாதுகாப்பு
   ii) போக்குவரத்து, தொலைத்தொடர்பு
   iii) மின்சக்தி, பெட்ரோலியம், நிலக்கரி, இதர கனிமங்கள்
   iv) வங்கிகள், காப்பீடு, நிதி சேவை

d) உத்திப்பூர்வ துறைகளில், பொதுத்துறை நிறுவனங்களின் குறைந்தபட்ச பங்குகள் மட்டுமே இருக்கும். உத்திப்பூர்வ துறைகளில் உள்ள இதர மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படும் அல்லது இதர மத்திய பொதுத்துறை நிறுவனங்களுடன் இணைக்கப்படும் அல்லது மூடப்படும்.

e) உத்தியல்லாத துறைகளில், மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்படும். அல்லது மூடப்படும்.

**பிற்சேர்க்கை 4**

**குறைந்தபட்ச ஆதார விலையில் (எம்எஸ்பி) வேளாண் பொருட்கள் கொள்முதல்**

| ஆண்டு | கோதுமை | | நெல் | | பருத்தி | | சணல் | | பருப்பு வகைகள் | எண்ணெய் வித்துக்கள், கொப்பரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எம்எஸ்பி மதிப்பு (கோடி) | பயனடைந்த விவசாயிகள் (லட்சத்தில்) | எம்எஸ்பி மதிப்பு (` | பயனடைந்த விவசாயிகள் (லட்சத்தில் | எம்எஸ்பி மதிப்பு (` கோ | பயனடைந்த விவசாயிகள் (லட்சத்தில்) | எம்எஸ்பி மதிப்பு (` கோ | பயனடைந்த விவசாயிகள் (லட்சத்தில்) | எம்எஸ்பி மதிப்பு (`கோடி) | எம்எஸ்பி மதிப்பு (லட்சம்) |

| | | | கோ<br>டி) | | டி) | | டி) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2010-11 | 24764.3 | NA | 52573.04 | NA | - | - | - | - | 1.75 | 149.03 |
| 2011-12 | 33152 | NA | 58084.48 | NA | 14 | 0.02 | 47.7 | 0.46 | 0.005 | 1.52 |
| 2012-13 | 49020.18 | NA | 65039.28 | NA | 4797 | 7.3 | 140.19 | 1.15 | 407.22 | 394.06 |
| 2013-14 | 33874.20 | NA | 63927.65 | NA | 90 | 0.14 | 53.98. | 0.5 | 235.86 | 1626.39 |
| 2014-15 | 39232.20 | NA | 66948.00 | NA | 18506 | 29.5 | 6.56 | 0.06 | 1128.93 | 45.52 |
| 2015-16 | 40727.60 | NA | 73981.90 | 73.08 | 1825 | 1.91 | - | - | - | 15.90 |
| 2016-17 | 35015.53 | 20.47 | 85802.73 | 76.85 | - | - | 28.79 | 0.17 | 1039.39. | 946.71 |
| 2017-18 | 50089.00 | 31.87 | 90397.86 | 72.31 | 898 | 0.88 | 172.16 | 1.22 | 8566.13 | 5072.73 |
| 2018-19 | 6204.33 | 38.77 | 116839.47 | 96.94 | 2976 | 2.38 | 66.79 | 0.26 | 20145.60 | 7091.11 |
| 2019-20 | 62802.88 | 35.57 | 141928.08 | 124.59 | 28500 | 21.5 | 56.24 | 0.55 | 8284.45 | 8305.06 |
| 2020-21 | 75059.60 | 43.36 | 172752** | 154** | 25974* | 18.26* | 2.99 | 0.01 | 10530.20 | 3647.11 |
| * 27.01.21 வரை ** கணிப்புமதிப்பு | | | | | | | | | | |

*NA-* பொருந்தாது

**பிற்சேர்க்கை 5**

**புதிய கல்வி கொள்கையின் பகுதியாக கல்வி மீதான முன்முயற்சிகள்**

- என்பிஎஸ்டி வடிவில் ஆசிரியர்களுக்கான தேசிய தொழில்முறை தரநிலைகள், அனைத்து ஆசிரியர்களுக்கும் தரநிலை உருவாக்கப்படும். இது ஆசிரியர்களின் திறன்களை உயர்த்தும். நாட்டில் உள்ள அனைத்து பொதுத்துறை, தனியார் பள்ளிகளின் 92 லட்சம் ஆசிரியர்களால் பின்பற்றப்படும்.
- பொழுபோக்கு வெளிப்பாடு மற்றும் கற்றலுக்கு பொம்மைகள் இருக்கும். உள்நாட்டு பொம்மை சார்ந்த தனித்துவ கற்றல் அனைத்து மட்டத்திலும் பள்ளி கல்வி கற்பித்தல் மேம்படுத்தப்படும். இது வகுப்பறை பரிவர்த்தனைகளை மகிழ்ச்சிகரமான சூழலுக்கு மாற்றும்.
- டிஜிட்டல் முதல் மனப்பான்மை வரம்புக்குள் ஒரு தேசிய டிஜிட்டல் கல்வி கட்டமைப்பு உருவாக்கப்படும். இது, கற்றல், கற்பித்தலை மட்டுமல்லாமல், மத்திய, மாநில /யூனியன் பிரதேசங்களின் கல்வித் திட்டம், நிர்வாகம், நிர்வாக நடவடிக்கைகளுக்கு உதவும். டிஜிட்டல் கட்டமைப்பு மேம்பாடு, சுற்றுச்சூழல் கல்வி ஆகியவற்றை வழங்கி, மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கான அனைத்து தொடர்புடையவர்களுக்கும் தன்னுரிமையை உறுதி செய்யும்.
- கேட்கும் திறனற்ற குழந்தைகளுக்காக, நாடு முழுவதும் இந்திய அடையாள மொழியை நிலைப்படுத்த அரசு பாடுபடும். அவற்றைப் பயன்படுத்தி, தேசிய, மாநில கல்வித்திட்ட பொருட்கள் உருவாக்கப்படும்.
- மூத்த, ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஏராளமாக உள்ளனர். ஆன்லைன்/ ஆப்லைன் உதவியுடன், பாடங்கள், கருப்பொருள் மற்றும் கற்பித்தல் குறித்த பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கற்பிப்பவர்களைக் கண்காணிக்க இவர்கள் பயன்படுத்தப்படுவார்கள்.
- தனித்துவ-பரிமாண அளவுகோல்களின்படி இதுவரை மாணவர்கள் மதிப்பிடப்பட்டனர். கற்பவர்களின் திறன்களை மதிப்பிடுவதுடன், குழந்தைகளின் தனித்துவமான ஆற்றல்களை அடையாளம் காணும் வகையில்

முழுமையான மாற்றம் கொண்டு வரப்படும். மாணவர்களது ஆற்றல், ஆர்வம், கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் ஆகியவை உள்ளிட்ட முழுமையான தர மதிப்பீட்டைக் கொண்ட முன்னேற்ற அட்டை உருவாக்கப்படும். இதன் மூலம் அவர்கள் தங்கள் வாழ்க்கைத் தொழிலைத் தேர்வு செய்ய வாய்ப்பை ஏற்படும்.

- ஆதாரங்கள், ஆன்லைன் தொகுப்புகள் ஆகியவற்றை அணுகுவது அதிகரிக்கப்பட்டு, இதனை உள்ளடக்கிய முதியோர் கல்வி திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
- இந்த ஆண்டில், கொவிட் தொற்றுக்கு இடையிலும், 30 லட்சத்துக்கும் மேற்பட்ட தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆன்லைன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2021-22-ல் நிஸ்தா முன்முயற்சி மூலம் 56 லட்சம் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

- கடந்த சில ஆண்டுகளாக நமது பிரதமர் ஒவ்வொரு ஆண்டும் தேர்வுகளுக்கு செல்லும் மாணவர்களுடன் கலந்துரையாடி, அவர்களது பதற்றத்தைப் போக்கி வருகிறார். இந்த நோக்கத்தில், 2022-23 கல்வி ஆண்டு முதல், சிபிஎஸ்இ வாரிய தேர்வு சீர்திருத்தங்களை படிப்படியாக அறிமுகம் செய்ய உத்தேசித்துள்ளோம். உரை கற்றலில் இருந்து, மாணவர்கள் தங்கள் வாழ்க்கைச் சூழலில் கருத்தியல் தெளிவு, பகுப்பாய்வு திறன், அறிவைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை உபயோகப்படுத்துவதற்கு ஏற்ப தேர்வுகள் இருக்கும்.

- வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கல்வி முறையை மேம்படுத்த, இரட்டை பட்டங்கள், இணை பட்டங்கள், இரட்டை ஏற்பாடுகள் மற்றும் பிற முறைகளை அனுமதிக்கும் ஒழுங்குமுறை அமைப்பு ஏற்படுத்தப்படும்.

**பிற்சேர்க்கை 6**

| | |
|---|---|
| **கூடுதல் பட்ஜெட் ஆதாரங்கள்அறிக்கை (EBRs) (முழுமையானஅரச சேவை பத்திரங்கள் தேசியசமூகபாதுகாப்புநிதிக் (NSSF)கடன் , இதர ஆதாரங்கள்** | |
| | *(In ` crores)* |

| பகுதி A – முழுமையான அரசு சேவை பத்திரங்கள் வெளியிடுவதன் மூலம் திரட்டப்பட்ட EBRகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| டிமாண்ட் எண் | அமைச்சகம்/துறையின் பெயர் திட்டத்தின் பெயர் | 2016-17 அசல | 2017-18 அசல | 2018-19 அசல | 2019-20 அசல | 2020-21 பட்ஜெட் மதிப்பீடு (BE) | 2020-21 திருத்தப்பட்ட மதிப்பீடு (RE) | 2021-22 பட்ஜெட் மதிப்பீடு (BE) |
| 24 | **உயர் கல்வி துறை** | | | | | | | |
| | உள்கட்டமைப்பு புத்தாக்கம் கல்வியில் முறைகள் (RISE) | --- | --- | --- | --- | 3000.00 | --- | |
| 44 | **சுகாதாரம் குடும்ப நலத்துறை** | | | | | | | |
| | பிரதமர் சுவஸ்தி சுரக்ஷா திட்டம் | --- | --- | --- | --- | 3000.00 | --- | |
| 59 | **வீட்டு வசதி , நகர்ப்புற விவகார அமைச்சகம்** | | | | | | | |
| | பிரதமர் வீட்டுவசதித் திட்டம் (PMAY) - நகர்ப்புறம் | --- | --- | 20000.00 | --- | 10000.00 | --- | இல்லை |
| 61 | **நீர் வளம் ஆறு மேம்பாடு கங்கை புத்துயிரூட்டல் துறை** | | | | | | | |
| | போலாவரம் பாசனத்திட்டம் | --- | --- | 1400.00 | 1850.00 | --- | 2234.29 | |
| | பிரதமர் கிருஷி சின்சாய் திட்டம் | 2187.00 | 3105.00 | 5493.40 | 1963.30 | 5000.00 | 4225.00 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 62 | **குடிநீர் துப்புரவுத் துறை** | | | | | | | |
| | தூய்மை இந்தியா திட்டம் ( ஊரகம்< ஜல் ஜீவன் இயக்கம்/தேசிய ஊரக குடிநீர் திட்டம் | ---<br>--- | ---<br>--- | 8698.20<br>--- | 3600.00<br>--- | ----<br>12000.00 | ---<br>--- | |
| 70 | **புதிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்** | | | | | | | |
| | தொகுப்புகலப்பு புதுப்பித்தல் மின்சாரம் ஆப் தொகுப்பு விநியோகம் புதுப்பித்தல் மின்சார பரவலாக்கம் | 1640.00 | --- | --- | --- | --- | --- | |
| | பிரதமர் கிசான் உர்ஜா சன்ரக்சன் ஏவம் உத்தான் மகாபியான் (PM-KUSUM) | --- | --- | --- | --- | 1000.00 | --- | |
| 77 | **துறைமுகங்கள், கப்பல் நீர்வழி அமைச்சகம்** | | | | | | | |
| | இந்திய உள்நாட்டு நீர் வழிகள் ஆணையத் (IWAI) திட்டங்கள் | 340.00 | 660.00 | --- | ---- | --- | --- | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 78 | **மின்சார அமைச்சகம்** | | | | | | | |
| | தீன் தயாள் உபாத்யாயா கிராம் ஜோதி திட்டம் /சவ்பாக்யா | 5000.00 | 4000.00 | 13827.00 | 3782.00 | 5500.00 | 5000.00 | |
| | மின்சக்தி அமைப்பு மேம்பாட்டு நிதிதிட்டங்கள் | --- | | 5504.70 | --- | --- | --- | |
| 86 | **ஊரக வளர்ச்சி துறை** | | | | | | | |
| | பிரதமர் வீட்டுவசதித் திட்டம் (PMAY) - ஊரகம் | --- | 7330.00 | 10678.80 | 10811.00 | 10000.00 | 20000.00 | |
| | ***மொத்தம்*** | ***9167.00*** | ***15095.00*** | ***65602.10*** | ***22006.30*** | ***49500.00*** | ***31459.29*** | |

**BE- பட்ஜெட்மதிப்பீடு**

பகுதி-பி- தேசிய சமூக பாதுகாப்பு நிதியத்திலிருந்து (என்எஸ்எஸ்எப்) – லிருந்து கடன்கள் மூலம் நிதி ஆதரவு

*(கோடிகளில்)*

| வரிசை எண் | அமைச்சகம்/துறையின் பெயர்/நிறுவனத்தின்பெயர் | 2016-17 அசல் | 2017-18 அசல் | 2018-19 அசல் | 2019-20 அசல் | 2020-21 பட்ஜெட் மதிப்பீடு (BE) | 2020-21 திருத்தப்பட்ட மதிப்பீடு (RE) | 2021-22 பட்ஜெட் மதிப்பீடு (BE) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | **உணவு பொது விநியோக அமைச்சகம்** | 70000.00 | 65000.00 | 97000.00 | 110000.00 | 136600.00 | 84636.00 | --- |
| 2 | **இந்திய உணவு கழகம்#** | --- | 8000.00 | --- | 15000.00 | --- | 10000.00 | |
| | **வீட்டுவசதி நகர்ப்புற விவகார அமைச்சகம்** | --- | --- | --- | 1310.00 | --- | --- | --- |
| 3 | கட்டுமானப்பொருட்கள் தொழில்நுட்ப மேம்பாட்டு கவுன்சில் | | | | | | | |
| | உரத்துறை | | | | | | | |
| | உலோகம் கனிமங்கள் வர்த்தககழகம் | | | | | | | |
| 4 | **இதர முகமைகளுக்கு ஆதரவு (சில குறிப்பிட்ட திட்டங்கள் ஏதேனும் இருந்தால் கூடுதல் ஆதாரங்களுக்கான தேவைகளை சமாளிக்க)** | | | | | | | 30000.00 |
| | **மொத்தம்** | **70000.00** | **73000.00** | **97000.00** | **126310.00** | **136600.00** | **94636.00** | **30000.00** |
| | ***ஒட்டுமொத்தம் (A+B)*** | ***79167.*** | ***88095.*** | ***162602*** | ***148316.*** | ***186100.00*** | ***126095.29*** | ***30000.00*** |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | *00* | *00* | *.10* | *13* | | | |

*# NSSF கடன் தொகை FCI 31.03.2020 நிலவரப்படி நிலுவை` ரூ.2,54,600 கோடி*

**BE- பட்ஜெட்மதிப்பீடு**

**பிற்சேர்க்கை பகுதி பி-க்கான பட்ஜெட் உரை**

**<u>நேரடி வரி முன்மொழிவுகள்</u>**

| **வரிசை எண்** | **முன்மொழிவுகள்** | **உத்தேச திருத்தங்கள் சுருக்கமாக** |
|---|---|---|
| 1. | **மூத்த குடிமக்களுக்கு நிவாரணம்** | 75 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கான சுமையைக் குறைக்கும் வகையில், முழு வரித் தொகையை வங்கிகள் பிடித்தம் செய்யும் நிகழ்வில், அவர்களுக்கு கணக்கு தாக்கல் செய்வதிலிருந்து விலக்கு அளிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. ஓய்வூதிய வருமானம் தவிர, வட்டி மட்டும் பெறும் மூத்த குடிமக்களுக்கு இச்சலுகை பொருந்தும் |

| | | |
|---|---|---|
| 2. | **கால வரம்பு குறைப்பு** | சுமையைக் குறைக்கும் வகையில், மதிப்பீட்டை மீண்டும் துவக்குவதற்கான கால அளவு தற்போதைய 6 ஆண்டுகளில் இருந்து 3 ஆண்டுகளாகக் குறைக்கப்படு கிறது. ஓராண்டுக்கு ரூ.50 லட்சமோ அதற்கு மேலோ வருமானம் இருந்தால் மட்டுமே மறு மதிப்பீட்டுக்கு 10 ஆண்டுகள் என அனுமதிக்கப்படும். தரவு பகுப்பாய்வு, தலைமை தணிக்கையாளர் (C&AG) ஆட்சே பணை இருக்கும் நிகழ்வுகளில் மட்டும் மறு மதிப்பீடு முற்றிலும் நீக்கப்படும். மேலும், வருமான வரி நடைமுறை களில் நிச்சயத்தன்மையைக் கொண்டு வரும் வகையில், பொது மதிப்பீடு அல்லது வருமான வரி கணக்குகளை செயலாக்க மூன்று மாதங்கள் என கால அளவைக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 3. | **ஈவுத் தொகை நிவாரணம்** | வரி செலுத்துவோருக்கு நிவாரணம் வழங்கும் வகையில், ஈவுத் தொகை வருமானம் மீதான அட்வான்ஸ் வரி பொறுப்பு, அறிவிப்புக்குப் பின்னர்/ ஈவுத் தொகை செலுத்தப்பட்டதற்கு பின்னர் மட்டுமே எழும். ரியல் எஸ்டேட் உள்கட்டமைப்பு அறக்கட்டளை அல்லது உள்கட்டமைப்பு முதலீட்டு அறக்கட்டளைகளுக்கு அளிக்கப்படும் ஈவுத் தொகை வருவாயில் வரி (டிடிஎஸ்) |

| | | |
|---|---|---|
| | | பிடித்தம் செய்வதில் இருந்து விலக்களிக்கப்படும். வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஈவுத் தொகை வருமானம் உள்ளிட்டவற்றுக்கு வரி கழிவு, ஒப்பந்த விகிதத்தில் செய்யப்படும் என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு நிறுவனத்துக்கான குறைந்தபட்ச மாற்று வரி (மேட்), உரிய வரி விகிதம், மேட் விகிதத்தை விட குறைவாக இருந்தால், ஈவுத் தொகை கட்டணத்துக்கு விலக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 4. | **தாவா தீர்வுக் குழு அமைத்தல்**<br>**(DRC)** | சிறு வரி செலுத்துவோருக்கான தாவா தீர்வுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில், ஒரு தாவா தீர்வு குழு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ.50 லட்சம் வரை வரி விதிக்கத்தக்க வருமானம், ரூ.10 லட்சம் வரையிலான தாவா வருமானம் உள்ளவர்கள் குழுவை அணுகத் தகுதியுள்ளவர்கள். திறன், வெளிப்படையான, பொறுப்புடைமையை உறுதி செய்ய , குழுவின் நடைமுறை முகமற்ற முறையில் மேற்கொள்ளப்படும்.<br>தொடர்ச்சியாக, 01.02.2021 முதல் செட்டில்மென்ட் கமிஷன் ரத்து செய்யப்படும். இருப்பினும், நிலுவை வழக்குகள், விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்தால், இடைக்கால வாரியம் மூலம் தீர்மானிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 5. | **முகமற்ற வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம்** **(ITAT)** | வெளிப்படையான வரி மேல்முறையீட்டு பொறிமுறையை வழங்கும் வகையில், முகமற்ற, சட்ட அதிகாரமற்ற வருமான வரி தீர்ப்பாயம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேசிய முகமற்ற வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அமைக்கப்படலாம். தீர்ப்பாயம், விண்ணப்பதாரர் இடையிலான தகவல் தொடர்பு மின்னணு முறையில் மேற்கொள்ளப்படும். நேரடி விசாரணை தேவைப்படும் போது, காணொலி மூலம் நடத்தப்படும். |

| | | |
|---|---|---|
| | | |
| 6. | நகர்ப்புற கூட்டுறவு வங்கியை சிறு நிதி வங்கியாக மாற்றும் போது, வரி நடுநிலை | நகர்ப்புற கூட்டுறவு வங்கியை சிறு நிதி வங்கியாக மாற்ற, வரி நடுநிலையைப் பராமரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, நகர்ப்புற கூட்டுறவு வங்கி, முதலீட்டு ஆதாயத்தை, சொத்து பரிமாற்றத்திற்கு செலுத்த தேவையில்லை. |
| 7. | குறைந்த விலை வீடுகள், வாடகை வீட்டு திட்டத்துக்கு வரி ஊக்கத்தொகை | குறைந்த விலை வீடுகளை வாங்க, பெறப்படும் கடனுக்கான 1.5 லட்சம் வட்டி குறைப்புக்கான கால அளவை 2022 மார்ச் 31 வரை நீட்டிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br><br>குறைந்த விலை வீடுகளை அதிக அளவில் கிடைக்கச் செய்ய, வட்டி விலக்குத் தகுதி காலம் மேலும் ஓராண்டு காலத்துக்கு 2022 மார்ச் 31 வரை நீட்டிக்கப்படுகிறது.<br><br>புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கான குறைந்த விலை வாடகை வீடு விநியோகத்தை மேம்படுத்த புதிய வரி விலக்கு அறிவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 8. | **ஸ்டார்ட் அப்களுக்கு வரி சலுகை** | நாட்டில் மேலும் அதிக ஸ்டார்ட் அப்களை உருவாக்க வட்டி விலக்கு தகுதி காலம் மேலும் ஓராண்டு காலத்துக்கு 2022 மார்ச் 31 வரை நீட்டிக்கப்படுகிறது.<br><br>ஸ்டார்ட் அப் முதலீட்டை ஊக்குவிக்க , முதலீட்டு ஆதாய விலக்கை கோருவதற்கான கால அவகாசம் மேலும் ஓராண்டு காலத்துக்கு 2022 மார்ச் 31 வரை நீட்டிக்கப்படுகிறது. |
| 9. | **என்ஆர்ஐ ஓய்வு பயன் கணக்கு வருமானத்துக்கு சலுகை** | என்ஆர்ஐ –களின் வெளிநாட்டு ஓய்வு பயன் கணக்கு மூலம் ஈட்டும் வருமான விஷயத்தில் வரி விதிப்பு குளறுபடிகளால் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் களையும் வகையில், வரி விதிப்புகளைத் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | |
| 10. | **தணிக்கையிலிருந்து விலக்கு** | டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்குவிக்க, டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளும் நபர்களின் சுமையைக் குறைக்க, 5 கோடி முதல் 10 கோடி வரை 95% டிஜிட்டல் பரிவர்த்தனைகள் செய்வோருக்கு தணிக்கை விலக்கு அளிக்கப்படும். |
| 11. | **இழப்பை மறுமுதலீட்டுக்கு கொண்டு செல்வோருக்கு நிபந்தனை தளர்வு** | பொதுத்துறை நிறுவன உத்தி பூர்வ பங்கு விலக்கலுக்கு , இழப்பை மறுமுதலீடாகக் கொண்டு செல்லும் பொதுத்துறை ஒருங்கிணைப்புக்கு நிபந்தனையைத் தளர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 12. | **பங்கு விலக்கலுக்கு வரி நடுநிலை மறு இணைப்புக்கு நிபந்தனை தளர்வு** | பொதுத்துறை நிறுவன உத்தி பூர்வ பங்கு விலக்கலை மேம்படுத்த, பொதுத்துறை சொத்துக்களை, வரி நடுநிலை மறு இணைப்பால் உருவாகும் நிறுவனத்துக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 13. | **உள்கட்டமைப்பு கடன் நிதி (IDF)யின் ஜீரோ கூப்பன் பத்திரங்கள்** | உள்கட்டமைப்பில் நிதியை அனுமதிக்க, ஐடிஎப் வெளியிடும் ஜீரோ கூப்பன் பத்திரங்கள் வரி பயனுக்கு தகுதி பெறும். |

| | | |
|---|---|---|
| 14. | **யூனிட் இணைந்த காப்பீட்டுத் திட்டம் (ULIP) வரி விதிப்பு குறைப்பு** | யூலிப் வரி விதிப்பைக் குறைக்கும் வகையில், ஆண்டு பிரிமியம் 2.5 லட்சம் வரை உள்ள யூலிப்பு முதிர்வடையும் போது வரி விலக்கு பெற அனுமதிப்பது என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இறப்புக்கு பின்னர் பெறப்படும் தொகை, ஆண்டு பிரிமிய வரம்பு இன்றி தொடர்ந்து விலக்கு பெறும். யூலிப்புக்கான 2.5 லட்சம் ஆண்டு பிரிமியம் 01.02.2021-க்கு பின்பு எடுக்கப்பட்ட பாலிசிகளுக்கு மட்டும் பொருந்தும். சமநிலையைப் பராமரிக்க, விலக்கு பெறாத யூலிப்புகள், அதே முதலீட்டு ஆதாய சலுகை, பரஸ்பர நிதியைப் போல வழங்கப்படும். |

| | | |
|---|---|---|
| **15.** | சேமநல நிதி மீதான வரியற்ற வருவாய் பற்றிய பகுப்பாய்வு | அதிக அளவில் வருமானம் பெறும் ஊழியர்கள் ஈட்டும் வருமானத்தி **ன்** மீது வரிவிலக்கு அளிப்பது **குறித்து** பகுப்பாய்வு (ரேஷனலைஸ்) செய்வதற்காக , இத்தகைய ஊழியர்கள் பல்வேறு வருங்கால வைப்பு நிதிக்கு செலுத்தும் ஆண்டு பங்களிப்பு , இரண்டரை லட்சம் ரூபாயாக இருந்து அதன்மீதான வட்டி வருமானத்திற்கு **அளிக்கப்பட்டு வரும்** வரி விலக்கு **கைவிட** உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த **க்** கட்டுப்பாடு **1.4.2021** அன்று அல்லது அதற்கு **ப்** பிற **கான** பங்களிப்பிற்கு மட்டுமே பொருந்தும். |
| **16.** | கூட்டாளிகளால் பெறப்பட்ட உபரி நிதி மீதான வரி | நிச்சயமான தன்மை கிடைக்க உதவும் **வகையில்**, கூட்டு நிறுவனம் ஒன்றின் கூட்டாளிகள், தாங்கள் செய்த மூலதன **ப்** பங்களிப்புக்கும் அதிகமாக **ப்** பெ**று**ம் தொகை அல்லது சொத்தின் மீதான வரி தொடர்பான விதிமுறைகளை பகுப்பாய்வு செய்ய **உத்தேசி**க்கப்பட்டுள்ளது. |
| **17.** | குட்வில் (நல்லெண்ணம்) மீதான **தேய்மானம்** (டிப்ரசியேஷன்) பற்றிய விளக்கம் | நிச்சய**த்** தன்மை கிடைப்பதற்காக , நிறுவனத்தின் நன்மதிப்பின் மீதான விலைத் தகுதியை குறைத்து மதிப்பிடத் தேவையில்லை என்று தெளிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆனால் நன்மதிப்பை பெறுவதற்காக செலுத்தப்பட்ட தொகை அதே நன்மதிப்பை விற்பனை செய்யும் போது கழித்துக் கொள்ள அனுமதி உண்டு |

| | | |
|---|---|---|
| **18.** | சரிவு விற்பனை குறித்த விளக்கம் | நிச்சயத் தன்மையை அளிப்பதற்காக , சரிவு விற்பனை, அனைத்து வகையான பரி**மாற்றங்க**ளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று தெளிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| **19.** | போலி இன்வாய்ஸ் **மோசடி** பரிவர்த்தனைகள் | வருவாயைப் பாதுகாப்பதற்காக , இரண்டு கோடிக்கும் அதிகமான தொகை கொண்ட போலி இன்வாய்ஸ் மற்றும் **மோசடி** பரிவர்த்தனைகளுக்கும் அபராத முறை களின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு , சொத்துக்களும் முடக்கப்படும் என்று கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| **20.** | சிறிய அறக்கட்டளைகளுக்கு வரிவிலக்கு | கல்வி நிறுவனங்கள் , மருத்துவமனைகள் போன்றவற்றை நடத்தும் சிறிய அறக்கட்டளைகளுக்கு, சட்டரீதியான விதிமுறைகளைப் பின்பற்றுவதில் உள்ள சுமைகளைக் குறைக்கும் வகையில், **இத்தகு** அறக்கட்டளைகள் ஆண்டொன் றுக்கு பெ**றும்** தொகை ஒரு கோடி **வரை**யாக இருந்தால் , அவற்றுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. தற்போது இந்த **த்**தொகை 5 கோடியாக உயர்த்தப்படு கிறது. அங்கீகாரம் பெறுவது என்பது போன்ற பல்வேறு சட்ட நடைமுறை களில் இருந்து விலக்கு பெற முடியும். |
| **21** | அறக்கட்டளை **(சாரிடபிள்)** அமைப்புகள் நஷ்டத்தை அடுத்தடுத்த ஆண்டுகளுக்குக் கொண்டு செல்வது | நிச்சயத் தன்மையை கொண்டு வருவதற்காக அறக்கட்டளை அமைப்புகள் இழப்புகளை அடுத்த ஆண்டுகளுக்கு முன்னெடுத்துச் செல்ல அனுமதி இல்லை **என்று கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது** . எனினும் கடனை திரும்பச் செலுத்துவது , **நிதிய மூலதன** தொகையைப் புதுப்பிப்பது |

| | | |
|---|---|---|
| | குறித்து | போன்றவற்றுக்கு அனுமதி உண்டு. |

| | | |
|---|---|---|
| **22.** | டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மீதான வரிவிதி ப்பு குறித்த விளக்கம் | நிச்சயத் தன்மையைக் கொண்டு வருவதற்காக, வருமான வரிக்கு உட்பட்ட பரிவர்த்தனைகள் மீது, டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மீதான வரி வசூலிக்கப்பட மாட்டாது என்று விளக்கமாக தெளிவுபடுத்தப்படுகிறது. பொருட்கள் மற்றும் சேவையை நேரிலோ வேறு வழியி **லோ** சப்ளை செய்வதற்கு , டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மீதான வரி வசூலிப்பது குறித்து விளக்கமளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| **23** | ஊழியர்களின் பங்கை தொழிலாளர் நல நிதிய**ங்களுக்கு** உரிய காலத்துக்குள் செலுத்துவது | பல்வேறு நல நிதிகளுக்காக ஊழியர்களின் பங்களிப்பு**த்** தொகையை உரிய காலத்தில் நிறுவன உரிமையாளர்கள் செலுத்தாமல் இருந்தால், ஊழியர்களுக்கு வட்டி மற்றும் வருமான இழப்பு ஏற்படுகிறது. எனவே ஊழியர்களின் பங்களிப் **பு**, நிறுவன உரிமையாளர்க**ளால்**, இந்த நிதி **ய**ங்களுக்கு உரிய காலத்தில் அளிக்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்வதற்காக , ஊழியர்களின் பங்களிப்பை நிறுவன உரிமையாளர் தாமதமாக**ச்** செலுத்துகையில், அதை உரிமையாளர் கழித்துக் கொள்வது ஒருபோதும் அனுமதிக்கப்படமாட்டாது என்று மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. |
| **24** | சாவரின் வெல்த் ஃபண்ட் மற்றும் பென்ஷன் ஃபண்ட் (எஸ் டபிள்யூ எஃப் மற்றும் பிஎஃப்) ஆகியவற்றுக்கு விலக்கு அளிப்பதற்கான நிபந்தனைகளில் தளர்வு | இந்தியக் கட்டமைப்பு **த்** துறையில் , மேலும் அதிக அளவில் அரசு வழி முதலீடு எனப்படும் எஸ் டபிள்யூ எஃப் /ஓய்வூதிய நிதியம் எனப்படும் பிஎஃப் நிதியங்கள் முதலீடு செய்வதை ஊக்குவிப்பதற்காக, சென்ற ஆண்டு பட்ஜெட்டில் அளிக்கப்பட்ட **100** சதவிகித வரி **வில**க்குகளை**ப்** பயன்படுத்திக் கொள்வதற்கான சில நிபந்தனைகளில் , தளர்வு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடன் கொடுத்தல் அல்லது பெறுதல் மீதான தடை , வர்த்தக**ச்** செயல்பாடுகள் மீதான கட்டுப்பாடு , கட்டமைப்பை சொந்தமாக வைத்துள்ள நிறுவனத்தில் நேரடி முதலீடு செய்தல் உட்பட |

| | | |
|---|---|---|
| | | பல்வேறு விஷயங்கள் தொடர்பான நிபந்தனைகளைத் தளர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| **25.** | சர்வதேச பொருளாதார சேவை மையம் (ஐ எப் எஸ் சி)- க்கு வரி ஊக்கத்தொகை | ஐ எப் எஸ் சி **யின் வளர்ச்சிக்** காக மேலும் பல வரி ஊக்குவிப்பு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. விமான**க்** குத்தகை நிறுவனத்தின் முதலீட்டு வருவாய் வருமானம் மீது வரி விடுமுறை , விமானத்தை குத்தகைக்கு விட்ட வெளிநாட்டவருக்கு செலுத்திய குத்தகை வாடகை **த் தொகை** , வெளிநாட்டு நிதியை ஐ எப் எஸ் சி **யி**ல் கொண்டுவருவதற்கு ஊக்கத்தொகை, ஐ எஃப் எஸ் சி **யி**ல் அமையப்பெற்றுள்ள வெளிநாட்டு வங்கிகளின் முதலீட்டு **ப்** பிரிவுகளுக்கு வரிவிலக்கு என்பது உட்பட பல்வேறு வரி **விலக்கு ஊக்குவிப்பு** நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| 26 | வருமான வரி தாக்கல் செய்வதற்காக, பண ப் பிடித்தம் செய்பவர்கள்/ பணம் வசூலிப்பவர்கள் தாக்கல் செய்யாமல் இருக்கும்போது | வருமான வரி தாக்கல் செய்வதற்காக , பணத்தைப் பிடித்தம் செய்து கொள்வது / வசூலிப்பது; ஆனால் அதற்குப் பின் வருமான வரி தாக்கல் செய்யாமல் விட்டுவிடுவது என்ற பழக்கத்தை **த் தடுப்பதற்காக**, ஊக்குவிக்காமல் இருப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது . கடந்த இரண்டு ஆண்டுகளில் (வருமானவரி பிடித்தம்) டி டி எஸ்/ (வருமானவரி திரட்டுதல்) டி சி எஸ் ஆகி **யவற்றுக்காக** ஒதுக்கப்பட்டுள்ள தொகை 50 ஆயிரம் ரூபாய் அல்லது அதற்கும் அதிகமாக இருந்தால், அத்தகையவர்கள் வருமான வரி தாக்கல் செய்யாமல் இருந்தால் , அவர்கள் செலுத்தவேண்டிய டிடிஎஸ் / டிசிஎஸ் விகிதம் , செலுத்தப்பட வேண்டிய விகிதத்தின் இரட்டிப்பு மடங்கு அல்லது 5 சதவிகிதம் - இதில் எது அதிகமோ அந்த **த்** தொகையாக இருக்கும் என்று கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. முழு வரித் தொகை கழித்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற விதிமுறை உள்ள பரிவர்த்தனைகளுக்கு - உதாரணமாக - பணி ஊதிய வருமானம் , வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட தொகை , லாட்டரி போன்ற பல பரிமாற்றங்களுக்கு இந்த விதி பொருந்தாது. |

| | | |
|---|---|---|
| 27 | பொருட்களை வாங்குவதன் மீதான டிடிஎஸ் (வருமானவரி பிடித்தம்) | (வருமானவரி பிடித்தம்) டிடிஎஸ் -ஐ விரிவு படுத்துவதற்காக ஆண்டொன்றுக்கு 50 லட்சத்துக்கும் அதிகமான கொள்முதல் பரிவர்த்தனைகளின் மீது 0.1 சதவிகிதம் டிடிஎஸ் வசூலிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சட்டப்படியானவிதிமுறைகளைப் பின்பற்றுவதில் உள்ள சுமைகளை க் குறைப்பதற்காக, இவ்வாறு பிடித்தம் செய்வது, 10 கோடி ரூபாய்க்கும் அதிகமான பணப்புழக்கம் உள்ளவர்கள் மீது மட்டுமே இருக்கும். |
| 28 | அட்வான்ஸ் ரூலிங்ஸ் பற்றிய ஆணையத்திற்கு பதிலாக அட்வான்ஸ் ரூலிங்ஸ் வாரியம் | வரிவிதிப்பு தொடர்பான வழக்குகளுக்கு விரைவான தீர்வு காண்பதற்காக அட்வான்ஸ் ரூலிங்ஸ் ஆணையத்திற்கு பதிலாக அட்வான்ஸ் ரூலிங்ஸ் வாரியம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்திற்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்கு நீதிமன்றத்தை அணுக வகை செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 29. | அட்வான்ஸ்ட் ப்ரைசிங் ஒப்பந்தத்திற்கான (ஏ பி ஏ) குறைந்தபட்ச மாற்று வரி (எம் ஏ டி) இணைப்பு மற்றும் செகண்டரி அட்ஜஸ்ட்மெண்ட் | ஏ பி ஏ கணக்கு ரிபட்ரியேஷன் ஆண்டில் எழும்பிய எம் ஏ டி லையபிலிடி அல்லது செகண்டரி அட்ஜஸ்ட்மென்ட் தொடர்பான வரி செலுத்துபவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் , எம் ஏ டி விதிமுறைகள், இத்தகைய வருமானம் எந்த ஆண்டில் வரிக்கு உட்பட்டதாக ஆகிறதோ, அந்த ஆண்டிலிருந்து கணக்கிடப்படும். |

| | | |
|---|---|---|
| 30. | விடுமுறை**க்கால** பயண**ப்படி** லீவ் டிராவல் கன்சஷன் (எல் டி சி ) க்கு விலக்கு | ஊழியர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் எல் டி சிக்கு **ப்** பதிலாக, பணமாக**ப்** பெற்றுக்கொள்ளும் ஊழியருக்கு அந்த**த்** தொகையை **ச்** செலவிடும் நிபந்தனைக்கு உட்பட்டு வரி விலக்கு அளிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 31 | முதன்முறையாக விற்பனை செய்யப்படும் குடியிருப்பு யூனிட்டுக்கான பாதுகாப்பான **பரிமாற்ற** வரையறை அதிகரிப்பு | வீடுகளை வாங்குபவர்களுக்கும் , ரியல் எஸ்டேட் டெவலப்பர்களுக்கும் ஊக்கமளிப்பதற்காக பாதுகாப்பான பரிமாற்ற வரையறை , **இது** முதற்கட்ட விற்பனையில் 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக அதிகரிக்கப்படுகிறது |
| 32 | இதர அம்சங்கள் | தணிக்கை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள வருமான **சீரமைப்பு** குறித்த விளக்கங்களை அளிப்பதற்கும், சில பிடித்தங்களை அனுமதிப்பதற்கு வரி தாக்கல் செய்யும் முறைகள் தொடர்பான விதி முறைகளில் சில மாற்றங்களை/ திருத்தங்களை **க்** கொண்டுவர**வும்** **உத்தேசி**க்கப்பட்டுள்ளது.<br><br>சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலமாக **வருமான வரித்** தாக்கல் செய்வது தொடர்பாக **சுற்றறிக்கை** வெளியிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br><br>வரி செலுத்தும் சில பிரிவினருக்கு , தாக்கல் செய்ததில் தவறு ஏற்பட்டது தொடர்பான விதிகளை **தளர்த்துவ**தற்கான அதிகாரத்தையும், வரி செலுத்துபவர்கள் சிலர் வரி செலுத்துவதற்கான உரிய |

| | | |
|---|---|---|
| | | தேதிகளை சரி செய்வதற்கான அதிகாரத்தையும் வாரியத்திற்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br><br>ப்ரொபஷனல்களுக்கான பிரசம்டிவ் வரி, லிமிடெட் லையபிலிடி பார்ட்னர்ஷிப் நிறுவனங்களுக்கு **ப்** பொருந்தாது என்பதை **த்** தெளிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br><br>நிச்சய**த்** தன்மையை அளிப்பதற்காக "லயபில் டு டாக்ஸ்" **"liable to tax"** என்ற பதத்திற்கு வரையறை அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

பட்ஜெட் உரையின் இணைப்பு

A. **சுங்கம் மற்றும் மத்திய தீர்வையில் சட்ட மாற்றங்கள்**

1. **சுங்கச் சட்டம் 1962 இல் கொண்டுவரப்பட்ட முக்கிய சட்ட திருத்தங்கள்:**

| வ. எண் | திருத்தம் |
|---|---|
| A. | **காத்திருக்கும் காலத்தை குறைப்பது மற்றும் பர்த்தகம் புரிவதை எளிதாக்குதல் (வர்த்தக வசதி)** |
| 1. | **சரக்கு** வந்து சேரும் நாளுக்கு , முந்தைய நாளின் இறுதிக்குள் **இறக்குமதிக்கான சட்ட ரீதியிலான ஆவணத்தை தாக்கல்** செய்ய வேண்டிய **தைக்** கட்டாயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது (பிரிவு 46). |
| 2. | இறக்குமதியாளர் /ஏற்றுமதியாளர் சுய திருத்த அடிப்படையில் குறிப்பிட்ட திருத்தங்களை செய்து கொள்ள அனுமதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது வரை எல்லா திருத்தங்களும் அதிகாரியால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்தது (பிரிவு 149). |
| 3. | காகிதமற்ற நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காக , நோட்டீஸ் அனுப்புவது , ஆணை அனுப்புவது போன்றவற்றுக்கு பொதுவான இணையதளம் **ஒன்றுக்கு** அங்கீகாரம் வழங்க **உத்தேசிக்கப்பட்டுள்ளது**, ஒட்டுமொத்த வர்த்தகமும் இந்த டிஜிட்டல் தளத்தை ஒரே முனை தளமாகப் பயன்படுத்தி, சுங்கத்துறையுடன் பல்வேறு விஷயங்கள் குறித்து பகிர்ந்து கொள்ள முடியும். |
| B. | **திறன் மற்றும் பொறுப்பு** |
| 1 | சுங்கச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள் **ள**, நிபந்தனைகளுடன் கூடிய அனைத்து வரி விலக்குகளும் , வேறு விதமாக **க்** குறிப்பிடப்பட்டு அல்லது வித்தியாசமாக அல்லது விலக்கிக் கொள்ளப்பட்டு இருந்தா **லொ**ழிய, இதுபோன்ற சட்டங்கள் விலக்குகள் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் கழித்து வரும் 31 மார்ச் இறுதியுடன் முடிவுக்கு வரும். (சுங்கச் சட்டத்தின் பிரிவு 25) |
| 2. | சில புலனாய்வுகள் நீங்கலாக எல்லாவித **குறிப்பிட்ட சூழ்நிலைகள்** இரண்டாண்டு காலத்துக்குள் முடித்துவிட வேண்டும் என்று காலவரையறை வைப்பதற்கான புதிய |

| | |
|---|---|
| | பிரிவு 28 பிபி ஒன்றை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| C. | **வரி செலுத்துவதை அதிகப்படுத்துவது** |
| 1. | ஏற்றுமதிக்காக உள்ள பொருட்களை **த்** தவறாக உரிமை கோருவது அல்லது ரீ ஃபண்ட் **கோரினால்**, பொருட்கள் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதிய விதிமுறை ஒன்றை கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. (இந்த உட்பிரிவு ஜே ஏ சுங்கச் சட்டம் 113**ன்** கூடுதலாக இருக்கும்) |
| 2. | சுங்கச் சட்டம் பிரிவு 114 ஏ சி **என்ற** புதிய விதிமுறை அறிமுகப்படுத்தப்படும். மோசடி இன்வாய்ஸ் மூலமாக ஏற்றுமதிப் பொருட்களுக்கு **வரிவிலக்கு** வரி**யை திரும்பக் கோருபவர்** மீது அபராதம் விதிப்பதற்கு இந்த உட்பிரிவு வகை செய்யும். |
| E. | **பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் மீது முடிவெடுப்பது** |
| 1. | பறிமுதல் செய்யப்பட்ட தங்கத் **தின் மீதான நடவடிக்கைகளை வழக்கு முடியும் முன்னரே எடுக்கும்** பணியை விரைவுபடுத்துவதற்காக, விசாரணை முறைகளை மாற்றியமைக்க சுங்க**ச்** சட்டம் பிரிவு 110 ல் சட்டதிருத்தம் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

B. **சுங்கக் கட்டணச் சட்டம் 1975 திருத்தங்கள்**

**1.** **:**

| வ. எண் | திருத்தம் |
|---|---|
| A | **சுங்கக் கட்டண ச் சட்டம் 1975ன் முதல் அட்டவணையில் திருத்தம்** |
| 1. | ஹெச் எஸ் என் 2022 சட்ட திருத்தங்களின்படி சுங்கக் கட்டண சட்டத்தின் முதலாவது அட்டவணை திருத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த த் திருத்தங்கள் 01.01.2022 முதல் அமலுக்கு வரும்.<br><br>இவை தவிர சில புதிய கட்டண முறைகள் உருவாக்கப்படுகின்றன |
| B | ஏ டி டி எனப்படும் ஆண்டி டம்பிங் டியூட்டி , (**சந்தை விலையை விட குறைவான விலையில் பொருட்கள் இறக்குமதி ஆகும் போது விதிக்கப்படும் தீர்வை** ) சி விடி எனப்படும் கவுண்டர் வெயிலிங் டியூட்டி (**மானிய விலையில் ஒரு நாட்டிலிருந்து உ ற்பத்தியாகி இங்கே மானியமற்ற விலையில் உற்பத்தி ஆகும் அதே பொருள் விற்பனையை பாதிக்காதிருக்க இறக்குமதிக்கு விதிக்கப்படும் தீர்வை** ) மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான விதிமுறைகளில் திருத்தம் |
| 1. | i) ஏ டி டி , சி வி டி ஆகியவை தொடர்பான விதிமுறைகளில் பின்வரும் திருத்தங்களை க் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது (பிரிவு 9, 9ஏ சுங்கக் கட்டணச் சட்டம் மற்றும் அவை தொடர்பான விதிமுறைகள்):<br><br>ஆன்ட்டி சர்க்கம் **வென்ஷன் (தீர்வை ஏய்ப்பதற்கு எதிரான நடவடிக்கை** ) தொடங்கப்பட்ட நாளிலிருந்து தீர்வை (டியூட்டி) விதிப்பது;<br>ஆன்ட்டி அப்சார்ப்க்ஷன் (**தீர்வையை ஏற்பது என்பதற்கு எதிரான நடவடிக்கை**) விதிமுறைகள்;<br>இந்தத் தீர்வைகளை ஒரே நேரத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு வசூலிப்பது குறித்த பரிசீலனை |

| | |
|---|---|
| | **ஏற்றுமதி உற்பத்தி குழுமங்கள் மற்றும் சிறப்பு பொருளாதார** மண்டலங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்குப் பயன்படுத்தப்படும் , உள்நாட்டு கட்டண **ப்** பகுதியில் கிளியர் செய்யப்பட்ட<br>இடு பொருட்கள் குறித்த ஏடிடி / சிவிடி விதிக்கப்படுவதற்கான சீரான விதிமுறைகள்<br>இத்தகைய ஏடிடி அல்லது சிவிடி தற்காலிகமாக நீக்கப்பட்டால், இதுபோன்று நீக்கப்படுவது , ஒரு சமயத்தில் ஒரு ஆண்டுக்கு மேல் இருக்கக்கூடாது;<br>ஏ டி டி / **சி** வி டி தொடர்பான விசாரணை பரிசீலனை முறைகளி**ன்** இறுதி முடிவுகள் , சம் **ப**ந்தப்பட்ட பொறுப்பு அதிகாரியால், அந்த குறிப்பிட்ட ஏடிடி முடிவடைவதற்கு , குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு முன்னதாக , வெளியிடப்பட வேண்டும் ( 1 ஜூலை 2021 முதல் இது அமலுக்கு வரும்);<br><br>வரிசை எண் 6 ல் உள்ள சட்டத்திருத்தம் **தொடர்பான** விதிமுறைகளிலும் இதர திருத்தங்கள் சுங்கக் கட்டணச் சட்டத்திலும் கொண்டு வரப்படுகின்றன. |
| 2. | பாதுகாப்பு விதிமுறைகள் தொடர்பான டி ஆர் க்யூ **(எண்ணிக்கை அடிப்படையிலான தீர்வை விகிதாச்சாரம்** ) நடைமுறைப்படுத்துவதற்காக உள்நாட்டு தொழில்துறையை பாதிக்கக்கூடிய வகையில் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் குறித்து புலனாய்வு செய்வதற்கான முறைகள் குறித்து விவாதிப்பதற்காக பாதுகாப்பு விதிமுறைகள் திருத்தி அமைக்கப்படுகின்றன. |

**மத்திய எக்ஸைஸ் சட்டம் 1944 ல் திருத்தங்கள**

- ஹெச் எஸ் என் எனப்படும் ஹார்மனைஸ்டு சிஸ்டம் ஆ்ப் நாமண்கிளேச்சர் உலக சுங்க அமைப்பால் பரிசீலிக்கப்பட்ட பிறகு, கூடுதலாக புதிய கட்டண அமைப்புகள்
- விளக்கமளிக்கும் வகையில் , அட்டவணையில், சில சிறிய மாற்றங்கள்

**சுங்க விதிகளில் திருத்தங்கள்:**

சுங்க விதிமுறைகள் 2017 (சலுகை விகிதத்தில் தீர்வை கொண்ட பொருட்களை இறக்குமதி செய்தல் ஐ ஜி சி ஆர்) விதிகள்

வர்த்தகத்தில் நடைமுறைகளை வசதி ப்படுத்துவதற்காக, **பின்வரும் அனுமதிக்கான** மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன

- ஐ ஜி சி ஆர் விதிப்படி இறக்குமதி செய்யப்படும் ( **அரிதான** (**ப்ரெ**சியஸ்) உலோகங்கள் நீங்கலாக) அனைத்து பொருட்கள் தொடர்பான ஜாப் வொர்க்
- ஐ ஜி சிஆர் விதிகளின்படி சுங்கத்தீர்வை தேய்மான மதிப்பின்படி செலுத்தப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட, மூலதனப் பொருட்களை கிளியரன்ஸ் செய்வது

C. **சுங்கத்தீர்வை விகித மாறுதல்கள்**

D.

| வ. எண் | பிரிவு | குறிப்பிட்ட பொருட்கள் | தீர்வை விகிதம் | |
|---|---|---|---|---|
| | | | தொடக்கம் | இதுவரை |
| 1. | வேளாண் விளைபொருட்கள் மற்றும் மீன்வள பிரிவு | பருத்தி | 0 | 5%* |
| | | பருத்திக் கழிவு | **இல்லை** | 10% |
| | | கச்சாப் பட்டு (not thrown)<br>பட்டு நூல்<br>/ பட்டு க் கழிவிலிருந்து நெய்யப்பட்ட இழை | 10% | 15% |
| | | **கலால்வரி ஈர்க்கும்** பொருட்களைத் தயாரிப்பதற்கான டிநேச்சர்ட் எதில் ஆல்கஹால் எத்தனால் | 2.5% | 5% |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இறால் தீவனம் | 5% | 15% |
| | | சிறு உருண்டை வடிவிலான மீன் தீவனம் | 5% | 15% |
| | | மாவு, மீன் உணவு, உணவு உருண்டை, சிறு மீன்கள் மற்றும் இதர நீரில் உள்ள **முதுகெலும்பற்ற** உயிரினங்கள் | 5% | 15% |
| | | சோளத் தவிடு | **இல்லை** | 15% |
| | | புண்ணாக்கு | **இல்லை** | 15% |
| **2.** | இரசாயனங்கள் | கார்பன் பிளாக் | 5% | 7.5% |
| | | பிஸ் ஃபீனால் ஏ | **இல்லை** | 7.5% |
| | | எபிக்ளோரோஹைட்ரின் | 2.5% | 7.5% |
| **3.** | நெகிழி | கட்டுமான நெகிழி பிற இடங்களில் குறிப்பிடப்படாதது அல்லது சேர்த்துக் கொள்ளப்படாதது | 10% | 15% |
| | | பாலி கார்பனேட் | 5% | 7.5% |
| **4.** | தோல் | ஈரமான ப்ளூ க்ரோம் டான் செய்யப்பட்ட தோல் , கிரஸ்ட் தோல் , எல்லா விதமான ஃபினிஷ் டு | **இல்லை** | 10% |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தோல் (ஸ்பிட்டுகள் ஸ்லைடுகள் உட்பட) | | |
| 5. | கற்கள் மற்றும் நகைகள் | பட்டை தீட்டப்பட்ட கியூபிக் ஜிர்கோனியா | 7.5% | 15% |
| | | சின்தடிக் **முறையில்** வெட்டி பாலிஷ் செய்யப்பட்ட கற்கள் | 7.5% | 15% |
| 6. | கேப்பிட்டல் குட்ஸ் மற்றும் இயந்திரங்கள் | **பூமிக்கு அடியில்** துளையிடும் இயந்திரங்கள் | **இல்லை** | 7.5% |
| | | **பூமிக்கு அடியில்** துளையிடும் இயந்திரங்களின் உதிரி பாகங்கள் தொகுதிகள் | **இல்லை** | 2.5% |
| 7. | ஆட்டோ பிரிவு | குறிப்பிட்ட ஆட்டோ பாகங்கள் உதாரணமாக இக்நிசன் வயரிங் செட்டுகள், பாதுகாப்பு கண்ணாடி, சிக்னலிங் கருவி போன்றவை | 7.5%/ 10% | 15% |
| 8. | உலோகப் பொருட்கள் | ஸ்குருக்கள் நட்டுகள் போன்றவை | 10% | 15% |

**விவசாயிகள், எம் எஸ் எம் இ கள் , இதர உள்நாட்டு உற்பத்தியாளர்கள் ஆகியோரின் நன்மைக்காக அடிப்படை சுங்கத்தீர்வைக்கான மாற்றங்கள்** ( 02.02. 2021 **முதல் இது அமலுக்கு வரும்**):

* வேளாண்மை கட்டமைப்பு வளர்ச்சி செஸ் 5 சதவிகிதம் உண்டு

மின்னணுத் துறையில் மதிப்பு கூட்டுத **லை** மேம்படுத்துவதற்காக , சுங்கத் தீர்வை **யில்** மாற்றங்கள் (இது 2.2. 2021 முதல் அமல்படுத்தப்படுகிறது வேறு எ**துவு**ம் குறிப்பிடப்படா விட்டால்)

| வ. எண் | விவரம் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| **1.** | அலைபேசிகளில் குறிப்பிட்ட பாகங்களைத் தயாரிப்பதற்கான இடுபொருட்கள், பாகங்கள் அல்லது உப பாகங்களை உற்பத்தி செய்வது<br>1. பிரிண்டட் சர்க்யூட் போர்ட் **பிசிபி ஏ**<br>2. கேமரா மாட்யூல்<br>3. இணைப்பான்கள்<br>(01.04. 2021 முதல் நடைமுறைப்படுத்தப்படும்) | 0<br>0<br>0 | 2.5%<br>2.5%<br>2.5% |
| **2.** | சார்ஜர் அல்லது அடாப்டர் உற்பத்திக்கான பிரிண்டட் சர்க்யூட் போர்ட் மற்றும் நெகிழி | 10% | 15% |
| **3.** | மொபைல் சார்ஜ **ருக்கான** பிரிண்டட் சர்க்யூட் போர்ட் அசெம்பிளி மற்றும் மோல்டட் நெகிழி அல்லாத இடுபொருட்கள் மற்றும் பாகங்கள் | Nil | 10% |

| | | | |
|---|---|---|---|
| **4.** | லித்தியம் அயான் பேட்டரி மற்றும் பேட்டரி பேக் உற்பத்தி செய்வதற்கான பி சி பி ஏ மற்றும் லி அயான் அணு அல்லாத இடுபொருட்கள், பாகங்கள் , உப பாகங்கள் ( **01.04.2021** முதல் நடைமுறைக்கு வரும்) | **0** | **2.5%** |
| **5.** | குளிர்பதனப் பெட்டி மற்றும் குளிர்சாதனப் பெட்டி ரெப்ரிஜிரேட்டர் ஏர்கண்டிஷனர் ஆகியவற்றுக்கான கம்ப்ரஸர் | **12.5%** | **15%** |
| **6.** | குறிப்பிட்ட இன்சுலேட்டர் வயர்கள் மற்றும் கேபிள்கள் | **7.5%** | **10%** |
| **7.** | டிரான்ஸ்பார்மர்களுக்கான பாபின்கள், பிராக்கெட்டுகள், வயர்கள் போன்ற குறிப்பிட்ட பாகங்கள் | **Nil** | **Applicable Rate** |
| **8.** | எல்இடி விளக்குகள் உட்பட எல்இடி விளக்குகள் மற்றும் அவற்றைப் பொருத்துவதற்கான இடுபொருட்கள் மற்றும் பாகங்கள் | **5%** | **10%** |
| **9.** | சூரியசக்தி இன்வெர்ட்டர்கள் | **5%** | **20%** |
| **10.** | சூரியசக்தி விளக்குகள் அல்லது சூரிய சக்தி | **5%** | **15%** |

| | | | |
|---|---|---|---|
| | லாந்தர்கள் | | |

இன்வெர்ட்டட் டியூட்டி அமைப்பில் திருத்தம் கொண்டு வருவதற்காகவும், இடுபொருட்களின் செலவினத்தை க் குறை **க்கவும்** உள்நாட்டு உற்பத்தியாளர்க **ளால்** பயன்படுத்தப்படும் சுங்கத்தீர்வை கச்சாப் பொருட்கள் மற்றும் இடுபொருட்களில் மாற்றங்கள்

| வ.எண். | இடுபொருட்கள்/கச் சாப்பொருட்கள் (பிரிவு) | குறிப்பிடப்பட்ட பொருட்கள் | தீர்வை விகிதம் | |
|---|---|---|---|---|
| | | | தொடக்கம் | **இதுவரை** |
| **1.** | **பெட் ரோ ரசாயனம்** | **நா:ப்தா** | **4%** | **2.5%** |
| **2.** | துணித் துறை | **காப்ரோலாக்டம்** | **7.5%** | **5%** |
| | | **நைலான் சிப்ஸ்** | **7.5%** | **5%** |
| | | **நைலான் இழை மற்றும் நூல்** | **7.5%** | **5%** |
| **3.** | :பெரஸ் மற்றும் நான் :பெரஸ் உலோகங்கள் | இரும்பு மற்றும் எ:கு உருக்கு கழிவு **ஸ்க்ராப்**, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் **ஸ்க்ராப்** உட்பட **31.3.2022** வரை | **2.5%** | **Nil** |
| | | நா**ண்** அலாய் ஸ்டீல் பிரைமரி மற்றும் செமி பினிஷ்டு **பாதி செய்யப்பட்ட** பொருட்கள் | **10%** | **7.5%** |
| | | நா**ண்** அலாய் மற்றும் அலாய் ஸ்டீல் பொருட்கள் (:பிளாட் பொருட்கள்) | **10%/ 12.5%** | **7.5%** |
| | | நா**ண்** அலாய் ஸ்டெயின்லெஸ் | **10%** | **7.5%** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஸ்டீல் மற்றும் அலாய் ஸ்டீல் பொருட்கள் (**நீண்ட** பொருட்கள்) | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சி ஆர் ஜி ஓ ஸ்டீல் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் கச்சாப் பொருட்கள் | 2.5% | Nil |
| | | காப்பர் கழிவு | 5% | 2.5% |
| 6. | விமானப் பிரிவு | மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் பொதுத்துறை யூனிட்டுகளால் தயாரிக்கப்படும் விமானங்களுக்குத் தேவையான இ **ஞ்சின்**கள் உட்பட இதர பாகங்கள் , தொகுதிகள் | 2.5% | 0% |
| 7. | அரிய உலோகங்கள் | தங்கம் மற்றும் வெள்ளி* | 12.5% | 7.5% * |
| | | தங்க டோர் பார்* | 11.85 % | 6.9% * |
| | | வெள்ளி டோர் பார்* | 11% | 6.1% * |
| | | பிளாட்டினம், பேலிடம் போன்றவை | 12.5% | 10% |
| | | தங்கம், வெள்ளி துகள்கள் (ஃபைண்டிங்ஸ்) | 20% | 10% |
| | | அரிய உலோகங்களின் கழிவு மற்றும் ஸ்கிராப் | 12.5% | 10% |
| | | அரிய உலோகங்கள் கொண்ட, பயன்படுத்தப்பட்ட கேட்டலிஸ்ட் மற்றும் சாம்பல் | 11.85 % | 9.2% |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அரிய உலோக நாணயங்கள் | 12.5% | 10% |
| 8 | கால்நடைத் துறை | **தீவனத்துடன் கலக்கப்படும் பொருட்கள் மற்றும் கலவைக்கு தயாரான பொருட்கள்** | 20% | 15% |

*வேளாண்மை கட்டமைப்பு வளர்ச்சி **செஸ்** 2.5 சதவீதம் என்ற விகிதத்தில்

நுகர்வோருக்கு, பெரும்பாலான பொருட்களை நுக **ர்வ**தில் கூடுதல் சுமை ஏற்படாத வகையில், வேளாண்மை கட்டமைப்பு வளர்ச்சி செஸ் விதிக்கப்படுவது, கீழ்க்கண்ட பொருட்களுக்கான விகிதங்கள் குறைக்கப்பட்டுள்ளன. இந்த பொருட்களுக்கான மாற்றியமைக்கப்பட்ட அடிப்படை சுங்கத் தீர்வை பின்வருமாறு:

| பொருட்கள் | திருத்தியமைக்கப்பட்ட அடிப்படை சுங்க **த்** தீர்வை விகிதம்* |
|---|---|
| ஆப்பிள் | 15% |
| ஆல்கஹாலிக் பானங்கள் அத்தியாயம் 22-**ன்** கீழ் வருபவை | 50% |
| கச்சா சமையல் எண்ணெய் **(பனை**, சோயாபீன்ஸ் சூரியகாந்தி)\ | 15% |
| நிலக்கரி பழுப்பு நிலக்கரி மற்றும் பீட் | 1% |
| குறிப்பிட்ட உரங்கள் யூரியா எம். ஓ. பி, . டி ஏ பி | 0% |
| அம்மோனியம் நைட்ரேட் | 2.5% |
| பட்டாணி, காபூலி சன்னா , கொண்டைக்கடலை, பயறு | 10% |

**இந்தப்** பொருட்களுக்கான செஸ் விகிதங்களை **க்** காண
வேளாண்மை கட்டமைப்பு வளர்ச்சி, பகுதி சி யைப் பார்க்கவும்

பெட்ரோல் மற்றும் டீசல் மீது **வேளா**ண்மை கட்டமைப்பு வளர்ச்சி செஸ் விதிக்கப்பட்டதை **ய**டுத்து, நுகர்வோர் மீது கூடுதல் சுமை பாதிக்காத வண்ணம் , அடிப்படை எக்சைஸ் டியூட்டி மற்றும் சிறப்பு கூடுதல் எக்சைஸ் டியூட்டி எஸ் ஏ இ டி கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. இதையடுத்து பிராண்ட் செய்யப்படாத பெட்ரோல் மற்றும் டீசலுக்கு அடிப்படை **கலால் வரி** லிட்டர் ஒன்றுக்கு முறையே 1.4 ரூபாய் மற்றும் 1.8 ரூபாய் என்று வசூலிக்கப்படும். பிராண்ட் செய்யப்படாத பெட்ரோல் மற்றும் டீச**லு**க்கு எஸ் ஏ **இ** டி முறையே லிட்டர் ஒன்றுக்கு 11 ரூபாய், எட்டு ரூபாய் வசூலிக்கப்படும். பிராண்ட் செய்யப்பட்ட பெட்ரோல் மற்றும் டீச**லு**க்கும் இதே போன்று மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்**தப்** பொருட்களுக்கான **செ**ஸ் விகிதங்கள் குறித்து அறிய வேளாண்மை**க்** கட்டமைப்பு வளர்ச்சி விகிதம் பகுதி சியைப் பார்க்கவும்

விலக்குகளுக்கான பகுப்பாய்வு

| வரிசை எண் | பொருட்களின் பிரிவு | குறிப்பிட்ட பொருட்கள் | தொடக்கம் | **இது வரை** |
|---|---|---|---|---|
| 1. | தாதுப் பொருட்கள் | இயற்கை**யான போரேட் தாது** மற்றும் அவற்றின் **அடர்த்தி மிகு பொருட்கள்** | **இல்லை** /5% | **2.5%** |
| 2. | ரசாயனங்கள் | ஸ்பான்டெக்ஸ் இழை உற்பத்திக்கான மிதைல் டை ஃபீனைல் ஐசோ சயனேட் | **இல்லை** | **7.5%** |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | கைவினைப் பொருட்கள், உடைகள், தோல் ஆகியவற்றி**ன்** ஏற்றுமதி அளவின் அடிப்படையில் டியூட்டி கட்டத் தேவையில்லாத இறக்குமதி செய்யக்கூடிய அனுமதி அளிக்கக் கூடிய பொருட்கள் | பசை, வெனீர் , பாலிஷ், ஹூக்குகள், பொத்தான்கள், ரிவெட்டுகள், **பாட்ஜுகள்**, மணிகள் , வெல்க்ரோ, தையல் நூல் போன்ற பொருட்கள் **தீர்வை** இல்லாமல் இறக்குமதி செய்யப்படும் பொருட்**களா**கும். சென்ற நிதி ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவின் அடிப்படையில் கைவினைப் பொருட்கள் , ஆடைகள், தோல் ஏற்றுமதியாளர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.<br><br>இந்த சலுகைகளுக்கான இறுதி தேதி 31.3.2021 | **இல்லை** | **விதிக்கப்படும் விகிதம்** |

**ஆண்டி டம்பிங் ட்யூட்டி மற்றும் கவுண்டர் வெயிலிங் ட்யூட்டியைத் திரும்பப் பெறுதல்/ தற்காலிகமாக திரும்பப் பெறுதல்/நிறுத்துதல்**

| வ.எண். | குறிப்பிட்ட பொருட்கள் |
|---|---|
| 1. | ஆண்டி டம்பிங் ட்யூட்டி 2..2.2021 முதல் 30.9.2021 வரையிலான காலத்திற்கு தற்காலிகமாக திரும்பப் பெறப்படுகிறது<br><br>(a) சீனாவில் இருந்து உற்பத்தி செய்யப்படும் அல்லது சீனாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் அலாய் ஸ்டீல் நேரான நீண்ட பார்கள் மற்றும் கம்பிகள் மீது 18.10.2018 தேதியிடப்பட்ட அறிவிக்கை எண் 54/2018 - cus (ADD) |

| | |
|---|---|
| | பிரேசில், சீன மக்கள் குடியரசு , ஜெர்மனி ஆகிய நாடுகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் அல்லது அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கோபால்ட் அல்லாத ரக அதிவிரைவு ஸ்டீல் மீது விதிக்கப்பட்டிருந்த 25.09.2019 தேதியிடப்பட்ட அறிவிக்கை எண் 38/2019 Cus (ADD)<br><br>சீன மக்கள் குடியரசு , வியட்நாம் , கொரியா ஆர் பி ஆகிய நாடுகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் அல்லது ஏற்றுமதி செய்யப்படும் அலுமினியம் அல்லது துத்தநாகம் அலாய் பூச்சு கொண்ட , தட்டையான உருட்டையான ஸ்டீல் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட 23.06.2020 தேதியிடப்பட்ட அறிவிக்கை எண் 16/2020 |
| 2. | ஹாட் ரோல்ட் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் மற்றும் கோல்ட் ரோல்ட் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பொருட்களில், சீன மக்கள் குடியரசில் தயாரிக்கப்பட்ட அல்லது அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட குறிப்பிட்ட சில பொருட்களுக்கான இறக்குமதி மீதான கவுன்டர்வைலிங் டியூட்டி 2.2.2021 முதல் 30.9.2021 வரையிலான காலத்திற்கு தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்படுகிறது. இதற்கான ஆணை 7.9. 2017 |

| | |
|---|---|
| | தேதியிடப்பட்ட அறிவிக்கை எண் 1/ 2017Cus (CVD) |
| 3. | இந்தோனேசியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட அல்லது ஏற்றுமதி செய்யப்பட்ட ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பொருட்களுக்கான இறக்குமதி மீது விதிக்கப்பட்டிருந்த புரோவிஷனல் கவுன்டர்வைலிங் ட்யூட்டி 1.10.2020 தேதியிடப்பட்ட அறிவிக்கை எண் 2/2020 Cus CVD தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்படுகிறது. |
| 4. | 11 டிசம்பர் 2015 **தேதி**யிடப்பட்ட அறிவிக்**கை** எண் 61 2015 Customs (ADD) மற்றும் 24 அக்டோபர் 2011 தேதியிடப்பட்ட அறிவிக்கை எண் 52 2017Customs (ADD) படி விதிக்கப்பட்ட ஆண்டி டம்பிங் ட்யூட்டி அந்த கால வரையறை, காலாவதியான **தைய**டுத்து முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்படுகிறது. இந்த அறிக்கைகளின்படி சீன மக்கள் குடியரசு , கொரியா ஆர்பி , ஐரோப்பிய யூனியன், தென்னாப்பிரிக்கா , தைவான் , தாய்லாந்து , யுனைட்டட் ஸ்டேட்ஸ் ஆ்ஃப் அமெரிக்கா ஆகிய நாடுகளில் தயாரிக்கப்படும் அல்லது அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் 600 மில்லி மீட்டர் முதல் ஆயிரத்து 250 மில்லி மீட்டர் வரையிலான அகலம் கொண்ட கோல்டு ரோல்ட் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பொருட்களுக்கும், 1250 மில்லி மீட்டருக்கும் அதிகமான போனஃபைட் பயன்பாடு இல்லாத பொருட்களுக்கும் ஏ டி டி விதிக்கப்பட்டிருந்தது |

இதர சிறு மாற்றங்கள்

| வ.எண் | பொருட்களில் | குறிப்பிட்ட பொருட்கள் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| | பிரிவுகள் | |
| 1. | **இதர அம்சங்கள்** | திரைப்படத் தயாரிப்பாளர்கள் இறக்குமதி செய்யும் தாற்காலிக காஸ்ட்யூம்கள் மற்றும் இதர பொருட்களுக்கு விலக்கு |
| | | சூரிய சக்தி உற்பத்தி த் திட்டங்களுக்கு தேவையான உதவி உபகரணங்கள் , தொகுதிகள், கருவிகள் அனைத்துவிதமான இயந்திரங்களுக்கும் அளிக்கப்பட்ட வி **ல**க்கு நீக்கி கொள்ளப்படுகிறது அறிவிக்கை எண் 1/2011 Cus |
| 2. | **திட்டங்கள் இறக்குமதி** | இதற்கான பலன்கள் அனைத்து அதிவிரைவு ரயில்வே திட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது |
| 3. | **தகவல் தொழில் நுட்பம்/மின்ன ணு** | கணிப்பொறிகளுக்கான பிரிண்டர்களில் பயன்படுத்தப்படும் இங் க் காட்ரிட்ஜ்கள், ரிப்பன் அசெம்பிளி, ரிப்பன் கியர் கேரேஜ் ஆகியவற்றுக்கு விதிக்கப்படும் சலுகை விலையிலான **பி**சிடி விலக்கிக் கொள்ளப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 4. | **பொம்மைகள்** | எலக்ட்ரானிக் பொம்மைகளில் பல்வேறு பாகங்களுக்கு விதிக்கப்பட்ட சலுகை விலையிலான பி சி டி விலை விகிதம்குறித்த **விலக்**க அறிவிக்கையி**ன்** படியான தற்போதைய என்ட்ரிகள் அனைத்தும் ஒரு என்ட்ரி **யாக** மாற்றப்பட்டு, இந்த**ப்** புதிய என்ட்ரி**க்**காக 15 சதவிகித மாற்றியமைக்கப்பட்ட பி சி டி விகிதம் வரையறுக்கப்பட்டுள்ளது. |
| 3. | **தற்போதுள்ள பயன் அடிப்படையிலான விலக்குகளுக்கு பதிலாக ஐஜிசிஆர் அடிப்படையிலான இதர நிபந்தனைகள் .** | சுங்கத் துறையில் வி**லக்குகள்** பெறுவதற்கான பல்வேறு நிபந்தனைகள் தற்போது மாற்றியமைக்கப்பட்டு, சலுகை விலையில் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான ஐ ஜிசி ஆர் திட்டப்படி பின்பற்றப்படும். பல்வேறு தேவைகளும் பயனாளிகளுக்கு தேவையான விலக்குகளை அளிக்கும் வகையில் , எளிமையாக்கப்பட்டு சீரானதாக அமைக்கப்படும். |

**குறிப்பிட்ட பொருட்கள் மீதான வேளாண்மை கட்டமைப்பு வளர்ச்சி செஸ் விதிப்பு 2.2.2021 முதல் நடைமுறைக்கு வரும்**

**குறிப்பிட்ட சில பொருட்களின் மீது வேளாண்மை கட்டமைப்பு வளர்ச்சி செஸ் வசூலிக்கப்படும்**

**சுங்கத் தரப்பிலிருந்து**

| பொருட்கள் | வசூலிக்கப்பட |
|---|---|

| | உள்ள செஸ் (சுங்கம்) |
|---|---|
| **தங்கம், வெள்ளி மற்றும் டோர் பார்கள்** | 2.5% |
| ஆல்கஹாலிக் பானங்கள் அத்தியாயம் 22-ல் கீழ் வருபவை | 100% |
| கச்சா சமையல் எண்ணெய் **பாமாயில்** | 17.5% |
| கச்சா சமையல் எண்ணெய் சோயாபீன்ஸ் சூரியகாந்தி | 20% |
| ஆப்பிள் | 35% |
| நிலக்கரி பழுப்பு நிலக்கரி மற்றும் பீட் | 1.5% |
| குறிப்பிட்ட உரங்கள் (யூரியா **போன்றவை** | 5% |
| பட்டாணி | 40% |
| காபூலி சன்னா | 30% |
| கொண்டைக்கடலை /**சுண்டல்** | 50% |
| பயறு (**மொசூர்**) | 20% |
| **பருத்தி (விதை பிரிக்கப்படாதது**) | 5% |

இந்தப் பொருட்கள் மீதான சுங்க த் தீர்வை விகித ப் பட்டியலை அறிய பகுதி பி யைப் பார்க்கவும். இந்த ப் பொருட்களில் பெரும்பாலான பொருட்களுக்கு நுகர்வோருக்கு எந்தவித கூடுதல் சுமையும் இருக்காது

(A) **கலால் வரி தரப்பில்:**

பெட்ரோல் மீது லிட்டர் ஒன்றுக்கு 2.5 ரூபாய் வேளாண்மை கட்டமைப்பு வளர்ச்சி **தீர்வை** ஏ ஐ டி சி விதிக்கப்பட்டுள்ளது. டீசல் மீது லிட்டர் ஒன்றுக்கு 4 ரூபாய் விதிக்கப்பட்டுள்ளது. ஏ ஐ டி சி அறிவிக்கப்பட்ட பிறகு திருத்தி அமைக்கப்பட்டுள்ள இதர தீர்வைகள் மற்றும் செஸ் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள பகுதி பி யை **ப்** பார்க்கவும். ஒட்டுமொத்தமாக , நுகர்வோருக்கு , எந்தவிதமான கூடுதல் **சுமை**யும் இருக்காது

**சமூக நல்வாழ்வு சர்சார்ஜ் (எஸ் டபிள்யூ எஸ்)**

| | |
|---|---|
| 1. | அனைத்து பொருட்களுக்கும் 10% என்ற அடிப்படையில் ஒரே ஒரு எஸ் டபிள்யூ எ.்.ப் விகிதத்தை வைத்துக் கொள்ளும் வகையில் 2.2.2018 தேதியிடப்பட்ட அறிவிக்கை எண் 12/2018 விலக்கிக் கொள்ளப்படுகிறது<br><br>வேளாண்மை கட்டமைப்பு வளர்ச்சி செஸ் மீதான தீர்வை தங்கம் மற்றும் வெள்ளிக்கு பொருந்தாது. |

E. மத்திய எக்**சை**சில் இதர மாற்றங்கள்:

| | | |
|---|---|---|
| 1. | **கலப்பு எரி**பொருள்:<br><br>M-15 **பெட்ரோல் மற்றும்** E-20 **பெட்ரோல்** | மற்ற **கலப்பு** எரிபொருட்களை **ப்** போலவே இவற்றுக்கும் செஸ் மற்றும் சர் **சார்ஜிலி**ருந்து விலக்கு அளிக்கப்படும். e5 இ 10 போல இந்த **கலப்பு** எரி பொருட்களும் டியூட்டி செலுத்தப்பட்ட இடு பொருட்களை**க்** கொண்டு உற்பத்தி செய்யப்பட்டதாக இருக்க வேண்டும் |

**மத்திய ஜிஎஸ்டி சட்டம் 2017 சி ஜி எஸ் டி சட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி சட்டம் 2017 ஐஜிஎஸ்டி சட்டத்தி ன் விதிகளில் சட்ட ரீதியான மாற்றங்கள்**

சி ஜி எஸ் டி சட்டம் மற்றும் ஐ ஜி எஸ் டி சட்டத்தில் ஜிஎஸ்டி கவுன்சில் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள் , இவை எப்போது அறிவிக்கப்படுகிற**தோ**, அந்த **த்** தேதியில் இருந்து அமலுக்கு வரும். பொதுவாக இவை , மாநிலங்களும் , யூனியன் பிரதேசங்களும் சட்டரீதியாக இதுபோன்ற சட்டங்களை இயற்று**ம் போது** இணைந்து வெளிவரும்

பின்வரும் நடவடிக்கைகள் உட்பட பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

ஆண்டு கணக்குகளை தணிக்கை செய்து **ரிகன்சிலியேஷன்** அறிக்கை வாங்குவது கட்டாயம் என்பது அகற்றப்படும். ஆண்டு தாக்கல்களை சுய சான்றிதழ் அடிப்படையிலேயே தாக்கல் செய்யலாம். 1 ஜூலை 2017 முதல் நிகர **ரொக்கத்தின் மீ து** வட்டி வசூலிக்கப்படும். இவை வரி செலுத்துபவர்களுக்கு வசதியாக இருக்கும்

பொருளை வழங்குபவர் , பொருள் வெளியேறிய விவரங்கள் குறித்த அறிக்கையைக் கொடுத்தால் மட்டுமே அவருக்கான இன்புட் டாக்ஸ் கிரடிட் வழங்கப்படும் புரோவிஷனல் அறிக்கை ஒரு குறிப்பிட்ட காலம் வரை மதிப்பு வாய்ந்ததாக இருக்கும்.

குறிப்பிட்ட சில அம்சங்களுக்கு மட்டுமே ஐ ஜி எஸ் டி செலுத்துவதற்கான தொகைக்கு ஜீரோ ரேட்டிங் கொடுக்கப்படும். வெளிநாட்டு பண வரவு என்பதுடன் அது இணைக்கப்படும். இதுபோன்ற பல நடவடிக்கைகள் பொருட்களைக் கைப்பற்றுவது , பறிமுதல் செய்வது ஆகியவை தொடர்பாக குறிப்பிட்ட சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. விதிக்கப்பட்டுள்ள அபராதத்**தில் 25** சதவிகிதத் தொகையை செலுத்தினால் மட்டுமே மேல் முறையீடு செய்யலாம்

மிக சிறிய தன்மையிலான மேலும் சில மாற்றங்கள் உள்ளன. பட்ஜெட் ப்ரோபோசல் குறித்து விரிவான விளக்க அறிக்கையையும் , அவை தொடர்பான பட்ஜெட் ஆவணங்களையும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்

.......